





2 DEC 1981

# தமிழரசு

16-2-1981 50 காசு.


















26-1-'81

# ஊனமுற்றோர் நல்வாழ்வுக்கு உதவுவோம்



2 DEC 1981

**மாண்புமிகு முதல்வர்**

உடற்குறையுள்ள நமது உடன்பிறப்பு
கள் பால் உலக மக்களின் கவனத்தை ஈர்க்
கும் நோக்கத்துடன் 1981-ஆம் ஆண்டு
அனைத்துலக ஊனமுற்றவர்கள் ஆண்
டாகக் கருதப்பட அறிவிக்கப்பட்டுள்ளது.
உடல் குறையுற்றிருந்தபோதிலும் அவர்களும்
சமுதாயத்தின் பகுதியாக அமைந்து சம
வாய்ப்பினைப் பெறவும், ஆக்கப்பணிகளில்
தங்கள் பங்கைச் செய்யவும் உரிமையுள்ளவர்
களே!

அவர்கள் உடல்குறையுள்ளவர்களாயிருப்
பதால் நாம் நமது அன்பையும் கவனத்தையும்
அவர்களுக்கு அபரிமிதமாக அளிக்க வேண்டிய
வர்களாகிறோம். அவர்கள்பால் தக்க கவ
னம் செலுத்தி அவர்கள் உடல் நிலைக்கேற்ப
சமுதாயப் பணியில் தங்கள் பங்கைச்செய்ய
வகை செய்வது நமது கடமை. அவர்களது
உடற்குறையை மட்டும் எண்ணி அவர்களை
ஒரு சுமையாகக் கருதாமல் அவர்களிடம்
மறைந்திருக்கும் திறமைகளைக் கண்டறிந்து
தக்க ஊக்கமும் வாய்ப்பும் கொடுத்து பயன்
படுத்த முற்பட வேண்டும். அவர்களிலே பலர்
கற்பனை வளம் செறிந்த புலவராகவோ, கை
வண்ணங் கொண்ட ஓவியராகவோ, சொல்
லாற்றல் மிக்க பேச்சாளராகவோ, நுண்ணறிவு
கொண்ட அறிவியல் விற்பன்னராகவோ பரி
ணமிக்கும் ஆற்றலுள்ளவர்களாக இருக்கின்ற
னர். அவர்களுக்குத் தக்க வாய்ப்பளித்து
அவர்களது தனித் திறமையைப் பயனுள்ள
வகையில் வெளிக்கொணர வேண்டும். தகுந்த
வாய்ப்பினைப் பெற்றால் சமுதாய வளர்ச்சிப்
பணியில் அவர்களும் தங்களது பங்கைச் சிறப்
பாகச் செய்வார்கள். எனவே அவர்கள்
செய்யமுடியாததைக் குறித்துக் கவலைப்
படாமல் அவர்களால் செய்யக்கூடியதைக்
கண்டறிய முயல்வோம்.

உடல் ஊனமுற்றோரின் வாழ்க்கை மேம்
பாட்டுக்குத் தமிழக அரசு பல அரிய திட்டங்
களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.
ஆனால் அரசின் நிர்வாக அமைப்பு மட்டுமே
இவர்களின் எல்லாத் தேவைகளையும் உட
னடியாகப் பூர்த்தி செய்வது கடினம். ஒவ்
வொரு தனிமனிதனும், பொதுத்தொண்டு
நிறுவனங்களும், அரசியல் அமைப்புகளும்
தொழில் நிறுவனங்களும் இந்த முயற்சியில்
முழுமனதோடு தங்களை ஈடுபடுத்திக்கொள்ள
வேண்டும். அனைத்துலக ஊனமுற்றோர்
ஆண்டான இந்த ஆண்டின் தொடக்கத்தில்
ஊனமுற்றவர்கள்பால் ஒரு தெளிவான
கருணை மிக்க மனப்பான்மையை வளர்த்துக்
கொண்டு அவர்களது மறுவாழ்விற்கான
முயற்சிகளில் உறுதுணைபுரியுமாறு உங்கள
னைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.


**தமிழரசு**

மலர் : 11 இதழ் : 16

16. 2. 81



**அட்டை சொல்லும் கட்டுரை**

# ஊனமுற்றோர் ஆண்டில் உயரிய திட்டங்கள்!

மாண்புமிகு
சமூக நலத்துறை அமைச்சர்
திருமதி. **கோமதி சீனிவாசன்**

'பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆழ்வினை யின்மை பழி'
—என்பது திருக்குறள்.

எனவே, உடல்ஊனம் என்பது யாருக்கும் மாற்றமுடியாத குறையோ, மறைக்கமுடியாத பழியோ ஆகிவிடாது.

தங்கம் வளைந்தாலும் தரத்தில் குறையாது, சிங்கம் முடமானாலும் சீற்றம் தணியாது அல்லவா?

உடல் ஊனமுற்றோர், தாம் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக உயரமுடியாதவர்களாக தமக்குத் தாமே கருதிக்கொள்ளும் தாழ்வு மனப்பான்மையினை நீக்கிக்கொண்டாக வேண்டும் முதலில். ஏனென்றால்'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடினாரே இராமலிங்க அடிகள் — அப்படிச் செயல்பட்டுவரும் மாண்புமிகு புரட்சித் தலைவர் 'அவர்களின் அரசு அமைந்துள்ள நாடு இது!

எந்த வகையிலானாலும் சரி, இன்னலுற்றார்க்கு இதய பூர்வமான அன்பும் ஆதரவும் காட்டிடும் அரசு இது. அதிலும் குறிப்பாக உடல் ஊனமுற்றோர்க்குத் தமிழக அரசு அளித்து வரும் ஊக்கமும் உதவியும் அளவிடற்கரியதாகும்.

இந்திய நாட்டில் உள்ள உடல் ஊனமுற்றோரின் எண்ணிக்கை ஏறத்தாழ ஒருகோடி இருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தமிழகத்திலோ கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் பேர் அப்படியிருக்கிறார்கள்.



## நமது கடமை

உடல் ஊனம் குறித்த அவர்களுடைய மன ஊனம் நீக்கி மகிழ்வடையச் செய்வது நம்போன்றவர்களின் கடமையாகும். இந்த 1981ஆம் ஆண்டு, ஐக்கியநாடுகள் பொதுக் குழுவினாலே உலக உடல் ஊனமுற்றோர் ஆண்டாக அறிவிக்கப் பட்டுள்ளதைத் தொடர்ந்து, உடல் ஊனமுள்ளோர்பால் நமது கவனிப்பின் அளவு விரிவடைகின்றது.

ஊனமுற்றோரின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக அரிய பல திட்டங்களைத் தீட்டிடும் தமிழக அரசு கடந்த ஆண்டிலே கூட அதற்கென 79.12 இலட்ச ரூபாய் ஒதுக்கிச் செலவிட்டது. இந்த ஆண்டு அந்தத் தொகையின் அளவு அதிகமாக்கப்படும்.

இரண்டு கால்களும் ஊனமுற்றோர்க்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல், காது கேளாத பள்ளிச் சிறார்க்குச் செவிப் புலன் கருவி அளித்திடல், நான்காம் படிவம் முதல் பட்ட மேற்படிப்பு வரை பயிலும் உடல் ஊனமுற்ற மாணவச் செல்வங்களுக்கு 40 ரூபாயிலிருந்து 125 ரூபாய் வரை உதவித்தொகை அளித்தல்; ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் தொண்டுநிறுவனங்களுக்கு -குழந்தை ஒன்றுக்கு மாதம் ரூ. 30 வீதம் மானிய உதவி தரல்; ஊனமுற்றோர் நலனுக்காகத் தொண்டாற்றிடும் நிறுவனங்களுக்குக் கட்டடம்கட்ட இயந்திரங்கள் வாங்க மானியம் அளித்தல் போன்ற வகைகளில் இந்த அரசு ஆண்டு தோறும் ஆர்வத்தோடு அரும் பணியாற்றி வருகிறது.

இவை மட்டுமல்ல—

கண்பார்வையற்ற மகளிருக்குத் தொழிற் சாலையுடன் கூடிய மறுவாழ்வு இல்லம்அமைப்பது; உடல் ஊனமுற்றோர்க்கு ஊன்றுகோல் போல் பயன்படும் ஆசிரியப் பெருமக்களுக்குத் தக்க பயிற்சியளித்தல் ;அங்கம் குறைவடைந்து அனாதரவான நிலையில் 45 வயதிற்குமேலே

### இசைபட வாழ்வோம் !

தமிழர்கள் தங்களுடைய வாழ்வை இசையோடு அமைத்துக் கொண்ட பெருமை உடையவர்கள் — பிறந்ததும், தாலாட்டுப் பாடலைக் கேட்டே வளர்கிறோம். இறந்த பின்னரும் ஒப்பாரி இசை. இப்படி வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தமது வாழ்வை இசையோடு இணைத்துக் கொண்டவர்கள் தமிழ்நாட்டவர்களாகிய—தமிழர்களாகிய நாம்தானேதவிர வேறு யாருமில்லை !

—இராம. வீரப்பன்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்

[5-1-81 மதுரையில் ஆறுமுக நாவலர் சிலைத் திறப்பு விழாவில் பேசியது.]

நலிவுற்றிருப்பார்க்கு மாதம் ரூ. 25- உதவித் தொகை அளித்தல்; ஊனமுற்ற ஆண்களுக்கு முட்டுக்காட்டிலும், பெண்களுக்கு 'ஸ்திரீ சேவா மந்திரி'லும் தொழிற்பயிற்சி கொடுத்தல்; பார்வையற்றோர்க்கும் காதுகேளார்க்கும் தனித் தனியே பள்ளிகள் நடத்துதல்; ஊனமுற்றோர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், குறைந்த வட்டியில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடனுதவி பெற உதவிடலும், பெட்டிக்கடை நடத்த உதவுதலும்; அரசு நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் பணியாற்றிடும் ஊனமுற்ற மனுதாரர்க்கு ஓராண்டுக் காலத்திற்கு ரூ.150 வீதம் உதவிப் பணம் கொடுத்தல்; செயற்கை உறுப்புகள், நடக்க இயலாத சிறார்க்கு இரும்புக் கவசமிட்ட காலணிகள் வழங்குதல்; கடுமையாக ஊனமுற்ற மனுதாரர்க்கு ஆயிரம் ரூபாய் மானியம் அளித்தல் ஆகிய பல வகைகளிலும் உடல் ஊனமுற்றார்க்கு உதவி பல புரிந்து வருகிறது தமிழக அரசு.

## அரிசி, துணிமணி

பார்வையற்ற பாவையர்க்கு மறுவாழ்வு இல்லம் வைத்து ஆறுமாத காலம் பல்வேறு தொழில்களில் பயிற்சியளித்து வருகிறோம். பயிற்சிக்காலத்தில் உதவித்தொகை அளித்து வருகிறோம். பயிற்சிக்காலம் முடிந்த பின்னாலே, நாங்களே அவர்கள் பணிபுரிந்திட வாய்ப்பளித்து வருவாய்க்கு வகை செய்கிறோம். வெளியே போய்ப் பணியாற்றிட அவர்கள் விரும்பினாலும் அனுமதிக்கிறோம்.

உதவித்தொகை பெற்று வரும் ஊனமுற்றோர்க்கு, வாரம் ஒரு கிலோ அரிசியும், ஆண்டுக்கு இரண்டு முறை வேட்டி சேலைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

79-80ல் பெட்டிக்கடை வைக்கப் பெரு விருப்புற்ற 140 ஊனமுற்றவர்களுக்கு ரூ 500 வீதம் மானியம் வழங்கிய இந்த அரசு, இந்த ஆண்டின் துவக்கத்திலேயே மேலும் 85 பேருக்கும் அவ்வகை உதவி புரிந்து வங்கிகள் அவர்களுக்குக் கடன்தரவும் சிபாரிசு செய்திருக்கிறது. ஊனமுற்றோர்க்கு 1000 பெட்டிக்கடைகள் அமைத்திட உதவுவது அரசின் குறிக்கோள்.

இந்த ஆண்டு, உடல் ஊனமுற்றோர் ஆண்டு என்பதாலே மேற்கண்ட அளவுகளை — எண்ணிக்கைகளை மேலும் விரிவாக்குவது பற்றி ஆலோசித்து வருகிறோம்.

## எதிர்காலத் திட்டங்கள்

ஊனமுற்றோர்க்கான தொழிற்பயிற்சி மையங்கள் இன்னும் நிறுவலாமா, பயிற்சி பெறும் ஆசிரியர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கலாமா, கண்பார்வையற்று பிறர் உதவியின்றி வாழ இயலாத நிலையிலிருப்பார்க்கு வீட்டுவசதி அளிப்பது சரிப்படுமா, 'உடல்' ஊனமுற்றவர்க்குப் பேருந்துகளில் தனி இடம் ஒதுக்கலாமா, ஊனமுற்றோரை மணக்க முன் வருவார்க்கு அரசு மூலம் அரிய பரிசொன்று அளிக்கலாமா-என இப்படிப் பல திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திட்டங்களும் பயன்களும் உரியவர்களைப் போயடைய வேண்டும் என்பதிலே பேரார்வம் கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மிக விரைவிலேயே அவ்வாறான அரியபல திட்டங்கள் பற்றி அறிவிக்க இருக்கிறார்கள்.

உடல் ஊனமுற்ற உடன் பிறப்புகளுக்கு இவ்வாறான உயரிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நம்முடைய அரசு இதுவரை மத்திய அரசின் உதவியையோ, உலக வங்கியின் உதவியையோ கோரிடவில்லை. ஆகவே இத்திட்டங்களைச் செயல்படுத்திட தமிழ் நாட்டிலே உள்ள நலப்பணியார்வம் மிக்க தொண்டு நிறுவனங்களும், தயாள சிந்தை கொண்ட தனிநபர்களும் தங்கள் ஆதரவையும் முழு ஒத்துழைப்பையும் இந்த அரசுக்கு அளித்திட முன்வருவது உடல் ஊனமுற்றோர் ஆண்டின் நோக்கம் தேக்கமற நிறைவேற உதவுவதாகும்!

## ஒப்பரிய தமிழகம்!



பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு ஒரு கூட்டத்தில் தரப்பட்ட வாழ்த்திதழில் 'ஒப்பரிய தமிழகத்தைச் செப்பனிட வந்தவரே' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. தான் பேசும்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்:

'ஒப்பரிய தமிழகத்தைச் செப்பனிட வந்தவரே' என்று வாழ்த்தி வரவேற்றிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. ஆனால் எனக்கொரு சந்தேகம். தமிழகம் ஒப்பரியதாக இருக்குமானால் அதை ஏன் செப்பனிட வேண்டும்? நீங்கள் அப்படி எழுதியிருப்பதை நான் எப்படி நினைக்கிறேன் தெரியுமா? ஒருகாலத்தில் ஒப்பரியதாக இருந்தது தமிழகம்; பிறகு சீர்குலைந்துவிட்டது பல காரணங்களால். அதை நீதான் செப்பனிட வேண்டும் என்று இதன் மூலம் எனக்கு உணர்த்தியிருக்கிறீர்கள் என்றே நினைக்கிறேன். அவசியம் செப்பனிடுவேன்.

மாண்புமிகு தமிழக அரசு சிறப்புப் பிரதிநிதி

**மா. முத்துசாமி.**

(5-1-81 அன்று மதுரையில் ஆறுமுக நாவலர் சிலை திறப்பு விழாவில் பேசியது.)



# உங்கள் கடமை

## மக்கள்தொகைக் கணக்கெடுப்பு-

### 9-2-81 முதல் 5-3-81 வரை

அண்மை இந்திய வரலாற்றில், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தந்த புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றில் இடம் பெறத்தக்க முடிவுகள் எடுக்கப்பட்டன. மத அடிப்படையில், மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 1947-ல் பிரிவினையும், ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் தொகுதிகளை மாற்றியமைத்தலும், ஷெட்யூல்டு சாதியினர்-பழங்குடியினருக்கான தனித் தொகுதிகள் அமைப்பு, மொழி கணக்கெடுப்பின் அடிப்படையில் 1956-ல் மொழிவாரி மாநிலப் பிரிவினை ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

சரியான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்று என்றால் அது மிகையாகாது. முன்பெல்லாம் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்பது இராணுவத்தின் அளவை அறியவே பயன்பட்டது. தற்போது நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளின் அளவு, வாக்களிப்போரின் எண்ணிக்கை ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள இக்கணக்கெடுப்பு உதவுகின்றது.

பொருளாதாரத்தில் மக்கள் தொகைக்கணக்கெடுப்பு ஒரு முக்கிய அம்சமாகும். மக்கள்தொகையின் மொத்த அளவு, தொழிலாளர்களின் எண்ணிக்கை போன்றவை இல்லாமல், தேசிய வருமான புள்ளிவ்வரம் முற்றுப் பெறாது. தனிநபர் வருமானத்தையும் கணக்கிட இயலாது. தனிநபர் வருமானம், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் தொகை, வட்டாரம், பொருளாதார ஏற்றத் தாழ்வு, வேலையின்மையின் அளவு, குடிபெயர்வோர் தன்மை, நகரியமாக்கும் சூழல் போன்றவை மக்கள் தொகைக் கணக்கெடுப்பினை அடிப்படையாகவே கொண்டுள்ளன.

### சமூக நிலை

நவீனச் சூழ்நிலையில், கணக்கெடுப்பின் சமூக நோக்கு மிகவும் அவசியம். பிறப்பிலும், பின் பல நிலைகளிலும் சமூக முன்னேற்றத்தில் பிரதிபலிக்கும் வாழ்க்கையின் எதிர்பார்ப்புகள் மற்றும் சுகாதார வளர்ச்சி (அல்லது சீர்கேடு)யைக் கணக்கெடுப்பு கணக்கிடுகின்றது

சமுதாய வளர்ச்சியின் அளவுகோலாக பெண்கள் கல்விவீதம் கருதப்படுகிறது. மணமாகும் போது வயது, பிறப்பு மற்றும் இறப்பு வகை, குறிப்பாக குழந்தை மரணம் குறித்த விவரங்களறிய கணக்கெடுப்பு உதவுகின்றது.

உலகெங்கிலும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்கிற தாகம் இருந்து வருகிறது. குழந்தை மரணம், வாழ்க்கையில் பிறப்பு மற்றும் கல்வி குறித்த எதிர்ப்பார்ப்புகளின் புள்ளி விவரத்தை அடிப்படையாகக் கொண்டே வாழ்க்கையின் உடல் நிலை புள்ளிவிவரம் உள்ளது. குடும்பக் கட்டுப்பாடு முறை பயன்படுத்தப்பட்டு வரும் புள்ளிவிவரத்தை மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூலம் அறிய இயலாதெனினும் மக்கள்தொகைப் பெருக்க வீதத்தில்-ஒவ்வொரு பத்தாண்டுகளிலும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் பாதிப்பு குறித்து மக்கள்தொகைக் கணக்கெடுப்பு சரியான புள்ளிவ்வரங்களைத் தருகின்றது. சொல்லப்போனால், மக்கள்தொகை கொள்கையின் அனைத்த'த்துறைகளும் கணக்கெடுப்பையே பெரிதும் நம்பி உள்ளன.

தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் தீவிரக்குடும்பக் கட்டுப்பாடு அமலினால், மக்கள்தொகை குறைந்து நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கைகுறைக்கப்பட்டு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தின. குடும்பக் கட்டுப்பாடின் விளைவுகளைப் பற்றி அரசியல் ரீதியில் ஒரு தப்பெண்ணம் ஏற்பட இது வழிகோலியது. 2000-ம் ஆண்டுவரை, நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்திற்கு 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்ற தேசிய மக்கள்தொகைக் கொள்கையை 1976-ஏப்ரலில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து இந்தத் தப்பெண்ணம் அகன்றது.



இந்தியா போன்ற பெரிய நாடுகளில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது ஒரு பிரம்மாண்டமான பணி என்பதை நாம் மறக்கக்கூடாது. வரும் மார்ச் மாதம் 1-ம் தேதியை பார்வை நாளாக வைத்து எடுக்கப்பெறும் கணக்கெடுப்பு உலகிலேயே மிகப் பெரிய இயக்கமாகும். நாடெங்கிலும் 1.25மிலியன் கணக்கெடுப்பாளர்கள் இதில் ஈடுபட இருக்கின்றனர். 5,200 டன் எடையுள்ள 8900 மிலியன் பாரங்கள் அச்சிடப்படும்.

1881-லிருந்து தடையின்றி மக்கள்தொகைக் கணக்கெடுப்பை தொடர்ந்து நடத்தி வருவது இந்திய நாட்டின் வரலாற்றின் பெருமைக்குரிய அம்சமாகும். மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் கணக்கெடுப்பின் பரப்பளவு விவரமான அட்டவணைகள், வீதங்களின் பிரிவுகள் போன்றவற்றை வைத்துப் பார்த்தால், இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு உலகில் வளரும் நாடுகளின் கணக்கெடுப்புகளிலேயே மிகச் சிறந்தது என்பதும் முன்னேறிய நாடுகளுக்கு இணையாக வைத்து உயர்வாகப் பேசப்படக்கூடியது என்பதும் புலனாகும்.

1981-ஆம் ஆண்டு நடக்கருக்கும் மக்கள் தொகைக்கணக்கெடுப்பு நாடுசுதந்திரம்அடைந்தபின் நடைபெறும் நான்காவது கணக்கெடுப்பாகும். 1951, 1961 கணக்கெடுப்புகளில் பிரிட்டிஷார் பின்பற்றி வந்த சாதி அடிப்படை கணக்கெடுப்பு தவிர்க்கப்பட்டு, பொருளாதார நோக்கில் மக்கள்தொகை கணக்கில் கொள்ளப்பட்டது.

மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சாதிக்குச் சிறிய இடமே தரப்பட்டு, ஒப்பிட்டுப் பார்ப்பதில், சாதிக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. 1961 கணக்கெடுப்பில் வீட்டு அட்டவணையை அறிமுகப்படுத்தியதன் மூலம், வளரும் நாடுகளுக்கு ஒரு புதிய கணக்கெடுப்பு முறை அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. குடிதண்ணீர் வசதி, மின்சாரம், நகரங்களில் மட்டும் கழிவறை வசதிகள், சொந்த நிலம், வீடு, வீட்டுமனை, குடியிருப்பு விவரங்கள் போன்றவை வீட்டுஅட்டவணையில் சேர்க்கப்பட்டு 1981 கணக்கெடுப்பு விரிவானதாக நடைபெற இருக்கின்றது.

## பல நோக்கு கேள்விகள்

வீட்டில் வாழ்ந்து வரும் மணமான தம்பதியர் எண்ணிக்கை குறித்தும் 1981 வீட்டு அட்டவணையில் சேர்க்கப்படும். வீட்டு வசதிப் பிரச்சினையின் தன்மையைத் தெரிந்து கொள்ள இந்த விவரம் உதவும்.

1981 சர்வதேச ஊனமுற்றோர் ஆண்டை ஒட்டி வீட்டில் ஊனமுற்றோர் எவராவது உள்ளனரா? ஆமெனில் கண்ணிழந்தோர், முடமானவர்கள், வாய் பேச இயலாதோர் எத்தனைப் பேர்? என்ற ஒரு புதிய கேள்வியும் வீட்டு அட்டவணையில் இடம் பெறும்.

தனிப்பட்டவர்கள் பற்றிய குறிப்பில் பல புதிய கேள்விகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கணக்கெடுப்பில் சேர்க்கப்பட்டவர் கல்லூரி அல்லது பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கின்றாரா என்ற கேள்வியின் மூலம் கல்வி புள்ளி விவரங்களோடு, எழுத்தறிவுள்ளவர்கள் எண்ணிக்கையைச் சரிபார்க்க இயலும்.

இன்னொரு புதிய கேள்வி :

''வேலை தேடிக்கொண்டிருக்கின்றீர்களா அல்லது வேலை செய்யத் தயாராக இருக்கின்றீர்களா ? உண்டு,இல்லை.''

1951 கணக்கெடுப்பில் சில மாநிலங்களில் மட்டுமே வேலையின்மை பற்றிய கேள்வி கேட்கப்பட்டது. 1961, 1971 கணக்கெடுப்புகளிலும் வேலையின்மை குறித்து ஒரு விருப்பக் கேள்வியாகவே சில மாநிலங்களில் மட்டும் கேட்கப்பட்டது. 1961, 1971 கணக்கெடுப்புகளில் வேலையில்லாத் திண்டாட்டம் குறித்து நேரடிக் கேள்வி எதுவும் கேட்கப்படாவிடினும், வேலை செய்யாதவர்கள் குறித்து விவரத்தைக் கொண்டு புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்பட்டன.

சுருக்கமாகச் சொன்னால், 1981 கணக்கெடுப்பு இளைஞர்களின் பிரச்சினையான கல்லூரி-பள்ளி வருகை குறித்தும், வேலை தேடிக்கொண்டிருப்போர் குறித்தும் விவரங்களைச் சேகரிக்கும்.

கணக்கெடுப்பு வேலைப் பளுவைக் குறைக்கவும், மேலும் விவரமான தகவல்கள் சேகரிக்கவும் வசதியாக மாதிரி முறை அறிமுகப்படுத்தப்படும். பிறந்த இடம், கடைசியாகக் குடியிருந்த இடம், குடியிருந்த காலம் போன்றகேள்விகள் மாதிரி அடிப்படையில் கேட்கப்படும். குடிபெயர்ந்ததற்கான காரணம் (வேலை வாய்ப்பு, கல்வி, குடும்பம் இடம் பெயர்ந்ததால் திருமணம், வேறு காரணம்) என்ற புதிய கேள்வியும் இடம் பெறும். மாதிரி அடிப்படையில் மணமான பெண்கள் குறித்து (சமீபத்தில் திருமணமானவர், திரும்ணமாகி விவாகரத்து செய்தவர், விதவை) கேள்விகள் கேட்கப்படுவதும் புதிய அம்சமாகும். அவர்களுக்குப் பிறந்த தற்போது உயிரோடு இருக்கும் ஆண்/பெண் குழந்தைகள் எத்தனை என்ற கேள்வியும் இடம் பெறும். நாட்டில் பிறப்பு இறப்பு வகைகள் குறித்த முழுத் தகவலும் இந்த புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டபின் தெரியவரும்.

## அனைவரின் ஒத்துழைப்பு அவசியம்

முடிவாக எந்த கணக்கெடுப்பிலும் சில தவறுகள் நேர வாய்ப்புண்டு என்பதை நாம் நினைவில் இருத்த வேண்டும். கணக்கெடுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள விரும்புவோரும் இருப்பர். இரண்டு முறை தங்களை கணக்கெடுப்பில் ஈடுபடுத்துக் கொள்பவரும் உண்டு. ஏதாவது கேள்விக்கு தெரிந்தோ தெரியாமலோ தவறான பதில்களைத் தருபவர்களும் உண்டு. தவறுகளை பெருமளவுக்கு குறைக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமான அம்சம். நாட்டின் அனைத்து குடிமக்களின் ஒத்துழைப்பும் இருந்தால் மட்டுமே, இது சாத்தியம்.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்



## 16—1—81

சென்னை—பல்லாவரத்தில் நகராட்சியின் சார்பில் மிகப் பெரிய விளையாட்டுத் திடல் ஒன்று அமைக்கப்படும் என்று—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

## 17—1—81

பழைய பேருந்துகளை இனி ஏலம் விடுவதில்லை. அவற்றைத் திருத்தியமைத்து மினி பேருந்துகளாக விடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் தெரிவித்தார்.

## 18—1—81

தமிழகத்தின் கிராமப்பகுதிகளிலுள்ள 77 இலட்சம்—குடும்பத்தினர் பயன் அடையும் வகையில் ரேசன் சர்க்கரையின் அளவை பிப்ரவரி முதல் உயர்த்த தமிழக அரசு ஆலோசித்து வருகின்றது.

## 19—1—81

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழக அரசு முதியோர் உதவித்தொகை பெறுவோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகள் ஆகிய 8,144 பேருக்கு தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இலவசமாக அரசாங்கத்தின் சார்பில்—வழங்கப்பட்டது.

## 20—1—81

வேலைத் தேடித்தரும் நிறுவனத்தில் 10 இலட்சத்து 74 ஆயிரம் பேர் பதிவு செய்து கொண்டுள்ளனர். பதிவுசெய்து கொண்டுள்ளோரில் சுமார் 50 ஆயிரம் பேருக்கு அரசுப்பணிகளில் வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகின்றது என்று வேலைவாய்ப்புத்துறை இயக்குநர் திரு எம். வைத்தியலிங்கம் கூறினார்.

தொகுப்பு:

## 21—1—81

தர்மபுரி மாவட்ட நிவாரணப் பணிகளுக்கு உடனடியாக ரூ. 10 இலட்சம் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.

## 22—1—81

இன்ஸ்பெக்டர்கள், உதவி இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருக்கு ஒரு சங்கமும், கான்ஸ்டபிள்களுக்கு ஒரு சங்கமுமாக இருந்தது. ஒரே சங்கமாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலித்து சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியுள்ளது.

நெல், அரிசி மொத்த வியாபாரிகளுக்கு லெவி விதித்து அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது.

1985-ஆம் ஆண்டுக்குள், தமிழகத்தில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர் சப்ளைக்கான திட்டங்கள் நிறைவேற்றப்படும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளர் திரு. ஆர். கிருஷ்ணசாமி கூறினார்.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்குச் சொந்தமான காவிரி நூற்பாலை, சோமசுந்தரம் நூற்பாலை ஆகிய இரண்டும் 1978-79 இல் 32 இலட்சம் லாபம் ஈட்டியுள்ளதாக அரசு அறிவித்து உள்ளது.

## 23—1—81

மாநிலம் முழுவதும் மலைவாழ் மக்கள் நலனுக்காக ரூ. 135 இலட்சம்செலவிடப்படும் என்று மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர் திரு. எஸ். விஜயசாரதி அவர்கள் கூறினார்.

1980—'81-ஆம் ஆண்டில் அரிசனங்களுக்கு இலவசமாக 5 ஆயிரம் வீடுகள் கட்டித்தர அரசு முடிவு செய்துள்ளது.

## பார்த்தோம்! படித்தோம்!

தமிழக முதல்வரின் முத்தான படத்துடன் வெளியிட்ட காலண்டர், தமிழ் மக்களுக்குக் கிடைத்த பொங்கல் பரிசாகும்!

—அ. சேக்மைதீன்,
வத்தலக்குண்டு.

உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலரில், தமிழன்னை பிள்ளைத் தமிழ் சுவையாக இருந்தது.

—ஆர். ஜி. துரைராஜு,
கீழப்பழுவூர்.

சங்ககாலத் தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டியது, உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப் பிதழ்.

—ச. புகழேந்தி,
திருவையாறு.

உலகத் தமிழ் மாநாட்டுச் செய்தித் தொகுப்புகள்—படங்களைக் கண்ட எனக்கு, மாநாட்டுக்குப் போய் வந்த உணர்வு ஏற்பட்டது.

—ப. மூர்த்தி,
பெங்களூர்.

தமிழ்த்தாய் முகப்புடன் வந்த இதழ் என் உள்ளத்தைக் கவர்ந்தது.

—சொ. முத்தமிழ்வாணன்,
தஞ்சாவூர்.

அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள் பகுதி அருமை.

—பு. இளங்கோ,
திருவையாறு.

மாணவர் பக்கத்தில் 'அறிவுப் போட்டிகள்' வெளியிட வேண்டும்.

—த. ஹசீனாஜான்,
ஊத்தங்கரை.

வடார்க்காடு மாவட்டம், இராணிப் பேட்டையில் பாய்லர் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தி மத்திய அரசு ஒப்பு தல் அளித்துள்ளது. இத்தொழிற்சாலை ரூ. 21 கோடியே 59 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்படும். இத்தொழிற் சாலை மூலம் ஏறத்தாழ 4 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும்.

### 24—1—81

1971 முதல் 1977 ஆண்டு வரை 15 ஆயிரத்து 365 சிறுதொழில்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும், 1978 முதல் 1980 வரை 14 ஆயிரத்து 736 சிறுதொழில்களுக்கு அனுமதி வழங்கப் பட்டதாகவும் மாண்புமிகு கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார்.

விவசாயிகள் பிரச்சனைகள், விலை நிர்ணயம் ஆகியவைகளை ஆராய்ந்து விரைவில் ஆலோசனை கூற அனைத்து விவசாயச் சங்கப் பிரதிநிதிகள், அலுவலர்கள் கொண்ட ஒரு குழுவை நியமிக்கத் தமிழக அரசு முடிவு செய்துள் ளது.

### 25—1—81

இந்தியாவில் முதன் முதலாக சென்னையில் அச்சுத் தொழில் கல்லூரி ஏற்படுத் தப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தெரிவித்தார்.

### 26—1—81

மாதம் ரூ. 75 உதவித்தொகை பெறும் 1200 கலைஞர்களின் உதவித்தொகையை ரூ.150 ஆக உயர்த்துவது பற்றி அரசு பரி சீலித்து வருவதாக மாண்புமிகு நிதி யமைச்சர் நாவலர் திரு. இரா. நெடுஞ் செழியன் அவர்கள் கூறினார்.

### 27—1—81

வறுமையில் வாடும் வயது முதிர்ந்தவிளை யாட்டு வீரர்கள் 25 பேர்களுக்கு 3 ஆண்டு காலத்திற்கு ஒய்வு ஊதியம் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. தற் பொழுது வழங்கும் ரூ. 75ஐ ரூ. 200 ஆக உயர்த்த அரசு பரிசீலித்து வரு கிறது என்று மாண்புமிகு கல்வி அமைச் சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் கூறினார்.

### 28—1—81

சுதந்திரப் போராட்ட வீரர் சுப்ரமண்ய சிவாவின் நினைவுச் சின்னம் அமைப்ப தற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது என்று மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் கூறி னார்.

### 29—1—81

''அரசு நூலகங்கள் தேவநேயப் பாவாணர் என்ற பெயரில்மாற்றப்படும்' என்று மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் கூறினார்.

### 30—1—81

இராமநாதபுரம் மாவட்டத்தில்அர்ச்சுனா நதி நீர் கண்மாய்ப் பகுதியில் தண்ணீர் பாயாத ஆண்டில் நிலவரி, தண்ணீர் தீர்வை ஆகியவைகள் ரத்து செய்யப் பட்டன என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோம சுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.

### 31—1—81

தமிழ்நாடு பால்வள நிறுவனம் 1-2-'81 முதல் தமிழ்நாடு பால் உற்பத்தியா ளர்கள் கூட்டுறவு இணையமாக மாற் றம் அடையும் என்று அரசு அறிவித்துள் ளது.

# வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு

# வேளாண்மைத் தொழில்கள் இணையத் தலைவர் திரு லியாகத் அலிகான் பேட்டி

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையத் தலைவர் திரு. கா. லியாகத் அலிகான் அவர்கள் 'தமிழரசு' இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டி : வினாவும் விடையும் கீழே தரப்பட்டுள்ளன.

**வேளாண்மைத் தொழில்கள் இணையம் எப்போது தொடங்கப்பட்டது. அதன் நோக்கம், பணிகள் என்னென்ன?**

இணையத்தின் முக்கிய நோக்கங்களையும், விவரங்களையும் கூறுகிறேன். தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையம் 1966-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, மீன் வளம், கோழி வளர்ப்பு போன்றவை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல். உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழில்களையும் ஊக்குவித்தல். இந்த இணையத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் ஆகும். இதில் ரூ. 350 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு, அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு ரூ. 185 இலட்சமும், இந்திய அரசு ரூ. 165 இலட்சமும் செலுத்தியுள்ளன.

1973-ஆம் ஆண்டு இவ்விணையம் இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை வாங்கி விற்று வந்தது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை நிறுத்தியவுடன் இந்த இணையம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் நான்கு விதமான டிராக்டர்களை வினியோகம் செய்யத் துவங்கியது. 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை ரொக்க விற்பனையின் மூலம் ரூ. 581.81 இலட்சம் மதிப்புள்ள 2804 டிராக்டர்களையும், தவணை முறைத் திட்டத்தின் கீழ் 350 டிராக்டர்களையும் விற்பனை செய்துள்ளது. 1979-80 ஆண்டு மட்டும் ரூ. 56.60 இலட்சம் மதிப்புள்ள 99 பவர் டில்லர்களையும், 46 டிராக்டர்களையும் விற்பனை செய்துள்ளது.

**விவசாயிகளின் டிராக்டர்களுக்கு நியாயமான விலையில் உதிரிபாகங்கள் விற்பனை உண்டா?**

உண்டு. விவசாயிகளின் டிராக்டர்களுக்கு நியாயமான விலையில் தேவைப்பட்ட அளவுள்ள தரமுள்ள உதிரி பாகங்களை சீராக வினியோகம் செய்ய வேண்டியதன் அவசியத்தை உள்ளிட்டும் இவ்விணையகம் உதிரி பாகங்களைத் தேவையான அளவில் இருப்பில் வைத்து சென்னை, பண்ருட்டி, பொன்னேரி, மதுராந்தகம், திருச்சி, சேலம், மதுரை, மாயூரம், நெல்லை மற்றும் கோவை ஆகிய விற்பனை நிலையங்கள் மூலம் வினியோகம் செய்து வருகின்றது. உதிரி பாகங்களின் தேவை அதிகரிக்குமானால் மேலும் அம்மாதிரியான நிலையங்கள் வருங்காலத்தில் மாநிலம் முழுவதும் திறக்கப்படும். 80-81 ஆம் ஆண்டில் ரூ. 175.00 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்களை விற்க திட்டமிட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் டிராக்டர்கள், பவர் டில்லர்கள், பம்புசெட்டுகள் ஆகியவற்றைக் கடனாகப் பெற்ற விவசாயிகளிடமிருந்து 66,16,000 ரூபாய் பாக்கி வரவேண்டியுள்ளது. கடந்த ஆண்டு 4 மாதங்கள் மட்டும் 3 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் விவசாயிகள் கட்டி விட்டார்கள். இன்னும் பாக்கியுள்ள கடனை விவசாயிகள் விரைவில் கட்டி இணையத்திற்கு ஒத்துழைப்புத் தருவார்கள் என்று நம்புகிறேன்.

**பூச்சி கொள்ளி மருந்து மீன்பிடி வலைத் தயாரிப்புத் திட்டம் பற்றி விளக்குமாறு கூறலாமா?**

1978-79ஆம் ஆண்டிலும் 1979-80 ஆண்டிலும் விற்பனை செய்யப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகளின் மதிப்பு ரூபாய் 19.59 இலட்சம் மருந்து பொடியும், ரூபாய் 11.40 இலட்சம் மருந்து திரவ தயாரிப்புமாகும்.

1980-81-ஆம் ஆண்டில் 9,000 மெட்ரிக் டன் பொடி மருந்துகளையும் 2,000 லிட்டர் திரவ மருந்துகளையும் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றுடன் இணையம் ஐதராபாத்தில் அமைத்துள்ள இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட்டின் தயாரிப்புகளான என்டோசல் பி. எச். சி. 50 சதவிகிதம் டி. டி. டி. 50 சதவிகிதம் மேலும் டி. டி. டி. 25 சதவிகிதம் போன்றவை



களை விற்பனை செய்து வருகின்றன. அந்த நிறுவனத்தின் தயாரிப்புகள் ரூ. 20.62 இலட்சம் மதிப்பிற்கு 1978-79ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டது. 1979-80-ஆம் ஆண்டில் ரூ. 3.17 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மீன் பிடித்தலை நவீனமாக்கும் முயற்சியில் இயந்திரங்களின் மூலம் தயாரிக்கப்பட்ட வலைகளின் தேவையை ஈடுகட்டும் பொறுப்பை இவ்விணையம் மேற்கொண்டுள்ளது. இதற்காக இவ்விணையத்தால் ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலை, உறுதி வாய்ந்த நைலான், நூலினாலும், பாலிதின் நூலினாலும் ஆண்டொன்றிற்கு 60 மெ. டன். மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் திறன் வாய்ந்தது.

மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் நான்கு இயந்திரங்களைக் கொண்ட இத்தொழிற்சாலை 1976-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் துவங்கப்பட்டது. இத்தொழிற்சாலையின் உற்பத்தித் திறனாகிய 50 மெ. டன்னிலிருந்து 60 மெ. டன்களாக உயர்த்தும் பொருட்டு, 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள்



மற்றொரு இயந்திரமும் வாங்கப்பட்டது. இவ்விணையத்தினால் தயாரிக்கப்பட்ட மீன்பிடி வலைகள் அதனுடைய தரத்தாலும், விலையாலும் விற்பனையில் அதிக மதிப்பைப் பெற்றுள்ளன. மிக நுண்ணிய நைலான் வலையிலிருந்து மிகக் கெட்டியான நூல்களைக் கொண்ட மீன்பிடி வலைகள் வரை இங்கு தயாரிக்கப்படுகின்றன.

மேற்கூறியவற்றுடன் இணையம் மீன்பிடி படகுகளுக்கு ஏற்படவும் மீன்பிடி வலைஞர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறும் வலைகளை தயாரித்து விற்பனை செய்வதிலும் முன்னோடியாக உள்ளது. இந்தியாவில் மீன்பிடி தொழிலில் தேவைகளை ஈடுகட்டுவதில் இவ்விணையம் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

மீன்பிடி வலைகளின் உற்பத்தி ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

**இலைபுரத மாவுத்திட்டம் குறித்து இணையம் ஆற்றும் பணிகள் யாவை?**

இணையம் இலைபுரத மாவு தயாரிக்கும் தொழிற்சாலையை உடுமலைப் பட்டையில் நிறுவியுள்ளது. இலைபுரத மாவு லுசரின் என்ற புல் வகையின் மூலம் தயாரிக்கப்படுகின்றது. கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் தேவையான முக்கிய உணவாக இது தயாரிக்கப்படுகிறது. 1980-81-ஆம் ஆண்டில் ரூ. 4.16 இலட்சம் மதிப்புள்ள 450 மெ. டன். அளவு இலைபுரத மாவு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இணையகம் எந்தெந்த புதிய வகைகளில் விவசாயிகளுக்குச் சேவை செய்ய இயலும் என ஆராயும்பொழுது பூச்சி மருந்து கொல்லி தயாரித்த விற்பனை செய்வதை முதலாவதாக மேற்கொண்டது. அடுத்ததாக விவசாயிகளில் முக்கியத் தேவையான உரத்தை வழங்கும் பணியில் முற்பட்டுள்ளது. 1980-81-ஆம் ஆண்டில் 45 ஆயிரம் மெ. டன் அளவு உரத்தை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது.

**சூரியகாந்தி (சனோலா) எண்ணெய் சிறப்பை விவரிக்கலாமா?**

தமிழ்நாடு விவசாயத் தொழில் வளர்ச்சி இணையம் ''சனோலா'' என்ற பெயரில் சூரியகாந்தி வகையில் இருந்து சமையல் எண்ணெய் தயாரித்து வருகிறது. இந்த எண்ணெய் நீண்டநாள் கெடாமல் இருக்கும். வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் ''ஒலிவ்'' எண்ணெய் நிகராகச் சத்துள்ளது. இந்த எண்ணெய்யில் உடல் நலத்துக்கு உதவுகின்ற வைட்டமின் சத்து இருக்கிறது. இருதய நோய், நெஞ்சு வலி, மூச்சுத் திணறல், நீரழிவு நோய்களைத் தடுக்கும் சக்தி உள்ளது. நோய் பரப்பும் நுண்கிருமிகளைக் கொல்லும் திறன் இருப்பதாக வைத்திய நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணெய் தயாரிப்பதற்காக சூரியகாந்தி விதைகளை தகுந்த விலை கொடுத்து விவசாய தொழில் வளர்ச்சி இணையம் வாங்கி வருகிறது. சூரியகாந்தி 69 முதல் 90 நாட்களில் பயிராகி அது பலனைத்தரும்.

எண்ணெய் வித்துக்களான எள், ஆமணக்கு, தென்னை, கடலை போன்ற

வற்றைவிட சூரியகாந்தியில்தான் கூடுதல் எண்ணெய்ச் சத்து இருக்கிறது.

தர்மபுரி மாவட்டம் போச்சம்பள்ளியில் சூரியகாந்தி விதையில் இருந்து எண்ணெய் பிழியும் ஆலை உள்ளது. இதுவரை 15 ஆயிரம் ஏக்கரில் சூரியகாந்தி பயிரிடப்பட்டு வந்தது. இனி அதை 25 ஆயிரம் ஏக்கராக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. சூரியகாந்தி எண்ணெய்யை நமது மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் பயன்படுத்தி வருவதாக என்னிடம் கூறினார்கள்.

இவ்விணையம் கடலை எண்ணெய்யை சுத்திகரிக்கும் பணியினை மேற்கொண்டும் கடலைப் பிண்ணாக்கிலிருந்து கரைத்து எண்ணெய் எடுக்கவும், இத்தொழிற்சாலையைக் கொண்டு பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய்யைப் பிழிந்தெடுக்க முடியுமா என்பதையும் இவ்விணையம் ஆராய்ந்து வருகின்றது. அதற்கு சில உபகரணங்கள் கூடுதலாகத் தேவைப்படுகின்றன.

இவ்விணையம், செக்குப் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல் மற்றும் அதன் சம்பந்தமான பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்யும் கூட்டுறவுத்துறை இணையகம், நாமக்கல்—என்ற நிறுவனத்திடமிருந்து எண்ணெய் கரைத்தெடுக்கும் தொழிற்கூடம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இத்தொழிற்சாலையின் மூலதனம் ரூ. 21 இலட்சம் ஆகும். இத்தொழிற்சாலை நாளொன்றிற்கு 15 மெ. டன் அளவுள்ள அரிசித் தவிட்டிலிருந்தும், அல்லது 25 மெ. டன். அளவுள்ள எண்ணெய்ப் பிண்ணாக்கிலிருந்தும் எண்ணெய்யைக்கரைத்தெடுக்கும் திறன் கொண்டது.

ஆதலால் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் கரைத்தெடுப்பதைப் பற்றி ஆராய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அரிசித் தவிடு கிடைப்பது ஒரு பிரச்சினையாக இருக்கிறது.

**இம்மாதிரியான இணையம் பிற மாநிலங்களில் உள்ளனவா? அதன் விவரம் :**

திருவனந்தபுரம், ஹைதராபாத், பெங்களூர், பாட்னா, ஜெய்பூர், சண்டிகார், கட்டாக், ஸ்ரீநகர், கௌகாத்தி, அகமதாபாத், சிம்லா, பம்பாய், மத்திய பிரதேசம், காந்தி கிராமம், லக்னோ, கல்கத்தா ஆகிய இடங்களில் உள்ளன.

**புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?**

மதுரை மாவட்டத்தில் கிடைக்கும் மல்லிகைப் பூக்களைக் கொண்டு ''னாசண்ட்'' தொழிற்சாலை நிறுவ முயற்சித்து வருகிறோம்.

உடுமலைப்பேட்டையில் உள்ள குதிரை மசால் மாவு ஆலையின் மூலமாக ஏறக்குறைய 250 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கிறது. மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களது திட்டத்தின்படி மறைமுக வேலை வாய்ப்பளிக்கிறது. உடுமலைப்பேட்டையில் இயங்காமல் இருக்கும் மக்காச்சோள தொழிற்சாலை விரைவில்செயல்



பட நடவடிக்கை எடுக்கப்படும். தஞ்சாவூர் அருகே புதுக்கோட்டை மாவட்டம் புனக்குளத்தில் 90 இலட்சம் ரூபாய் 'செலவில் கட்டப்பட்டுவரும் தவிடு எண்ணெய் தொழிற்சாலை 6 மாதக் காலத்திற்குள் கட்டிமுடிக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கும்.

கடந்த ஆண்டுகளைப் போல் அல்லாமல் இந்த ஆண்டு 4 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளோம். விவசாயத்துறையில் புதுமைகளைச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களின் எண்ணங்கள் இந்தத் ''தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையம்'' மூலம் நிறைவு செய்யப்படுவதற்காகப் பாடுபட்டு வருகிறோம்.

**எங்கெந்த நாடுகளுக்குச் சென்று வந்தீர்கள்?**

நான் 1980-ஆம் ஆண்டு டிசம்பர் 14-ந் தேதி ஹாங்காங்-பாங்காக், ஜப்பான், தைவான், சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டு 1981-ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் தேதி தமிழகம் திரும்பினேன் சுற்றுப்பயணம் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. எங்களுடன் மாண்புமிகு ஒரிசா வேளாண்மை அமைச்சர் திரு மல்கோத்ரா அவர்களும், மாண்புமிகு மத்தியப் பிரதேச வேளாண்மை அமைச்சர் திரு விஜயசிங் அவர்களும் வந்திருந்தனர். எங்கள் குழுவிற்கு 1968-ஆம் ஆண்டு சென்னை அண்ணாநகரில் நடைபெற்ற உலகப்பொருட்காட்சியை நடத்திய திரு. சர்மா அவர்கள் தலைமை வகித்தார்கள்.

நவீன கருவிகளைப் பயன்படுத்தி வேளாண்மை மேம்பாட்டைச் சிறப்புறச் வருகிற முறையை விவசாயிகள் எவ்வாறு செய்து முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்பதையும் கண்டறிந்தோம்.

பேட்டி: **ஜி. ஆனந்தன்**



# பேசும் பிள்ளை பேசும்!



டாக்டர் எஸ். காமேஸ்வரன்,
இயக்குநர்—பேராசிரியர்,
காது, மூக்கு, தொண்டை நிறுவனம்
அரசினர் பொது மருத்துவ மனை, சென்னை,
மருத்துவக் கல்லூரி, சென்னை.



பொதுவாக சிலகுழந்தைகளின் பேச்சில் குறைகள் இருப்பதை நாம் அறிவோம். இந்தக் குறையை நான்கு விதங்களாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. குறைவான பேச்சு வளர்ச்சி
2. உச்சரிப்புக் குறைகள்.
3. திக்குவாய்
4. குரல் கோளாறுகள்.

பேச்சு என்பது இயற்கை மனிதனுக்கு மட்டும் கொடுத்துள்ள ஒரு அரிய பரிசாகும். பேச்சும், குழந்தைகள் எழுத, படிக்க கற்பதுபோல், கற்றுக்கொண்டு வரும் ஒரு செயலாகும். ஒரு குழந்தை செவ்வனே பேசுவதற்கு அவசியமானவை;

1. சிறந்த புலன் (காது)
2. குறையில்லாத பேச்சு உறுப்புக்கள்
3. மூளை வளர்ச்சி
4. கற்றுக்கொள்ள ஏற்ற சுற்றுப்புற சூழ்நிலை
5. ஊக்கம்.

இவற்றில் ஏதேனும் ஒரு பிரிவில் குறை இருப்பினும், பேச்சில் குறை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

குறைவான பேச்சு வளர்ச்சி:

குழந்தை பிறந்தவுடன் அழுகின்றது. இதற்குத் தத்துவ ரீதியில் பல விளக்கங்கள் இருப்பினும், விஞ்ஞான ரீதியில் கூறி அழுவது, குழந்தையின் சுவாச உறுப்புக்கள் சீராக வேலை செய்வதற்குப் பயன்படுகிறது. பிறந்த வினாடியிலிருந்தே குழந்தை தன் சுற்றுப்புறத்திலுள்ள சப்தங்களுக்கும், பேச்சிற்கும் தன்னை அறியாமலேயே முக்கியத்துவம் கொடுக்கின்றது. பிறந்ததிலிருந்து முதல் வார்த்தை பேச ஆரம்பிக்கும்வரை, குழந்தை பேசக் கற்றுக்கொள்ளும் விதம் மிகவும் அதிசயமானது. வித்தைக்காரன் சர்க்கஸில் கயிற்றின்மேல் நடக்கக் கற்பதைப் போன்றதொரு செயலாகும். ஏனென்றால் ஒரு வினாடிக்கு கிட்டத்தட்ட ஒரு லட்சம் கோர்ந்த பேச்சு உறுப்புக்களின் பாகங்கள் இயங்கினால் தான், ஒருவரால் குறையில்லாமல் பேசமுடியும்! ஆகவே இத்தனை நுண்ணியமான பேசும்திறனுக்கு ஊறு விளைவிக்க பல காரணங்கள் இருப்பதில் ஆச்சரியமேதுமில்லை.

நம்மில் பலர் பிறவியிலிருந்தே அல்லது பிறந்த பிறகு மொழியும், பேச்சும் அறிந்து கொள்வதற்கு முன்பே (2 வயதிற்குள்) காது கேட்கும் சக்தியை இழந்தவராக உள்ளனர். இவர்களுக்குள்ள அடிப்படைக் குறை, காது கேளாமை ஆகும். ஆனால், நாம் அவர்களுக்கு சிறு பிராயத்திலேயே தேர்ந்த முறைகளில் பேச்சும், மொழிப்பயிற்சியும் அளிக்கத் தவறியதால், இன்று அவர்கள் பேச முடியாதவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். உண்மையிலேயே, காது கேளாத குழந்தைகள் ஊமைகள் அல்ல. நாம், நமது அறியாமையாலேயே அவர்களை ஊமையர்களாக ஆக்குகின்றோம். முறையாக அவர்களுக்குப் பயிற்சி அளித்தால், அவர்களால் நன்றாகப் பேச முடியும்.

சிறு வயதிலேயே, அதாவது 6 மாதத்திலேயே குழந்தையின் குறையைக் கண்டுபிடித்து செவித்துணை கருவி அணிவித்து, மொழி மற்றும் பேச்சு பயிற்சி போதிக்க வேண்டும். 6 மாதக் குழந்தைக்குக் காது கேட்கின்றதா, இல்லையா? என்பதை எப்படி அறிவது என்று ஒரு வினா எழலாம். இந்த வயதில் நன்கு காது கேட்கும் குழந்தையானது சப்தம் வரும்திசையை நோக்கி தனது தலையைத் திருப்பும். அவ்வாறு செய்யத் தவறினால் குழந்தைக்கு காது கேட்கவில்லையென சந்தேகிக்கலாம். காது கேட்கும் திறனை முழுமையாகப் பரிசோதிக்க சென்னையிலுள்ள அரசினர் பொது மருத்துவமனையிலும் குழந்தைநல மருத்துவமனையிலும், மதுரையிலுள்ள ராஜாஜி மருத்துவமனையிலும் வசதிகள் உள்ளன.

தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 15,000 பள்ளி செல்லும் வயதிலுள்ள குழந்தைகள் காது கேளாதவர்களாக உள்ளனர். நமது மாநிலம் ஊனமுற்றோர் நல்வாழ்வுப் பணியில் இந்தியாவிலேயே மகாராட்டிரத்திற்கு அடுத்தபடியாக இருப்பினும், இங்கு மொத்தம் அங்கீகரிக்கப்பட்ட 23 காது கேட்காதோர் பள்ளிகள்தான் உள்ளன. இவற்றில் மொத்தமாக சுமார் இரண்டாயிரம் குழந்தைகள்தான் கல்வி பயில முடியும். கல்வி பயில வாய்ப்புக் கிடைக்கப்பெறாதவர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டு பள்ளியில் சேர காத்திருக்கின்றனர். பலர் இப்

பட்டியலில் இடம் பெற முடியாமல் தவிக்கின்றனர். ஏனையோர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வீட்டிலேயே உள்ளனர்.

சாதாரணமாக பேச்சு ஒலி அலைகளில் (அதாவது 500 H2, 1000H2, மற்றும் 2000H2,) 90 decibel-க்கு குறைவாகக் காது பாதிக்கப்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் சிறு பிராயத்திலிருந்தே செவித்துணை கருவியுடன் மொழி மற்றும் பேச்சு பயிற்சி அளித்தால், அதிகபட்சம் ஐந்து ஆண்டுகளுக்குள் அவர்களை சாதாரண பள்ளிகளிலேயே கல்வி கற்க செய்ய முடியும். இத்திட்டத்தை நடைமுறையில் செயல்படுத்த முடியாமைக்கு முக்கிய காரணங்கள்:

1. சிறு பிராயத்திலேயே (ஒரு வயதிற்குள்) இக்குழந்தைகளை கண்டுபிடிக்காமல் இருப்பது.
2. சக்திவாய்ந்தசெவித்துணை கருவிகளை வாங்குவதற்கு இயலாமை.
3. பெற்றோர்களின் கல்வி அறிவின்மை.
4. சமுதாயம் ஊனமுற்ற குழந்தைகளையும், அவர்களின் குடும்பத்தையும் தாழ்வுடன் நோக்குவது.
5. செவித்துணைக் கருவி அணிவதை கேவலமாக நோக்குவது.

செவித்துணைக் கருவி அணிவது கண்பார்வைக் குறைவுக்குக் கண்ணாடி அணிவது போலவே ஆகும். ஆகவே, இக்கருவி அணிபவரை வேறுபடுத்திக் காண்பது தவறு. மேலும், நமது கிராமங்களில் வாழ்வோர், ஒரு குடும்பத்தில் காது கேளாத குழந்தை இருந்தால் அது ஒரு பெரிய தீங்கு செய்ததன் பலன் என்றும், குடும்பத்தார் செய்த பாவம் என்றும் பலவிதங்களில் பேசி அக்குடும்பத்தை நாள்தோறும் சாடுகின்றனர். இதனால் குடும்பத்தார் மனம் நொந்து கொள்வது மட்டும் அல்லாது, ஊனமுற்ற குழந்தையைத் தக்கபடி கவனிக்காமல் விட்டுவிடுகின்றனர். ஆகவே, இதுபோன்ற மூடநம்பிக்கைகளை முதலில் களைந்தெறிய அனைவரும் பாடுபடவேண்டும்.

சில குழந்தைகள் காது நன்கு கேட்டாலும் பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி குறைவாக இருக்கும். இதற்கு முக்கிய காரணம் மூளை வளர்ச்சி குறைவாக இருப்பதே ஆகும். இதுபோன்ற குழந்தைகள் நமது நாட்டிலுள்ள பல்

> **குழந்தைகளைப் பார்க்கும் போது எதிர்காலத்தையே பார்ப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுவது உண்டு**
>
> —பேரறிஞர் அண்ணா

மொழி பழக்க வழக்கங்களால் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். ஒரு மொழியில் நான்கு வார்த்தைகள் கற்பதற்குப் பதிலாக இரண்டு மொழிகளில் இரண்டு, இரண்டு வார்த்தைகள் கற்கின்றனர். மேலும், இலக்கணப் பிழைகள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே, இக்குழந்தைகளுக்கும், காது கேளாத குழந்தைகளுக்கும் அவர்களது சுற்றுப்புற சமுதாயத்தில் பேசப்படும் மொழியையே போதிப்பது சாலச் சிறந்தது. இதைமுன்னிட்டு தமிழ்நாடு அரசாங்க, கல்வித்துறை, காது கேளாத குழந்தைகள் இரண்டாவது மொழி கற்க வேண்டிய அவசியமில்லை என ஆணை பிறப்பித்துள்ளது.

**உச்சரிப்புக் குறைகள்:**

நமக்குத் தெரிந்து பல குழந்தைகளுக்கு உச்சரிப்புக் குறைகள் உள்ளன. உதாரணமாக ''சோப்பு என்பதற்குப் பதில் ''தோப்பு'', என்றும் ''சக்கரம்'' என்பதற்கு பதில் ''தத்தலம்'' என்றும் கூறுவது. அயல்நாடுகளின் ஆராய்ச்சியின்படி ஒரு குழந்தை எட்டு வயதிற்குள் பெரியோர்கள் பேசுவதுபோல் நன்கு உச்சரித்துப் பேச கற்றுக் கொள்கிறார்கள். எனவே, வளர்கின்ற பருவத்தில் ஏற்படும் உச்சரிப்புத் தவறுகளைப் பேச்சு குறைகளாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

குழந்தைகள் தங்கள் உச்சரிப்பு முறைகளைப் பெரியோர்கள் பேசுவதைப் பார்த்துத்தான் அறிந்து கொள்கின்றார்கள். ஆகவே, பெரியோர்கள் (குறிப்பாக பெற்றோர்கள், ஆசிரியர்கள்) உச்சரிப்பில் தவறு செய்தால் குழந்தைகளும் அந்த தவற்றைத்தான் கற்றுக் கொள்கின்றார்கள்.

காது சிறிது மந்தமாக இருப்பது, முன் நாக்கின் அசைவு குறைவாக இருத்தல், பேச்சு உறுப்புக்களின் தசைகள் பலவீனமாக இருப்பது போன்றவை உச்சரிப்பு குறைக்குக் காரணங்களாக அமையலாம்.

**திக்குவாய்**

நமக்குத் தெரிந்து பல குழந்தைகள் திக்கித்திக்கிப் பேசுகின்றனர். குழந்தைகள் சரளமாகப் பேச பயிலும் தருணத்தில் பெரும்பாலும் ஒரு நிதானத்துடன் பேசுகின்றார்கள். இதைச் சில பெற்றோர்கள் தவிப்புடன் சரிசெய்ய முயன்று குழந்தைகள் நிரந்தரமாகத் திக்கிப் பேச அடிகோலுகிறார்கள். ஆகவே, பெற்றோர்கள் தங்கள் சிறு குழந்தைகளைத் திருத்தவோ அல்லது புதியதோர் முன்னிலையில் பேச்சு சாதுரியத்தைக் காண்பிக்கவோ விழையக்கூடாது. அவ்வாறு சற்று திக்கிப் பேசுவதை ஆங்கிலத்தில் (Normal Non-Fluency) என்று கூறுவார்கள். குழந்தைகள் இதுபோல் பேசுவதைக் கவனிக்காதவாறு திருத்தாமல் விட்டுவிடுவது நல்லது. பேச்சு மருத்துவமனையில் மருத்துவரின் ஆலோசனையைக் கேட்டு அந்த முறையில் பயிற்சி அளிப்பது சாலச் சிறந்தது.

ஒருசில குடும்பங்களில் ஒவ்வொரு தலைமுறையிலும் இந்தப் பேச்சுக்குறை இருக்கும். பலர் இதைப் பரம்பரை வியாதி எனத் தவறாக எண்ணுகிறார்கள். உண்மையிலேயே, திக்கிப் பேசுதல், தவறாகப் பேசக் கற்பதாலும், சில குடும்பச் சூழ்நிலைகளாலும் ஏற்படுவதே ஆகும். மற்றபடி இக்குழந்தைகளுக்குத் தொண்டையிலோ, நாக்கிலோ, மூளையிலோ எவ்விதமான குறையுமில்லை. சொல்லப்போனால் திக்கிப் பேசும் குழந்தைகள் சராசரி அல்லது அதற்கு மேலாகவே புத்திசாலியாய் இருப்பார்கள். ஆகவே இவர்கள் பிறர் செய்யும் மிகச் சாதாரண கேலிக்கும் மனம் நொந்து போவார்கள். முக்கியமான வகுப்பறையில் வருகைப் பதிவு எடுக்கும்போது, கேள்விகள் கேட்கும்போழுது, பாடங்கள் படிக்கும்பொழுது இவர்களை மற்ற மாணவர்கள் கேலி செய்து, சிரிக்க வாய்ப்பு உள்ளது. இதற்காகவே பல ஆசிரியர்கள் இக்குழந்தைகளை விட்டு விட்டு அடுத்த குழந்தையைப் படிக்க வைக்கின்றார்கள். இதுபோல் செய்வதும் தவறு. திக்கிப் பேசும் குழந்தைக்குத் ''தைரியம்'' கூறி பள்ளி வழக்கங்களை முறைப்படி கடைப்பிடிக்கச்செய்யவேண்டும். மற்ற குழந்தைகளிடமும் இக்குழந்தையைப் பற்றிஎடுத்துக்கூறி கேலி செய்யாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்விதத்தில் எங்களது அனுபவத்தின்படி பெரியோர்களின் ஒத்துழைப்பைவிட குழந்தைகள் நன்கு புரிந்துகொண்டு அக்குழந்தைக்கு உதவுகிறார்கள். பேச்சுப் பயிற்சியை ஊக்கமுடன் கைக்கொண்டால் இக்குறையை நிவர்த்தி செய்யலாம்.

**குரல் கோளாறுகள்:**

தொண்டை கரகரப்பு ஆணுக்குப் பெண்குரல், பெண்ணுக்கு ஆண் குரல் இருப்பது, உரத்த குரலில் பேசமுடியாமை போன்றவை சாதாரணமாக ஒவ்வொரு நாளும் மருத்துவமனையில் காணும் குறைகளாகும்.

உரக்கக் கத்துவதால் குரல் வளையில் புண் ஏற்பட்டு குரல் பாதிக்கப்படும். பெரும்பாலும் இக்குறை ஆசிரியர்களை, அரசியல்வாதிகளை, தெரு விற்பனையாளர்களை, குழந்தைகளைவெகுவாகப் பாதிக்கிறது. இதை அறுவைச் சிகிச்சை மூலம் சரிசெய்யலாம். சில சமயங்களில் விபத்தினாலோ அல்லது புற்று நோயினாலோ குரல்வளையை முழுவதுமாக அறுவைச் சிகிச்சை செய்து எடுத்துவிட நேரிடும். இது போன்ற குறையுடையோர்க்கு உணவுக்குழாய் மூலம் ஒலி எழுப்பி சரளமாக பேசப் பயிற்சி தர முடியும். குரல்வளை வாதத்தால் (Vocal Cord paralysis) ஏற்படும் குரல் கோளாறைக்கூட தகுந்த குரல் பயிற்சி மூலம் சரி செய்திருக்கிறோம்.

சங்கீத வித்வான்களுக்கும், பாடகர்களுக்கும், அவ்வப்போது குரல் மாற்றங்களையும் சரி செய்கிறோம்.

மேலும் சிலருக்கு மூக்கினால் பேசுவதுபோல் குரல் இருக்கும். இது பேச்சு உறுப்புக்களின் குறையாலோ அல்லது தவறான பழக்கத்தாலோ இருக்கலாம். இதையும் சரி செய்யலாம்.

மேற்கூறிய குறைகள் அனைத்தையும் தக்கவாறு பரிசோதித்து பேச்சுக்குறை கேள்வி குறையுற்றோர் மறுவாழ்க்கை நிறுவனத்தினரால் சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் குணப்படுத்தி வரப்படுகிறது.

இந்த நிறுவனம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களால், 1980ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் தேதி திறந்து வைக்கப்பட்டு செவ்வனே பணிபுரிந்து வருகிறது.

நாங்கள் கூறிவரும் சில முக்கிய குறிப்புக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

கீழ்க்காணும் குறிப்புக்களை நமது கிராமத்தில் உள்ள மக்களுக்கு எடுத்துச் சொன்னால் நாட்டு மக்களுக்கும் பெரும் தொண்டாக இருக்கும்.

**1. காதைப் பாதுகாக்கும் வழிமுறைகள்:**

காதில் குச்சி, ஊசி, கொட்டை, பலப்பம், போன்றவற்றைப் போடாதீர்கள்.

அசுத்தமான நீர்த்தேக்கங்களில் குளிக்காதீர்கள்.

தொண்டைப்புண், தொண்டை வலி போன்றவற்றிற்கு உடனடியாக காது, மூக்கு, தொண்டை மருத்துவரிடம் காண்பித்து ஆலோசனை பெறுங்கள்.

காதில் சீழ் வருதல், காதுவலி இவற்றிற்கு காது நிபுணரிடம் உடனடியாக மருத்துவம் பெற வேண்டும்.

காதில் சீழ் வருவோர் உபயோகிக்கும் தலையணையையோ, துண்டையோ, கைக்குட்டையோ உபயோகிக்கக்கூடாது. இது நோய் பரவுவதைத் தடுப்பதற்குச் சிறந்த வழி.

குழந்தைகள் வளரும் சூழ்நிலையை மிகவும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

**2. காது கேட்கும் திறன் அறிந்து கொள்ளுதல்**

உங்கள் குழந்தை பிறந்த 6வது மாதத்தில் சப்தம் வரும்திசையை நோக்கி தலையைத் திருப்பாமல் இருந்தால், குழந்தைக்குக் காது கேட்கவில்லை என சந்தேகிக்கலாம். உடனடியாக அருகில் உள்ள காது, மூக்கு, தொண்டை நிபுணரை-காது கேட்கும் திறன் ஆய்வாளரை-பேச்சு நிபுணரை அணுகவும்.

மற்றவர்கள் பேசுவது உங்களுக்குப் புரியவில்லையானால் அவர்கள் பேச்சில் குறையிருக்கலாம் அல்லது உங்கள் காது கேட்கும் திறனில் குறைவிருக்கலாம் என்பதை நினைவில் இருத்துங்கள்.

இரைச்சல் அதிகமுள்ள சுற்றுப்புறங்களைத் தவிர்க்கவும். தவிர்க்க முடியாது என்றால் காதில் தகுந்த அடைப்பான்களை பொருத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் உறவினர்களில் யாருக்கேனும் பிறவியிலிருந்து காது கேட்கவில்லையென்றால் நீங்களும் குழந்தைகளுமகூட காது கேட்கும் திறனைப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.



**3. பேச்சுத்திறனை அறிதல்**

உங்கள் குழந்தை 15 மாதத்திற்குள் முதல் வார்த்தை பேசவில்லையென்றால் அருகில் உள்ள பேச்சு நிபுணர், அல்லது காது, மூக்கு தொண்டை நிபுணரிடம் ஆலோசனை பெறவும்.

உங்கள் குழந்தையின் பேச்சு சாமர்த்தியத்தை வீட்டிற்கு வரும் புதியவர்களிடம் காண்பிக்க குழந்தையைக் கட்டாயப் படுத்தாதீர்கள். அவ்வாறு செய்வது குழந்தைக்குத் திக்குவாய் வரக் காரணமாக அமையும்.

சாதாரணமாக, நான்கு வயதிற்குட்பட்ட குழந்தைகள் பேச்சு கற்றுக்கொள்ளும் பிராயத்தில் சில சமயங்களில் திக்கிப் பேசும். அதைப் பெற்றோர்கள் திருத்தி முயற்சி செய்தால் குழந்தைக்குத் திக்குவாய் நிரந்தரமாக அமைந்துவிடும்.

குழந்தைகள் விளையாடும் போதோ, அல்லது வேறு சமயங்களிலோ பலமாகக் கத்துவது குரல்வளையை வெகுவாகப் பாதிக்கும். ஆகவே, இதனை கண்டிக்க வேண்டும்.

பெரியோர்களிடம் பேசுவதைப் போலவே குழந்தைகளிடமும் பேசவேண்டும். குழந்தைமொழியில் பேசக்கூடாது. அவ்வாறு பேசுவது குழந்தையின் மேம்பட்ட மொழி வளர்ச்சியைப் பாதிக்கும்.

முக்கியமாக உறவு முறையில் திருமணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். இது 50 சதவீதத்திற்கும் மேலான பிறவி உடல் ஊனங்களைத் தவிர்க்கும்.



# உள்ளத்தில் இல்லை ஊனம்!

பி.வி.கிரி

"டேய்! போடா அப்பாலே... வழியிலேயே நின்னுக்கிட்டு ...... எங்கேயாவது ஒரு மூலையிலே போய் கிடக்கிறது.....'' குமார் தன் தம்பியைப் பார்த்து எரிந்து விழுந்தான்.

டிப்டாப்பாக உடை உடுத்திக் கொண்டு வெளியே செல்ல ஆயத்தமான குமார், தெரு வாசல் பக்கமாகத் தரையிலே நகர்ந்து வந்து கொண்டிருந்த கண்ணனைப் பார்த்துத்தான் அப்படி வார்த்தையால் நெருப்புத் துண்டங்களைக் கொட்டினான்.

பாவம்! கண்ணன் பயந்து கொண்டு விறுவிறுவென நகர்ந்து ஒரு அறைக்குள் புகுந்து கொண்டான்.

கண்ணனைப் பார்த்தால் அந்த வீட்டில் யாருக்கும் பிடிக்காது. அவனைப் பார்க்கும்போதே வெறுப்பாகப் பேசுவார்கள். அவன் பேச்சு, செய்கை எல்லாம் அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்கியது. அந்த அளவுக்கு அவன் செய்த தவறுதான் என்ன?

ஊனமாகப் பிறந்துவிட்ட ஒன்றுதான்....!

வேதாசலத்துக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன்தான் குமார். அடுத்தவன் கண்ணன். அதற்கு அடுத்தவள் சங்கரி, அவர்களுடைய தங்கை.

கண்ணன் ஊனமுற்றவன். வலது கால் சூம்பிப்போய், நடக்க முடியாமல், தரையில் இரு கைகளின் உதவியால் நகர்ந்து நகர்ந்து அந்த வீட்டை வலம் வருவான். அவன் ஊனமுற்று இருந்ததாலோ, அவனால் ஒரு பயனும் இல்லை என்பதாலோ அவன் எல்லார் வெறுப்புக்கும் ஆளானான் போலும்!

வேதாசலம் படித்தவர். தனக்கு இப்படி ஒரு மகன் பிறந்துவிட்டானே என்று ஏங்கினால்கூடப் பரவாயில்லையே, அன்பு தானாக வந்து அவனை அரவணைக்குமே! அவருக்கு ஏனோ அவனைப் பிடிக்கவில்லை. ஆனால், அந்த வீட்டில் ஒரே ஒருத்தி மட்டும் கண்ணன்மீது அன்பு மழை பொழிந்தாள், அதுவும் மறைமுகமாக! அவள்தான், அவனைப் பெற்றெடுத்த தாய், சிவகாமி!

ஒரு சமயம், எல்லாருக்கும் சட்டைத் துணிஎடுத்துக்கொண்டு வந்தார் வேதாசலம். குமாருக்கு டெரிகாட்டனில் பேண்ட், ஷர்ட் துணி, சிவகாமி, சங்கரிக்குப் புடவைகள், தனக்கும் நல்ல பேண்ட், ஷர்ட் துணிகள். ஆனால், கண்ணனுக்கு மட்டும் சாதாரணகாக்கித் துணி, ஒரு வெள்ளை ஷர்ட் 'யூனிபார்ம்' போல!

கண்ணனுக்கு நெடுநாட்களாக ஒரு 'ஃபுல்பேண்ட்' போட வேண்டும் என்று ஆசை...அதைப் பல தடவை சொல்லிப் பார்த்து விட்டான். அவன் தாய்க்கோ அந்த ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று துடித்தாள். ஆனால் அதற்குத்தான் எத்தனை முட்டுக்கட்டைகள்—அவன் தந்தை, அண்ணன், தங்கை எல்லாம்!

இது ஒரு சர்வசாதாரணமான விஷயம்தான். அதை நிறைவேற்றி வைக்கலாம் வேதாசலம். பெற்றோருக்கு எல்லாக் குழந்தைகளும் ஒன்றுதானே? எல்லாரையும் சமமாகத்தான் பாவிக்க வேண்டும். ஊனமாகப் பிறந்து விட்ட ஒரே காரணத்துக்காக அவனை வெறுப்பதா? அவனது அபிலாஷைகளுக்குத் தடைபோடுவதா? ஊனம் அவனுடைய தவறா?

வீட்டிலே முடங்கிக் கிடந்த கண்ணனுக்கு, வீடு ஒரு சிறையாகப்பட்டது. தன் மீது அன்பு செலுத்த யாரும் இல்லையே என்று அவன் ஏங்கினான். அந்தச் சமயத்தில்தான் கண்ணனுடைய நண்பன் சுந்தரம் வீட்டுக்கு வர ஆரம்பித்தான். அவன் கண்ணனிடம் அன்பாகப் பேசினான். ஆறுதல் சொன்னான். சுந்தரம் வேறு யாரும் இல்லை. வேதாசலத்தின் நெருங்கிய நண்பரான ரங்கசாமியின் மகன்தான் அவன்!

குமார் வீண் ஜம்பப் பேர் வழி. படித்துப் பட்டம் பெற்றவன் என்றாலும், துளிக்கூட பண்போ, பணிவோ அவனிடம் இல்லை. சுயமுயற்சியோ, உழைப்போ அவனிடம் காண முடியாது. வீட்டை விட்டுக் காலை செல்வான். பிறகு இரவே வீடு திரும்புவான். கேட்டால், வேலைக்காக அலைந்தேன்....இங்கே போனேன், அங்கே போனேன் என்பான். அதை அவன் பெற்றோர்கள் நம்பினார்கள்.

''எனக்குப் பெரிய வேலை வரப்போகிறது; கை நிறைய சம்பளம் கிடைக்கப் போகிறது...'' என்று பீற்றிக் கொள்வான்..... அதைக் கேட்டு அவன் பெற்றோர்கள் - மகிழ்ந்தார்கள்.

அவன் கேட்கும்போதெல்லாம் அவன் பெற்றோர்கள் அவனுக்கு காசு கொடுத்தார்கள். கேட்க வேண்டுமா? கால் போன போக்கில் போனான் குமார். அதற்கேற்றாற் போல வந்து வாய்த்தார்கள் அவனுடைய நண்பர்கள். சங்கரியும் தன் அண்ணன் குமாரோடு சேர்ந்து கொண்டு கண்ணனை அவமதித்தாள்.

பிள்ளைகள் நல்லவர்களாக—வல்லவர்களாக விளங்குவதற்கு, பெற்றோர்கள்தானே முன்மாதிரியாகத் திகழ வேண்டும்?

கண்ணன், பள்ளி இறுதிவகுப்பு வரைதான் படித்தானே தவிர, முயற்சி இருந்தது; உழைக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. ஆனால், ஊனம் அதற்குத் தடையாய் குறுக்கே வந்து நின்றது. அந்தத் தடையை உடைத்தெறிய வேண்டாமா? கண்ணன் தன் எண்ணத்தைச் சொல்லத் தவித்தான்...

அவன் தவிப்பை உணர்ந்த ஒரே ஆள் சுந்தரம். அவன் அவ்வப்போது கண்ணனைச் சந்தித்து ஆறுதல் மட்டும் சொல்லவில்லை. ஆக்கப்பூர்வமான யோசனைகள் சிலவற்றையும் சொன்னான். அதற்கு முழு ஆத

ரவைத் தந்தாள் சிவகாமி, கண்ண னுடைய தாய்.

நாட்கள் நகர்ந்தன....

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் என்பதுபோல, குமாரின் சுயரூபம் மெல்ல மெல்லத் தெரிந்தது. அதனைக் கண்டு வேதாசலம் மனம் புழுங்கினார். ஆனால் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. குமாரும், சங்கரியும் கண்ணனைப் பற்றிக் கோள் சொல்ல வந்தபோதெல்லாம், கோபக்கனல் தெறிக்க அவர் பார்த்தபோது, அவர்களுக்கே புரியாத புதிராக இருந்தது.

ஒரு நாள்...

''கண்ணன் எங்கே? இங்கே தானே அவன் இருப்பான்....?'' என்று கேட்டுக் கொண்டே கூடத்துக்கு வந்தார் வேதாசலம். அலுவலகத்திலிருந்து அப்போது தான் வந்து கொண்டிருந்தார்.

''கண்ணனா? இப்பத்தான் சுந்தரம் வந்து அவனை ஆட்டோவில் அழைச்சிக்கிட்டுப் போனான்.'' சிவகாமி சொன்னாள்.

''ஏன்? ஏன்?'' வேதாசலம் பதறினார்.

''எதுக்குன்னு தெரியலியே!'' சிவகாமி அமைதியாகப் பதில் சொன்னாள்.

அதுவரை காத்திருக்க அவருக்குப் பொறுமையில்லை. உடனே கழற்றிய சட்டையை மறுபடியும் எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே பரக்கப்பரக்க ஓடினார். குமாரும், சங்கரியும் ஒன்றும் புரியாமல் அவர் போன திசையையே வெறித்துப் பார்த்துக் கொண்டுநின்றனர். சிவகாமியின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. அவள் சர்வ சாதாரணமாகத் தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றாள்!

ஓட்டமும் நடையுமாக வந்த வேதாசலம், தன் நண்பர் ரங்கசாமி வீட்டை அடைந்ததும், 'பிரேக்' போட்ட வண்டி மாதிரி நின்றார். ஜன்னல் வழியாக உள்ளே இருந்து பேச்சு ஒலி வெளியே வந்தது. வராண்டாவுக்கு வந்து ஜன்னல் பக்கம் நின்றார்.

''பாவம்! கண்ணன்.....இன்னுங் கொஞ்சம் ஸ்வீட் சாப்பிடப்பா...'' என்ற குரல்கேட்டு, மெல்ல ஜன்னல் கம்பிகளுக்கிடையே பார்வையை உள்ளே செலுத்தினார் வேதாசலம்.



சுந்தரத்தின் தாய் கண்ணன் அருகே நின்று கொண்டு, அன்புடன் பலகாரங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தாள். அங்கே ரங்கசாமி, சுந்தரம் ஆகியோரும் இருந்தனர்.

''கண்ணனுக்கு நல்லகாலம் பொறந்துட்டுது.......... இனிமே அவன் கவலைப்படவே தேவையில்லை.....''

''ஆமா ஆமா. வீட்லே 'யாரோ' மாதிரி 'அனாதை'யா அவன் இருக்கவும் தேவையில்லை.....''

''ஊருக்கெல்லாம் உபதேசம் பண்ற வேதாசலம், தன் புள்ளையைப் பத்தி தெரிஞ்சிக்கிலையே.''

பொறுமை இழந்த வேதாசலம் பீறிட்டு எழும் உணர்ச்சிப் பெருக்கோடு உள்ளே நுழைந்தார். அவர் நுழைந்ததும் சொன்ன முதல் வார்த்தை—

''என்னை மன்னியுங்கள்!''

''அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. சிலர் தெரிந்தே தவறு செய்யவில்லையா, அதைப் போல, நீங்கள் உங்கள் பிள்ளைகளைச் சமமாகப் பாவிக்கத் தவறிவிட்டீர்கள். அதே சமயத்தில் உண்மை எது, போலி எது என்பதையும் உணரத் தவறிவிட்டீர்கள்...'' என்றார் ரங்கசாமி.

''ஆமா, ரங்கசாமி. என் கண்ணைத் திறந்து விட்ட தெய்வம் நீங்க...அதே சமயத்திலே என் கண்ணனிடம் அன்பு மழை பொழிந்த உண்மையான பெற்றோரும் நீங்கதான்...'' என்றார் அழாத குறையாக.

அப்போது வாசல் பக்கம் விசும்பல் சத்தம் கேட்டு அனைவரும் திரும்பிப் பார்த்தனர். சிவகாமி ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''இதோ, இவங்க இல்லைன்னா, கண்ணன் வீட்டை விட்டு எப்பவோ ஓடிப் போயிருப்பான்....'' என்று சிவகாமியைச் சுட்டிக் காட்டிச் சொன்னார் ரங்கசாமி.

அந்தச் சமயம் குமார் ஓடி வந்து, தன் தந்தையின் காலில் விழுந்து ''என்னை மன்னிச்சிடுங்கப்பா.....'' என்றான்.

'சீ, எழுந்திருடா.......போய் அவர் காலிலே விழுந்து மன்னிப்புக் கேள்டா.....'' என்றார் கோபத்துடன்.

'சரி சரி...நடந்ததை மறந்துடுவோம்...இனிமே எல்லாரும் ஒண்ணா இருக்கப் பார்ப்போம்.' என்றார் ரங்கசாமி. அதை ஆமோதிப்பவள் போலத் தலையசைத்தாள் அவர் மனைவி.

''சுந்தரம் இல்லைன்னா எங்க மகனுக்கு விடுதலையே கிடைச்சிருக்காது....'' என்று சுந்தரத்தைப் பாராட்டினார் வேதாசலம்.

கண்ணன் தன் தாயிடம், நகர்ந்து நகர்ந்து சென்றதைப் பார்த்த ரங்கசாமி, ''கண்ணா! இனிமே நீ எழுந்து நின்று நடந்தே செல்லலாம்...'' என்று சொல்லிவிட்டு, சுந்தரத்தைப் பார்த்துச் சைகை செய்தார். கண்ணன் ஓடோடி அறைக்குள் நுழைந்து, ஊன்றுகோல்களை எடுத்து வந்தான். உடனே ரங்கசாமியும், அவரது மனைவியும் கண்ணனைத் தூக்கி நிற்கவைத்து, ஊன்றுகோல்களை இரு கைகளுக்கு இடையே பொருத்தினர். கண்ணன் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. தனக்குக் கால் வந்து விட்டது போன்று உணர்ச்சிப் பெருக்கில் பூரித்துப் போனான் அவன். அவன் நடப்பதைக் கண்ட அவனுடைய பெற்றோர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள்.

''இந்த ஊன்றுகோல்கள் என் நண்பர் மூலமாக, அரிமா சங்க உறுப்பினர் ஒருவர் நன்கொடையாகத் தந்துதவினார்..'' என்று ரங்கசாமி சொன்னதும் ஆச்சரியத்தால் வாயடைத்துப்போனார் வேதாசலம்.

''இன்னும் ஒரு மகிழ்ச்சியான அதிர்ச்சி ஒண்ணு காத்திருக்கு..'' என்று ரங்கசாமி எல்லாரையும் வெளியே அழைத்து வந்து, கடைத்தெருப்பக்கம் வந்தார்.

அங்கே ஒரு சிற்றுண்டி விற்கும் 'பங்க்' ஒன்று காட்சியளித்தது.

''கண்ணனுக்கு இனிமே இது சொந்தம்...இனி அவன் சொந்தக் காலிலேயே நிற்க இது வழி அமைச்சிக் கொடுக்கும்...'' என்று ரங்கசாமி சொன்னதும், வேதாசலமும் மற்றவர்களும் அந்தப் பங்க்கை உற்று நோக்கினர்— அதில் இருந்த வாசகம் எல்லார் கண்ணிலும் பளிச்செனத் தெரிந்தது: 'தமிழக அரசு-ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்புத் திட்டம்.'

# சங்க இலக்கியச் சால்பு



ஜனவரி 10ஆம் நாளன்று காலையில் பந்தயத்திடலில் 'சங்க இலக்கியச் சால்பு' என்னும் பொருளில் கருத்தரங்கம் நடைபெற்றது:

நிதியமைச்சர் நாவலர் தலைமையேற்று, சாலை இளந்திரையன் தொடங்கி வைக்க, புலவர் ராமநாதன் வாழ்த்துரை வழங்கினார்.

திரு சாலை இளந்திரையன் தமது தொடக்க உரையில் குறிப்பிட்டார்:

'யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது வேதத்தில் சொல்லப்பட்டது போன்ற மகா வாக்கியம். நமது தமிழ் இலக்கியங்களின் சிறப்பினை இந்திக்காரர்கள்– வங்காளிகள் - குஜராத்திகள் - மராட்டியர்கள் அறிந்து போற்றுகிறார்கள் எறும்பும் தன்கையால் எட்டுச்சாண்' என்ற கவிதையைக் கேட்டு அவர்கள் வியந்து போற்றித் தமிழுக்கு மரியாதை செய்கிறார்கள்.

"அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார் அதியனின் போர்த்திறம் குறித்துச் சொன்ன செய்தியிலே ஒரு நுட்பம் இருக்கிறது. அதியமான் தனி வீரன் - தயாளன் - அன்பாளன் - மக்கள் நெஞ்சங்களில் எல்லாம் இடம்பெற்ற மக்கள் தலைவன் - இல்லோர் ஒக்கல் தலைவன் - வறியவர்களின் குடும்பத்தலைவன் - அவனுடன் போர்புரிய நினைத்தால் இந்த நாட்டு வீரர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு வறியவனின் வயிறும் எதிர்த்து நிற்கும் எனத் தொண்டைமானிடம் தெரிவித்தார் ஔவையார்.

வாழ்த்துரை வழங்கிய புலவர் ராமநாதன் குறிப்பிட்டார்.:

''சங்க இலக்கியம் தொகுத்து ஆய்ந்து வெளியிடப் பட்டுள்ளது. பல்வேறு இடங்களில், பல்வேறு சூழ்நிலைகளில் சொல்லப்பட்ட கருத்துக்களை எல்லாம் திரட்டி நூல் வடிவில் அளித்திருக்கிறார்கள்.

''சங்க இலக்கியப் பாக்கள் எல்லாம் தனித்தன்மை கொண்டவை. பண்பாட்டின் தனித்தன்மை - நாட்டின் தனித்தன்மை ஆகியவை சங்க இலக்கியங்களில் காக்கப்பட்டிருக்கின்றன. தொல்காப்பிய இலக்கணத்தில் எடுத்துக் காட்டப்பட்ட இலக்கணங்களுக்கெல்லாம் சங்க இலக்கியங்கள் பாடல்களை வழங்கியிருக்கின்றன.

''சங்க இலக்கியத்தில் எந்தச் செய்தியும் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கின்றது - துன்பமாயினும் இன்பமாயினும் வறுமையாயினும் அவை வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

தலைமையேற்ற மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் குறிப்பிட்டார் :

''அறம் என்பது எல்லாக் கடமைகளையும் உணர்த்தும் ஒரே சொல். கடமைகளை உரைப்பதன் காரணமாக திருக்குறளை அறம் என்று முன்னோர் மொழிந்தனர். 'அறம் பாடிற்றே ஆயிழை கணவ என்று சொல்லப்படுவதில் உள்ள அறம், குறளைத்தான் குறிப்பிடுகிறது.

''எல்லா நற்பண்புகளையும் தொகுத்துச்சொல்ல ஒரு தமிழ்ச் சொல் உள்ளது. அதுதான் சால்பு. அறிவுசால், பெருமைசால், தகைமைசால், சீர்சால் என்றெல்லாம் நாம் குறிப்பிடுகிறோம். பண்பாடு மிகுந்து, நிறைந்து, செறிந்து காணப்பட்டால் அதுதான் சால்பு.

''சங்க இலக்கியங்களை நுகர்ந்தால் மிக நல்ல பண்பாடுகளை நாம் அறிந்துகொள்ளலாம். நாம் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல பண்புகள் என்னென்ன என்பதைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்து உரையாற்றிய திரு ச.வே. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்;

''ஜப்பான் மொழிச் சொற்களுக்கும் நமது தமிழ்மொழிச் சொற்களுக்கும் ஒற்றுமைகள் உள்ளன. கிரேக்கக் கடவுள் டயோனிஸ் வழிபாட்டுக்கும் நமது முருகக் கடவுளின் வழிபாட்டுக்கும் இடையே ஒற்றுமை உள்ளது. கிரேக்கத்தில் பாடப்பெறும் கோரஸ் பாடலுக்கும் நமது குரவைப் பாடலுக்கும் ஒற்றுமை உள்ளது. நமது திருக்குறள் இன்று உலகப் பொது மறையாகத் திகழ்வதற்குக் காரணம் சங்க இலக்கியச்சால்புதான்.

அடுத்து உரையாற்றிய டாக்டர் முத்துக்கண்ணப்பர் குறிப்பிட்டார்;

தொகுப்பு:— தமிழ்ப்பித்தன்

''சிலப்பதிகாரத்தில் கோவலனின் தந்தை பெயரைப் பல இடங்களில் குறிப்பிட்ட இளங்கோவடிகள், தாயார் பெயரை குறிப்பிடவில்லை காவிரிப்பூம் பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் கட்டுமரத்தில் செல்லும் போது பாடிய பாடல்களிலிருந்து நான் அண்மையில், கோவலனின் தாயார் பெயர் வண்ணமாலை என்பதை அறிந்து கொண்டேன்!''

அடுத்து உரையாற்றிய டாக்டர் பாலசுந்திரன் குறிப்பிட்டார்:

''அகமும் புறமும் இணைகின்ற காட்சியை சங்க நூலான நற்றிணையில் காணலாம். காதலையே பாடி மக்களை எவன் உயர்த்துவானோ அவனே கவிஞன்; பண்பாட்டில் சிறந்தது - கற்பனை வளத்தில் சிறந்தது-கலை வளத்தில் சிறந்தது - அற்புதமாகச் செயல்களை செய்வது - கருவூலம் போலத் திகழ்வது சங்க இலக்கியம்."

அடுத்து உரையாற்றிய டாக்டர் தமிழண்ணல் குறிப்பிட்டார்:

''நேற்று எழுதிய பாடலை இன்றைக்குப் பாடுவதற்கு என் மனம் ஒப்பவில்லை. சங்க இலக்கியப் பாடல்கள் இன்றும் பொருத்தமாக உள்ளன: என்றென்றும் வாழும் இலக்கியம் சங்க இலக்கியம். சங்க இலக்கியங்கள் யாவும் எக்காலத்துக்கும் எம்மதத்துக்கும் பொருத்தம் உள்ள வகையில் பொதுமை நிறைந்தவை.''

அடுத்து உரையாற்றிய புலவர் இளங்குமரன் குறிப்பிட்டார்.

''சங்க இலக்கியத்தின் சால்புக்கு தலையாய செய்யுள் ஒன்று உண்டு, சங்க இலக்கியத்தைத் தலையாக ஆக்கி அதன் அணியாகத் திகழ்வது 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் செய்யுள் தான். யாது உம் ஊர் என்று கேட்டால் யாதும் ஊரே என்றும் யாவர் உம் கேளிர் என்று கேட்டால் யாவரும் கேளிர் என்றும் நாம் சொல்ல வேண்டும்.''

அடுத்து உரையாற்றிய அரங்கசாமி குறிப்பிட்டார்:

''சங்க இலக்கியத்தில் தத்துவம் பேசப்படுகிறது - வீரம் பேசப்படுகிறது - விஞ்ஞானம் பேசப்படுகிறது - காதல் பேசப்படுகிறது - இளமை பேசப்படுகிறது-முதுமை பேசப்படுகிறது. மனித வாழ்க்கையை ஓட்டிய செய்திகள் சங்க இலக்கியத்தில் பேசப்படுகின்றன.

மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட பீகிங் வானொலி அறிவிப்பாளர் தமிழரசுக்கு எழுதி அளித்த செய்தி

சீன - இந்திய
மக்களுக்கிடையிலான நட்பு
வளர்க! ஜாங் வே ஜென்
10, 1, 1981

அடுத்து உரையாற்றிய டாக்டர் நாகு குறிப்பிட்டார்:

''மனித வாழ்வின் உயர்வுக்குப் பாடுபட்டவை சங்க இலக்கியங்கள். இன்பமும் துன்பமும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு புறம் அவலக்குரலும் மறுபுறம் மகிழ்ச்சிக் குரலும் ஒலிக்கின்றன சங்க இலக்கியங்களில்.''

அடுத்து உரையாற்றிய டாக்டர் வெ.சா. மாணிக்கம் குறிப்பிட்டார்:

''மனைவியின் பெருமையை-புலவரின் பெருமையை எடுத்துக் காட்டுகிறது சங்க இலக்கியம்; தவறு கண்ட இடத்தில் நாகரிமாகச் சுட்டிக்காட்டும் சங்க இலக்கியம்; தலைவி தலைவன் ஆகியோரின் அன்பு வாழ்வை எடுத்துக் காட்டுவது சங்க இலக்கியம். மகிழ்வு, துடிப்பு, அழகு, சிறப்பு, எழுச்சி, உணர்ச்சி ஆகிய இத்தனை உணர்வுகளை உவமைகளின் வாயிலாக எடுத்துச்சொல்வது சங்க இலக்கியம்."

அடுத்து உரையாற்றிய டாக்டர் பாகீரதி குறிப்பிட்டார்:

''சங்க காலப் பெண்மக்களிடம் ஈரமும் வீரமும் இருந்தது. ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே என்று சொல்லப்பட்டிருக்கிறது; தந்தைக்குத் தலைக் கடன் என்று சொல்லவில்லை. ஒருவன் வீராதி வீரனாக உருமாறுகிறான் என்றால் அதற்குக் காரணம் அவனது தாய்தான்; அதனால்தான் தலைக் கடன் என்று குறிப்பிடப்பட்டது''.

அடுத்து உரையாற்றிய டாக்டர் பொற்கோ தெரிவித்தார்:

''சங்க இலக்கியங்களுக்குத் தனிப்பட்ட சில சால்புகள் உண்டு. சங்க இலக்கியத்தை ஏன் விரித்து விரித்துப்பேசுகிறோம்? அதற்குக் காரணம் இருக்கிறது. ஓரே கவிதை எழுதிய புலவர் இன்று உலகப் புகழ் பெற்றிருக்கிறார். சாதி சமய ஆதிக்கத்துக்குக் கட்டுப்படாதது - அரசியலுக்குக் கட்டுப்படாதது தமிழ். சங்க இலக்கியத்தில் காணப்பட்ட சமுதாயத்துக்கும் இன்று காணப்படும் சமுதாயத்துக்கும் வேற்றுமை இருக்கிறது. சங்க இலக்கியங்கள் உலகின் பல மொழிகளிலும் பெயர்க்கப்படல் வேண்டும்''

அடுத்து உரையாற்றிய இளவரசு குறிப்பிட்டார்:

''சங்க இலக்கியம் நமது சொந்த இலக்கியம்; அது மறுமலர்ச்சிக்கு அடிப்படைச் செல்வத்தைக் கொடுத்தது சங்க இலக்கியம், மனிதனைப் பாடுவது. நாட்டுச்சிறப்பு, நஞ்சைவளம், காட்டுவளம், கடல்வளம், மலைவளம் போன்றவற்றைப் பாடுவது''

அடுத்து உரையாற்றிய ரம்போலா மாஸ்கரனேஸ் தெரிவித்ததாவது:

''சங்க இலக்கியம் முழுதிலும் பயின்றுவந்த ஒரு நல்ல சொல் சான்றாண்மை என்பது. சான்றாண்மையை மேற்கொள்பவர்கள் வாழ்க்கையில் வெற்றிபெற்று விடுகிறார்கள்.''

அடுத்து உரையாற்றிய இல. சுந்தசாமி குறிப்பிட்டார்:

''சங்க இலக்கியத்தின் சாரமான யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது இன்றைய தமிழகத்துக்கே பொருந்தி வருகிறதா? பெரியாருக்கு விழா எடுக்கப்படும் நேரத்தில் நாட்டில் சாதி மாநாடுகளும் நடைபெறுகின்றன. சாதிகளை ஒழிக்கும் செயலில் தமிழகம் முனைப்பாக ஈடுபட வேண்டும்''

பின்னர் கருத்தரங்கின் நிறைவு உரை ஆற்றிய நாவலர் நெடுஞ்

செழியன் அவர்கள் குறிப்பிட்டார்:

''தமிழ்மொழி, தமிழ்நாடு; இவற்றில் உள்ள மொழி, நாடு இரண்டும் பெயர்ச் சொற்களாகவும் விளங்குகின்றன; வினைச் சொற்களாகவும் திகழ்கின்றன. தமிழை மொழி - தமிழை நாடு என்னும் போது அவை வினைச் சொற்கள் ஆகின்றன.

''செவிக்கு இன்பம் தருவது எது? மொழியும் போது மகிழ்ச்சியைத் தருவது எது? ஐம்புலன்களாலும் உணரத் தக்கது எது? அதுதான் இலக்கியம். சிந்தனை தான் சொல்லாகிறது - சிந்தனை தான் செயலாகிறது. சிந்திப்பவன்தான் மனிதன். விலங்கினம் சிந்திக்காது: சொல்லாது; சிந்திக்கும்படியும் செய்யாது! சிரிக்காது; மனிதன் தான் சிரிக்க முடியும். சிரிக்கத் தெரியாதவனுக்கு பகல் நேரமும் இரவாக இருக்கும் என்றார் வள்ளுவர். எந்தச்சமுதாயம் மகிழ்கிறதோ அது வளமான சமுதாயம்;

''பல இலட்சக்கணக்கான மக்கள் மகிழ்ச்சிபெற வேண்டும். இன்பம் பெற வேண்டும்- கவலையை மறக்க வேண்டும்- வேதனையை மறக்க வேண்டும் -வாட்டத்தை மறக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மாநாட்டை உருவாக்கியிருக்கிறார்கள்.

''அரண்மனையில் இருந்த தமிழை ஆல மரத்துக்குக் கொண்டு சென்று சுவையூட்டியவர் பேரறிஞர் அண்ணா. நல்ல தமிழை சாதாரண மக்களும் அடைய வேண்டும் என்று வாழ்நாளெல்லாம் பணிபுரிந்தார் அண்ணா. அந்தத் தமிழ்ப் பண்பாடு - நாகரிகம் -கலை ஆகியவற்றை விரிவாக்கி நாட்டு மக்கள் அனைவரும் பெறச் செய்தார் புரட்சித் தலைவர்

''உலகத் தமிழ்மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி. வைகை ஆறு நகருக்குள் புகுந்து விட்டதோ என்று எண்ணுகின்ற அளவுக்கு மக்கள் திரண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றியைச் சொல்வதுடன் இங்கு அவர்கள் பெற்ற தமிழ் இன்பத்தைத் தங்கள்து ஊர்களுக்குச் சென்று- மாநாட்டுக்கு வராதவர்களிடம்

சொல்லி - வீட்டுக்கு வீடு பாய்ச்சி -செவிக்குச் செவி பாய்ச்சி தமிழ்த் தொண்டு செய்ய வேண்டும் என்று உங்களை எல்லாம் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.''




அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்ற அரசு அலுவலர்களாகிய நீங்கள், உங்கள் அலுவல்களின் காரணமாகப் பல்வேறு சூழ்நிலைகளில் பலதரப்பட்ட மக்களைச் சந்தித்திருக்கக்கூடும்; பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்றிருக்கக்கூடும். இவற்றிலிருந்து பல சுவையான சம்பவங்களையும், செய்திகளையும் உங்கள் அனுபவத்தில் கண்டும் கேட்டுமிருப்பீர்கள். இவற்றைத் தொகுத்து '*தமிழரசு*' இதழில் வெளியிடக் கருதுகிறோம்.

அவ்வாறு நீங்கள் கண்ட—கேட்ட

1. நகைச்சுவை சம்பவங்கள்
2. கருத்தாழமிக்க உரையாடல்கள்
3. சுவையான செய்திகள்

முதலானவற்றைச் சுருக்கமாக எழுதியனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வெளியிடத் தகுதியானவை தமிழரசில் இடம் பெறும்.

வெளியிடுவதற்கு அனுப்பப்படுகின்ற செய்திகள் அனைத்தும், உண்மையானவையாக இருத்தல் வேண்டும்; கற்பனை கூடாது. வேறு எந்த ஏடுகளிலோ, இதழ்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.

அனுப்புபவர், தன்னுடைய முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

எழுத்தோவியங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**'ஆசிரியர்,**
**'தமிழரசு'**
**அரசினர் தோட்டம்,**
**சென்னை-600 002.**



# காப்பிய உலகக் கலை நலம்!

உலகத்தமிழ் மாநாட்டின் ஐந்தாம் நாள் (8-1-81) நிகழ்ச்சிகள் மதுரை பந்தயத் திடலிலுள்ள மூவேந்தர் அரங்கில், தருமபுரம் சாமிநாதன் குழுவினரின் திருமுறைப் பாடல்களோடு தொடங்கியது.

அதன்பின் நடைபெற்ற 'காப்பிய உலகக் கலை நலம்' என்ற கருத்தரங்கிற்கு பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள், தலைமை தாங்கினார். அதில் அவரவரும் வகித்த பொறுப்பு, ஆற்றிய உரைச் சுருக்கம் ஆகியவை கீழே தொடங்குகின்றன.

டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் தொடக்க உரை ஆற்றினார்.

**அ. ச. ஞானசம்பந்தம்:**

காப்பியம் என்பது ஒரு சமுதாயத்தினுடைய வாழ்க்கை முறையை-வளத்தை ஒரு மனிதனின் கதாபாத்திரத்தில் ஏற்றிச் சொல்வதேயாகும். தனிக் காப்பியங்களுக்குக் காப்பியம் போலப் பெருமை இல்லை.

இன்று வாழும் காப்பியங்களிலே இரண்டாம் நூற்றாண்டில் உண்டான சிலப்பதிகாரம் தனிச்சிறப்போடு விளங்குகிறது. காப்பிய உலகம் என்பது இரண்டாம் நூற்றாண்டிலிருந்து 12 ஆம் நூற்றாண்டோடு முடிந்துவிட்ட ஒரு தனிச் சிறப்புடையதாகும். ஆதி காவியம் என்று கூற நம்மிடம் எதுவுமில்லை.

சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி, மாதவி ஆகிய பாத்திரங்களின் மூலம் காட்டப்படும் மனிதப் பண்பாடுகள் எல்லாருக்கும் ஏற்புடைத்தாகும்.

காப்பிய உலகின் கலை நலம் எந்த மொழியில் தோன்றியதோ, அது அந்த இனத்தின் பண்பாட்டுப் படப்பிடிப்பாக விளங்குகிறது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

**உடுமலை நயினார் முகமது:**

பத்து நாட்களுக்கு முன்னால் பார்த்த ஒருவனை இன்று பார்க்கிறவன் கேட்டான் ''அன்று பார்த்தபோது தெளிவாக திடகாத்திரமாக இருந்தாயே இப்போது ஏன் இளைத்ததுபோல், காணப்படுகிறாய்?''

பதில் இல்லை !

பிறகு அவனே சொல்கிறான்— ''தமிழாராய்ச்சி நடக்கும் தமிழ்ச் சங்கத்திலே போய் ஆராய்ந்து வருகிறாய் போலும்; அதனால் தான் இளைத்திருக்கிறாய்'' என்னும் '' உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்'' என்ற திருக்கோவையார் பாடலடிகளால் இதனை உணரலாம். தமிழாராய்ச்சி அப்படிப்பட்டது.

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரக்காப்பியம்பல்வேறுசிறப்புக்களுடையது. பல்வேறு உண்மைகளை எடுத்துக் காட்டுவது. தமிழ்ப் பெண்கள், கணவனையன்றி வேறு யாரையும் தொடமாட்டார்கள்; அது பீடு அன்று என்பதுபோலப் பல சிறந்த கருத்துகளைச் சிலம்பில் காண்பது போன்றே பிறன்மனை நோக்காத பேராண்மை போலப் பல நல்ல கருத்துக்களை இராமாயணக் காப்பியத்திலே நாம் காண முடிகிறது.

**கம்பன் அடிப்பொடி சா. கணேசன்:**

சிறந்த ரஷ்யச் சிறுகதை என ஒன்றைக் கூறுவார்கள். ஒரு பெரிய மீன் சிறிய மீனைத் தின்ன வந்தது. சிறிய மீன் இது நியாயமா எனக் கேட்டது. உடனே அந்தப் பெரிய மீன் அப்படியானால் நீ என்னை விழுங்கி விடேன் என்றது. அதைச் சுற்றிச் சுற்றி வந்த சிறிய மீன் 'உன்னை விழுங்க என்னால் முடியாது; நீயே என்னை விழுங்கிக் கொள்' என்று சம்மதித்தது.

இப்படிப்பட்ட நீதிக் கதைகள் நம்முடைய இராமாயணக் காப்பியத்திலே ஏராளம் இருக்கின்றன !

**டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி:**

ஐம்பெருங் காப்பியங்களிலே சீவக சிந்தாமணி ஒரு சிறந்த காப்பியமாகும்.

வேட்டுவர்களை வென்று சீவகன் ராஜமாநகர் வழியே

வருகிறான். அவனைக் காண, அழகிய இளம் பெண்கள் தத்தம் வீட்டு வாயிலுக்கு ஓடி வருகிறார்கள். இதைக்கூற வந்த அதன் ஆசிரியர் திருத்தக்கதேவர் காமனைப் போன்ற அவனை அந்த அழகரசிகள் தமது தாமரைக் கண்ணால் பருகினராம்!

தாமரைக் கண்ணால் பருக, தாம்-அரைக் கண்ணால் பருக, தா - மரைக் கண்ணால் பருக என எப்படிப் பிரித்தாலும் இனிக்கும் பாட்டு வரி அது. இப்படி நம் இதயங்கவரும் பல இடங்களை சீவக சிந்தாமணியிலே நாம் காணலாம்!

**டாக்டர் இரா. சனார்த்தனம்:**

மொழிகளுக்கெல்லாம் ஆதி இலக்கியம் காப்பியம். கதை படைப்பதும் படிப்பதும் எளிதான காரியம். ஆனால் காப்பியம் படைப்பதும் படிப்பதும் அப்படியல்ல.

கற்றறிவாளர்கள் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் பாண்டியன் பரிசு, குறிஞ்சித் திட்டு— கவிஞர் கண்ணதாசனின் மாங்கனி போன்றவைகளையெல்லாம் இந்தஇருபதாம் நூற்றாண்டின் இணையற்ற காப்பியங்களாக ஏற்றுக் கொள்ள மறுப்பது முறையல்ல.

**டாக்டர் சிங்காரவேலு:**

கடலால் அழிக்கப்பட்டாலும் அழியாத காப்பிய வளம் நம்முடையது. உலகக் காப்பியங்களிலே ஓர் உன்னதமான காப்பியம், புரட்சிக் காப்பியம் சிலப்பதிகாரம்.

சிலம்பு என்ற சொல்லுக்கு ஒலி என்றும் பொருளுண்டு. அதனாலும் இன்னும் பல காரணங்களாலும் ஒலியை அடிப்படையாய்க் கொண்டு எழுந்ததே சிலப்பதிகாரம் என்பது என் கருத்து.

உலகக் காப்பியங்களையெல்லாம் விட தமிழகக் காப்பியங்கள் உயர்வானவை.

**திரு. சுலைமான் ஐ.ஏ.எஸ்.**

இலக்கியம் என்பது அரிய நுண்கலைகளுள் ஒன்றாகும்.

தமிழின் ஏற்றம் கருதி, முஸ்லிம் பெருமக்கள் ஏராளமான காப்பியங்களை எழுதிக் குவித்திருக்கிறார்கள். சீறாப் புராணம் அவற்றில் ஒன்று. இந்தக் காப்பியம், தமிழன்னையின் தலைசிறந்த அணிகலன்களிலே ஒன்றாகும்.

**டாக்டர் பரிமளம்:**

காப்பியங்களை நடத்திச் செல்லுவது என்பது ஒன்று; சுவையாக நடத்திச் செல்லுவது என்பது ஒன்று.

இந்த இரண்டுக்கும் இடையே இளங்கோவடிகள் தனது சிலப்பதிகாரக் காப்பியத்தைச் செந்தமிழ் மணங்கமழ நடத்திச் செல்லுகிறார்.

**பேரறிவாளர் பிறர் :**

'காப்பிய உலகக் கலை நலம், என்ற இந்தக்கருத்தரங்கில், டாக்டர் இரா. சீனிவாசன், டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், டாக்டர் திருமேனி, பேராசிரியர் பொ.ஆ. சத்திய சாட்சி, தவத்திரு ஊரன் அடிகள், டாக்டர் இளங்கோ, திருமதி சரசுவதி இராமநாதன், டாக்டர் சிவகாமசுந்தரி. ஆகியோர் உரையாற்றினர்.

—ராஜா



# மின்சக்தி – சிக்கனம் – சேமிப்பு

**எஸ். ஆர். சப்தரிஷி**
தொழில் நுட்ப உறுப்பினர்
தமிழ்நாடு மின்சார வாரியம்.

கன்சர்வேஷன்என்றாலே நம் நினைவுக்கு வருவது சிக்கனமாகவும் சேமிப்புடனும் பயன்படுத்துவது ஆகும். வேறு வகையாகச் சொல்வதானால், மின் சக்தியை முறையாக திறமையாகப் பயன்படுத்துதல் (Efficient Utilisation ) வீணின்றிச்செலவழித்தல் (avoiding waste) மேலும் தேவைக்கு மட்டுமே செலவழித்தல் என்றும் சொல்லலாம். சிக்கனமே சேமிப்பாகிறது.

30 சதவீத மின்வெட்டையும் செயல் படுத்திக் கொண்டு மின் சிக்கனத்தைப் பற்றி கூறுவது பலருக்கு வியப்பாக இருக்கலாம். சில தேவைகளை கட்டுப்படுத்தவும் மிகப் பயனுள்ள துறைகளுக்கு மின்சக்தியை முறைப் படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைதான் மின்வெட்டு.

சிக்கனம் அல்லது சேமிப்பு பற்றிய சர்ச்சையே ஒரு பற்றாக் குறையைப் பின்னணியாககொண்டதுதான். இல்லாவிட்டால் இந்தக் கருத்தோட்டத்திற்கு அமெரிக்கா போன்ற மேலை நாடுளில் இவ்வளவு வலுவான ஆதரவு இருப்பதும் அவசியமில்லாமல் போகலாம்.

குறிப்பாக அனல் மின் உற்பத்தியில் உள்ள சிரமமும் சிக்கல்களும் குவிக்கப்படும் நிதியும் உங்களுக்கு தெரிந்திருக்கும். நாகரிகம் வளர வளர மின்சக்தியின் தேவைகள் ஆண்டுதோறும் கட்டுக்கடங்காமல் வளர்ந்து வருகின்றன. இவற்றிற்கு ஈடு கொடுக்கும் அளவிற்கு மின் உற்பத்தி வளர்வதில்லை. காரணம், நிதிப்பற்றாக்குறையும், போதுமான அளவில் மின் திட்டங்கள் உருவாக்கப்படாமையும்,மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்த காலத்தில் முடிக்கப் படாமல் போவதும் ஆகும். இதனால் தேவைக்கும் வளர்ச்சிக்கும் ஒரு நியாயமான வரம்போ, தொடர்போ இல்லாமல் மீண்டும் பற்றாக்குறைகளுக்கும் கட்டுப் பாடுகளுக்கும் நாம் ஆளாகிறோம். இவை மாநிலத்தின் அல்லது நாட்டின் ஒட்டுமொத்தமான பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கிறது.

தமிழ்நாட்டில் மொத்த மின் பயனீட்டாளர்களின் (consumers) எண்ணிக்கை 37 லட்சம், இதில் வீட்டுப் பயனீட்டாளர்கள் ஏறத்தாழ 20 லட்சம் பேர். அவர்கள் பயன்படுத்தும் மின் சக்தியின் அளவு 9 சதவிகிதம். இவர்கள் வீடுகளில் எரிக்கும் விளக்குகளின் எண்ணிக்கையும் திறனும் சரியானவைதானா? தேவையில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் மின் விசிறி, குளிர்சாதனம், மின் அடுப்பான் இவைகளினால் ஏற்படும் வீண் இழப்பு எவ்வளவு? இதற்குத்தான் நாங்கள் கட்டணம் செலுத்திவிடுகிறோமே என்று சொல்வது எந்த விதத்தில் ஆறுதல் ஆகும்?



நீங்கள் பல்வேறு அலுவலகங்களிலே பணி செய்பவர்களாக இருக்கலாம். அங்கே அலுவலக நேரத்தின் முன்னும் பின்னும் இடைவேளைகளிலும் அவசியம் இல்லாமல் இயங்கிக்கொண்டிருக்கும் மின் விசிறிகள், குழல் விளக்குள் எவ்வளவு மின் சக்தியை வீணாக்குகின்றன. காரணம் அதற்கான மின் கட்டணம் செலுத்துவது உங்கள் பொறுப்பில்லை என்பதே.

வீடுகளில், அலுவலகங்களில், குறிப்பாக நகர்ப்புறங்களில் நிச்சயம் நம்மால் 10 சதவீதம் மின் நுகர்ச்சியைக் குறைத்துக்கொள்ள முடியும். மனம் வைத்தால் மார்க்கம் உண்டு. சாதாரண விளக்குகளுக்குப் பதிலாக முடிந்த அளவு குழல் விளக்குகள் உபயோகிப்பதால் மின் சக்தி உபயோகம் குறைகிறது வீடுகளைப் பொறுத்தவரை இதை முயற்சிக்கலாம்.

வணிக நிறுவனங்கள் எண்ணிக்கையில் 5½ லட்சம் அவர்கள் பயன்படுத்தும் மின் சக்தி மொத்தத்தில் 7.5 சதவிகிதம் விளக்குகள் கண்ணைக் கவரலாம், குற்றமில்லை, கண்ணைப்பறிக்கப் பகலிலும் விளக்குகள் தேவைதானா? மக்களைக் கவரக் கூடிய விளம்பரங்கள் அவசியம்தான் அதற்காகப் பகலை இரவாக்கும் முயற்சிகள் தேவைதானா? நட்சத்திர ஓட்டல்களைப் பார்க்கும் போது நமக்கு ஓர் ஏக்கம். இயற்கையான சூரிய வெளிச்சம் காற்றோட்டம் இவற்றைப் பயன் படுத்த முடியாதா? முடியும்!

பல விழாக்களில் சொலிக்கும் பல வண்ண விளக்குகள் நம்மை ஒரு கனவுலகத்துக்கே அழைத்துச் செல்லுகின்றன. ஆயினும்பற்றாக் குறை வேளையில் இவையும் ஒரு செயற்கையாகத் தோன்றவில்லையா?

தொலைக்காட்சி (டி.வி.) வந்ததில் நமக்கு ஒருவகையில் லாபமே டி.வி. பார்க்கும்நேரத்தில் ஓரளவுக்கு விளக்குகள் அணைக்கப்படுகின்றன. இதைப் போலப் பெரிய பெரிய அறைகளில் நிறைய விளக்குகளை தேவைக்கு மட்டும் வைத்துக் கொண்டு மேசை விளக்கு ஒன்று அல்லது இரண்டைப் பயன்படுத்தினால் போதும். விளக்குகளில் வகையையும் திறனையும் கணக்குப் பார்த்து வாங்க வேண்டும். அதிக வாட்டுகள் அவசியமில்லை. மின் செலவும் அதிகம். ஒரு வாட் மின் சாரம் செலவழிப்பது எளிது. உற்பத்தி செய்வது கடினம்.



தமிழகத்தில் பெரிய தொழில் அமைப்புக்கள் 1500 உட்பட்ட தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கையில் ஏறத்தாழ 1½ லட்சம். ஆயினும் மின் நுகர்வில் 50 விழுக்காடு ஆகிறது. ஆனால் மின் பற்றாக்குறை தட்டுபாட்டுக் காலங்களில் அவதிப்படுபவர்கள் இவர்களே. ஏனெனில் விவசாயம், வீடுகள் மற்றும் அத்தியாவசியத்துறைகள் மின் வெட்டிலிருந்து விலக்குப் பெறுகின்றன. தற்பொழுது வணிக நிறுவனங்கள் பாதிக்கப்படவில்லை. சிறு தொழில்களுக்கு சிறிது சலுகைகள் காட்டி வந்திருக்கிறோம். பெருந்தொழில்களில் மின் நுகர்ச்சி மொத்தத்தில் 40 சதவிகிதம். எனவே மின் தேவையில் 10 சதவீதமே. தட்டுப்பாடு ஏற்பட்டாலும், 25 சதவீதம் மின் வெட்டு அவசியமாகிவிடுகிறது.

தொழில் நிறுவனங்கள் பல ஆண்டுகளாகத் தங்கள் 10விருந்து 15 சதவீதம் வரை மின்வெட்டை ஏற்றுக் கொள்வதில் எந்தச் சிரமமுமில்லை என்பதைச் சொல்லி வந்திருக்கின்றன. அவற்றிற்கு அதிகப்படியான மின் வெட்டை புகுத்துவதற்கு இதன் மூலம் நியாயம் கற்பிக்க முயலவில்லை. இந்தத் துறையில் சிக்கனம் எப்படிச் சாத்தியம் என்பதை விளக்கவே இதைச் சொல்லுகிறேன்.

இந்த 10 அல்லது 15 சதம் என்பது 400 முதல் 600 மில்லியன் யூனிட்டுக்கள் ஆகும். அதாவது மாநிலம் முழுவதுக்குமான மின் சக்தித் தேவையில் 15லிருந்து 20 நாட்களுக்குப் போதுமானதாகும். இது பல சிறு தொழில்களுக்குச் சில மாதங்கள் 7லிருந்து 10 வரை (220 நாட்கள் அல்லது 330 நாட்கள் வரை) போதுமானதாக இருக்கும். தொழில் நிறுவனங்கள் தம் இயந்திரங்களின் திறனை (Efficiency) யை உயர்த்திக் கொள்ளுவதின் மூலம் மின் சக்தியைப் பயன்படுத்துவதில் கணிசமான முன்னேற்றம் இருக்கும்.

அடுத்து வேளாண்மைப் பயனீட்டாளர்கள்; எண்ணிக்கையில் 9 லட்சத்துக்கும் மேல். ''உழவே தலை'' என்பதை நாம் உணர்ந்துள்ளோம். மின் சக்தியைப் பயன்படுத்துவதில் 27 சதம். வாரியத்தின் மொத்த வருவாயில் 13 சதம். மின் இணைப்பின் மொத்த மின் சுமையில் 30 லிருந்து 40 சதம் வேளாண்மை விசையேற்றங்களாகும். குறைந்த மின் ஆற்றல் எண்ணுள்ள (Power Factor) இவ்விசை யேற்றங்களால் மின் இணைப்பில் ஏற்படும். இழப்பு கணிசமானதாகும். 20-லிருந்து 30 சதம் வரை இழப்பு ஏற்படுகிறது. இந்தக் குறையை நீக்கப் புதிய இணைப்புக்களுக்கு மோட்டாருடன் கப்பாசிட்டர்கள் இணைப்பதைக் கட்டாயமாக்கி இருக்கிறோம். விசையேற்றம் ஒன்றுக்கு இதனால் ரூபாய் 100 லிருந்து ரூ. 250 வரை கூடுதல் செலவு ஆகலாம். ஆனால் இதனால் விளையும் பயனோ அதிக விசையேற்றங்களுக்குப் பாதுகாப்பு (குறைந்த மின் அழுத்தத்திலிருந்து) மின் இணைப்பில் ஏற்படும் இழப்பில் குறைவு. சீரான மின் அழுத்த நிலை முதலியன ஆகும்.

இவ்விசையேற்றங்களின் திறன் இப்போது திருப்திகரமாக இல்லை. இது ஏறத்தாழ 30 சதமே ஆகும். இதை 50 சதத்துக்கு உயர்த்த முடியுமானால் இதனால் நாளொன்றுக்கு 1.2 மில்லியன் யூனிட்டுக்கள் அல்லது ஆண்டொன்றுக்கு 435 மில்லியன் யூனிட்டுகள் மிஞ்சும்.

''சேமிப்புக்காக வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகள் வருமாறு:

1. அனல் மின் நிலையங்களின் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எண்ணூர் நிலையத்திற்கென 18.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு ஐந்தாண்டு திட்டம் நிறைவேற்றப்படும்.

2. மிக உயர் அழுத்த, மேலும் உயர் அழுத்தத் துணை மின் நிலையங்களில் கப்பாசிட்டர் நிறுவுதல் - இதுவரை நிறுவப்பட்டது 230 மெகாவாட். நிறுவப்பட இருப்பது இதைவிடப் பெரிய அளவில் இருக்கும்.

3. பயனீட்டாளர்களின் சாதனங்களில் தாழ்வு அழுத்த கப்பாசிட்டர்கள் ஏறத்தாழ ½ லட்சம் எண்ணிக்கையும் நிறுவனத்திறன் 63 மெகாவாட்டும் ஆகும். இதனால் ஆண்டொன்றுக்கு12 மில்லியன் யூனிட்டுகள் சேமிக்கப்படும்.

4. மின் திட்ட அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளுதல். இதன் மூலம் மின் சக்தி இழப்பைக் (Line Loss) ஐக் குறைத்தல், இது வாரியத்தின் மிகுந்த கவனத்தில் உள்ளது.

இதற்கு முன் 21 சதவீதமாக இருந்த மின் இழப்பு இப்பொழுது 18.5 சதவீதமாக குறைந்துள்ளது. இதில் மேலும் ஒரு சதவீதம் குறைக்கப்படுமேயானால் 100 மில்லியன் யூனிட்டுக்கள் சேமிக்கப்படும் இதன் விலை மதிப்பு ரூபாய் 3 கோடியாகும்.

மின்னொளி நம் வாழ்வின் ஒளி. அதன் அவசியத்தை உணர்ந்து, அதைச் சிக்கனமாகப் பயன்படுத்தினால், நாட்டிற்கும் நல்லது; நமக்கும் நல்லது!

# குடியரசு தின விழா அணிவகுப்பு 26-1-'81
















## வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
## உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
## அத்தேவைகளைச்சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
## டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

***நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!***

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை—600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

# ஒருங்கிணைந்த ஊரக மேம்பாடு



**பூ. சோலையப்பன்**
**இணை வேளாண்மை இயக்குநர்**

'ஒல்லும்வாய் எல்லாம் வினை நன்றே' என்றார் வள்ளுவர். அதனால் தான் சிறு உழவர்களும், அவர்களைவிடத் தாழ்ந்தோரும் நன்மை பெற்று நலிவு நீங்கி, தமக்குத் தாமே உழைத்து செல்வம் சேர்த்து, சீருடன் வாழ வினை அல்லது தொழில் செய்யத் தூண்டுவதற்கு அரசால் அளிக்கப்பட்ட திட்டங்கள் தாம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டங்களாகும்.

'மே' தினம் உழைப்பாளிகளுக்கு ஓர் திருநாள். அதே போன்று தை முதல் நாள் உழவர் திருநாள். உழவருக்கும் உழைப்போருக்கும், ஓரெழுத்து மாதங்களான ''மே'' மற்றும் ''தை'' முதல்நாள் ஒதுக்கப் பெற்று அவற்றைத் திருநாளாக நாடு பரவிக் கொண்டாடுகிறோம். உடலுழைப்பு ஒன்றையே மூலதனமாகக் கொண்டு அன்று தொட்டு இன்று வரை ''வாழ்க்கைச் செலவை'' ஈடுகட்ட முயலும் அந்த வர்க்கங்கள், மக்கட் தொகையில் பெரும் பகுதி இருப்பினும் அவர்கள் எவ்வளவு மலிவாக நலிவுற்று நிற்கிறார்கள் என்பது ஒருவர் கூறித் தெரிய வேண்டிய நிலையில் நாடு இல்லை.

''தரித்திரர்களை தரித்திரர்களாகவே வைத்திருந்தால், அவர்கள் நாட்டின் சரித்திரத்தையே மாற்றிவிடுவார்கள் என்பதை ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் எடுத்துக் காட்டியுள்ளன. விடுதலை பெற்ற கடந்த முப்பத்தி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு முன்னேற்றம் இல்லை என்று முறையுடன் வளர்ச்சியைக் கண்ணுற்றோர் முனகக் கூட மாட்டார்கள். ஆனால் அன்று நாம் முப்பது கோடி-இன்று மூன்று இருபது கோடி; ஏறத்தாழ இரு மடங்கு மக்கள் தொகை. நம்மைப் போன்று விடுதலை பெற்ற நாடுகள்-இரண்டாம் உலகப் போரில்-சகலத்தையும் இழந்த நாடுகள் இன்று முன்னேறி உலகநாடுகளில் முன்னணியில் நிற்கும் போது, நாம் மட்டும் 'முன்னேறத் துடிக்கும் நாடுகள்' பட்டியலிலேயே இருக்கிறோம். ஏன்? ஏன்? எங்கே தவறு நிகழ்ந்தது?

ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து ஆக்கமுடன் செயலாற்றவில்லையா? இந்தியா செல்வம் பொதிந்த நாடு. 'இருப்பினும் இந்தியர்கள் ஏழைகள்' ஏன்? போட்ட திட்டங்கள், செயலாற்றிய வேகம், செலவழிந்த தொகைகள் எதிலும் பஞ்சமில்லை. ஆனால் அதன் பயன்கள் யாரை அடைய வேண்டுமோ அவர்களை அடையாமல், ஏழை ஏழையாகவே இருக்க, செல்வர்கள் மேலும் செல்வர்களாக மாறி விட்டார்கள். ஆதலினால் தான் ஏற்றத் தாழ்வு தெற்றென அரசிற்கு விளங்கி, எல்லோருக்கும் என்று திட்டங்கள் வகுக்காமல், ஏழைக்கென்றே, ஏழையில் ஏழைக்கென்றே வகுத்துச் செயலாற்றப்படும் திட்டங்களே, சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவையும் அவை போன்றவையும் ஆகும்.

உழவர்கள் சிறப்பாக சிறு உழவர்கள் சின்னஞ்சிறு உழவர்கள் ஏழைப்பண்ணைப்பணியாளர்கள் மற்றும் ஊரக கைவினைஞர்களின் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சமூக நீதி வழங்கவும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதாவது 1971-72 முதல் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் அமலுக்கு வரத் துவங்கியது. கடந்த ஒன்பதாண்டு காலத்தில் சிறுகச் சிறுக மாவட்டங்களிலுள்ள ஏறக்குறைய 80 விழுக்காடு ஊராட்சி ஒன்றியங்களில் சிறு உழவர் மேம்பாடு மற்றும் அதனை ஒத்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1980-81 ஆம் ஆண்டு நாடு முழுதும், எல்லா ஒன்றியங்களிலும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் அமல்படுத்தப்படும். அதற்கான நிதி ஒதுக்கீடும் திட்டத்திற்கான ஏற்பாடும் செயல்பட்டுள்ளன என அறிகின்றோம்.

சின்னஞ்சிறு உழவர் எனப்படுவோர் 2½ ஏக்கர் புன்செய்

அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலம் பயிரிடுவோர் ஆவர். ஐந்து ஏக்கரா புன்செய் அல்லது 2½ ஏக்கர் நன்செய் பயிரிடுவோர் சிறு உழவர் ஆவர். நிலமற்ற ஏழை கைவினைஞர் என்போர் அவர்கள் தொழில் மூலம் ஆண்டொன்றுக்கு ரூபாய் மூவாயிரத்திற்கு கீழே வருமானம் அடைவோர் ஆவார். சமீப காலத்தில் ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின் பேரில், ஆண்டு வருமானம் ஒன்றையே கணக்கிட்டு அதாவது ஆண்டிற்கு ரூபாய் 3,000-க்கு கீழ் வருமானம் பெறுவோர் சின்னஞ்சிறு உழவர் பண்ணைப் பணியாளர் ஏழைக் கைவினைஞர் என்றும் ரூ. 3,600க்கு கீழே பெறுவோர் சிறு உழவர் எனவும் வரையறுக்கப் பெறலாம் எனக் கருதி அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

திட்ட செயல்முறையைக் கவனிப்போம். ஆண்டொன்றுக்கு ரூ. 3,600-க்கு கீழ் வருமானம் பெறுவோர், குறிப்பிட்ட ஊரில் குடியிருப்புப் பெற்றவர் யாரும் அதற்குரிய சான்றிதழ் வருவாய்த் துறைப் பணியாளர்கள் மூலம் பெற்று ஊராட்சி ஒன்றியப் பணியாளர் குறிப்பாக ஊர்நல அலுவலரின் பரிந்துரை பெற்று மாவட்ட சிறு உழவர் மேம்பாட்டு நிறுவன தனித்தாசில்தாரால் அடையாள எண் அதாவது சிறு உழவர் என்றோ ஏழைப் பண்ணைப் பணியாளர் என்றோ அடையாள எண், ஒன்றியம் வாரியாக வழங்கப்படுவர். அப்படி அடையாள எண் வழங்கப் பெறுவோர் யாவரும் அரசால் வழங்கப் பெறும் சலுகைக்கு உரியவர் ஆனாலும், சலுகை கோருமுன் அவர்கள் ஆண்டு வருமானம் தனிப்பட்ட நபருக்கு என்று கணக்கிடலாகாது. குடும்ப வருமானம் ஆண்டொன்றிற்கு 3600 ரூபாய்க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட முடியாமல் இன்னல் உறுவோர் தங்கள் வருமானத்தைக் கணிசமான அளவு அதிகப்படுத்த சுயமாக எந்த ஒரு முன்னேற்றப்பணி செய்ய அதன் மூலம் வருமானம் அதிகமாகும் என்ற நிலை விளக்கப்படுமானால் அவர்கள் குடும்பத்திற்கு தலா ரூபாய் பத்தாயிரம் வரையில் வர்த்தக வங்கிகளோ, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியோ, மாநில நிலவள வங்கியின் கிளைகளோ, கடன் வழங்கும் அல்லது வழங்க ஏற்பாடு செய்யப்பெறும். பெற்றுவரும் வருமானத்தை அதிகப்படுத்தும் வகையிலோ, அல்லது கூடுதல் வருமானம் பெறும் வகையிலோ ஆக்கச் செயல்முறைத் திட்டம் இருக்குமானால், பெறும் அதிக வருமானத்தில் ஒரு பகுதியைக்கொண்டு மூன்று ஐந்து ஆண்டுக் காலத்தில் குறிப்பிடுகிற தவணையில் முக்கால் அல்லது மூன்றில் இரண்டு பங்கு கடனை திருப்பி செலுத்த முடியும் வகையில் செம்மையாக சுறுசுறுப்புடனும், துணிவுடனும் கருமமே கண்ணாக முன்னேற்றமே குறிக்கோளாகப் பயனடைவோரும் அவர் குடும்பமும் செயலாற்றும் என்ற நம்பிக்கையை வங்கிப் பொறுப்பாளர்களுக்கு ஊட்டி விட்டால், அவர்கள் தேவையான தொகையைக் கடனாக வழங்கி, முன்னேற்றப் பணியைத் துவக்க ஆவன செய்வார்கள். அவ்விதம் கடனைப்பெற்ற வுடனேயே, சிறு உழவர் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளரான திட்ட அலுவலர் குறிப்பிட்ட வங்கிகளிடமிருந்துகோரிக்கையைப் பெற்று சிறு உழவராயிருந்தால் 25 விழுக்காடும் மற்றோருக்கு 3.33 விழுக்காடும் மானியம் வழங்கி கடனில் ஈடு கட்டச்செய்து உரிய தொகையை, வங்கிகளுக்குக் காசோலையாக வழங்கி விடுவார். அது மட்டுமின்றி நிறுவனத்தில் பணியாற்றும் ஒவ்வொரு துறை அலுவலர்கள் வாயிலாகப் பயனடைவோருக்கு எந்தெந்தத் துறையில் விஞ்ஞான நுட்ப அறிவுரை மற்றும் ஆக்கச் செயல்முறை தேவையோ அவற்றை அளிக்க ஆவன செய்வார். மேலும் ஆண்டு வருமானத்தை அதிகப்படுத்தும் நோக்கத்தோடு, பொதுப்படையாக எல்லாப் பயனடைவோரும் பலன் பெறும் பொருட்டு, அந்தந்தப் பகுதிக்கு ஏற்றவாறு தகுதியைப் பொறுத்து முழு மானியத்துடன் சிலபல உட் தேவை தளவாடங்களை (Infrastructure) தரவோ, செய்யவோ இத்திட்டங்களில் வகை செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, கூடுதல் வருமானம் பெறுவதற்காகப் பயனடைவோர் செய்ய எண்ணும் ஆக்கச் செயல்களுக்கு, சிறுதொழில்களுக்கு தேவையான பயிற்சியை பயனடைவோருக்கு, அடையாளங்கண்ட வேலையில்லாதோருக்குத் தேவைக்குத் தக்க கால அளவில் மாதம் தலா நூறுரூபாய் வரையில் பராமரிப்புச் செலவும் ரூபாய் நாற்பது பயிற்சிச் செலவும் முழுமானியம் வழங்கி அளிக்க ஏற்பாடு செய்கிறது. இப்பயிற்சியை ஊரக இளைஞர் தன் முயற்சியில் வேலை பெற பயிற்சி (இ.த.மு.வே.ப) Training Rural Youth for Self Employment (TRYSEM) என்ற திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

நடைமுறைக்கு வருவோம்:—

சிறு உழவர்களுக்குச் சின்னஞ்சிறு உழவர்களுக்கு அவர்கள் வருமானத்தை அதிகப்படுத்த எல்லா உரச் சத்துகளும் விளைவிக்கும் பயிருக்கு அளித்தால் விளைவு பெருகும் என எடுத்துக் காட்ட உர விளக்கப் பாத்தி அமைக்க பருவத்திற்கு ரூபாய் நூறு அளவிற்கு இரண்டு பருவத்திற்கு முழு மானியத்தில் விதை உரம் மற்றும் பூச்சி பூசண மருந்துகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. உழவிற்குத் தேவையான எல்லாக் கருவிகளையும் குறிப்பாக இயந்திர சாதனங்களையும் மானிய விலையில்



வழங்கவும், உழவு மற்றும் வண்டி மாடுகள் கடன் மானியத்தில் பெறவும், தழைச்சத்து நீக்கி, மற்ற தேவையான உரங்கள் நுண்ணூட்டச் சத்துக்களைப் பயன்படுத்தினால் அதற்குரிய மானியத்தை, பெறும் கடனில் ஈடு செய்யவும், தென்னை மற்றும் பழ மரங்களுக்கு உரிய கன்றுகளை மானிய விலையில் வாங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் உழவர்கள், புதிய கிணறு வெட்டவும், கிணறுகளை ஆழப்படுத்தவும், நீரேற்றுக் குழாய் இயந்திரம் முதலியன வாங்கவும், நிலங்களில் சிமெண்ட் குழாய் புதைக்கவும் நீண்ட கால் கடன் வழங்கி அதற்கு உரிய மானியமும் அளிக்கப்படுகிறது.

இவையன்றி, ஊரக கைத்தொழில்கள் வளர கருமாரி மற்றும் தச்சுத்தொழில் மண் பாண்டத் தொழில் உழவுக்கருவிகள் தயாரித்தல் நடமாடும் விற்பனைத் தொழில் (சைக்கிள்) கைத்தறித் தொழில், பாய் முடைதல் மற்றும் நெய்யும் தொழில் குறிப்பாக பெண்களுக்கு தையற் தொழில் போன்றவற்றிற்கு வங்கி மூலம் கடன் வழங்கி மான்யமும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

கூறியவையெல்லாம் எடுத்துக் காட்டுகளே. அவை மட்டுமே அல்ல. வாழ்க்கைத் தரம் உயர, வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்போரை குறிப்பாக தாழ்த்தப் பட்டோரை, நலிவுற்றோரை.

இதுகாறும் கூறியவற்றால் ஏழைக்கு—ஏழையிலும் ஏழைக்கு, என அரசு திட்டங்களை செயல்படுத்தும் அவசியத்தைப் புரிந்து திட்டப் பணியாளர்கள் செயலாற்ற வேண்டும். ஏனெனில் ஏழைகள் அவர்கட்கென உள்ள திட்டங்களைக் கூட அறிந்து கொள்ளும் வாய்ப்பில்லை. அவர்களிடம் பணியாளர்களே சென்று விளக்கினால்தான் புரிந்து கொள்வார்கள். உலக அறிவு குறைந்தவர்களானதால், பணியாளர்களே எடுத்துக் கட்டிக்கொண்டு செயலாற்றினாலொழிய திட்டப்பணி அவர்களைச் சென்று அடையாது. நடுவிலுள்ள ஓரளவு வசதி படைத்தோர் விஷயம் அறிந்தோரே பலனடைவார்கள். ஆதலின் வள்ளுவரின்




துணைத் தொழிலாக கால் நடை வளர்ப்பு குறிப்பாக கறவை மாடுகள் வளர்க்க, பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் அமைத்து தகுதிக்குட்பட்ட உறுப்பினர்களுக்கு கடன் மானியத்தில் கறவை மாடுகள் வழங்கி, கறக்கும் பாலை, ''பால் வழங்கும் கூட்டுறவுச்சங்கம் மூலம்'' வழங்க - பிணைப்பு ஏற்படுத்தி அவர்கள் மூலமே கடன் தவணைகளைப் பெற ஏற்பாடு செய்து குறிப்பாக நிலமில்லா பண்ணைப் பணியாளர்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பயன்பெற திட்டம் செயலாற்றப் பெறுகிறது.

இத்திட்டங்களினால் பயனடைவோரில், தாழ்த்தப்பட்ட இனக் குடும்பங்கள் குறைந்தபட்சம் ஐந்தில் ஒன்று இருக்கும் வகையில் வலியுறுத்தி வங்கிகள் கடனும், நிறுவனம் மானியமும் வழங்க ஊக்குவிக்கப்படுகிறது.

என்ன செய்து முன்னேற்றலாம் என்று எந்த திட்டம் வகுத்தாலும் அவை நடைமுறைக்கு ஒத்திருந்தால், நன்மை பயக்கும் என்று நம்பிக்கை அளித்தால் பயனடைவோர் சிறு உழவர் சின்னஞ்சிறு உழவராகவோ அல்லது பண்ணைப் பணியாளராகவோ அடையாளங் கண்டிருந்தால் அவர்களுக்கு வங்கி மூலம் கடன் வழங்கவோ அதற்கு மான்யம் வழங்கவோ தேவையான பயிற்சி முழுச் சலுகையில் தரவோ ஏழை எளியோருக்கு பலன் தருமானால் அதற்குரிய உள்தளவாட மற்றும் ஏற்பாடுகளை முழு மான்யத்தில் செய்து தர சிறு உழவர் மேம்பாடு மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பொறுப்பேற்று ஏறக்குறைய மாவட்டத்திற்கு ஒன்று முதல் 1.5 கோடி வரை மான்யதொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

''குடி செய்வல் என்னும் ஒருவற்கு தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்

என்ற குறளைப்புரிந்து கொண்டு குறுகிய நோக்கை விடுத்து விரைந்து செயலாற்ற வேண்டும்.

''ஏழை மக்களுக்கு உதவி செய்வது என்பது ஏழைத் தன்மையே மனித சமுதாயத்தில் இல்லாதிருக்குமாறு செய்வதேயொழிய அங்கொருவனுக்கும் இங்கொருவனுக்கும் பிச்சைச் சோறு போட்டு சோம்பேறியாக்குவதல்ல'' என்று தந்தை பெரியாரின் புரட்சிமொழிகளுக்கு ஏற்ப, நாடு முழுவதும் எல்லா ஒன்றியங்களிலும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற இருக்கிறது. அதற்கு எல்லோரின் ஒத்துழைப்பு குறிப்பாக வங்கிகளின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம்.

# வைகைக் கரையில் வண்டமிழ்ப் புலவர்குழு!



-இல. இராசேந்திரன்

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் மூன்றாம் நாள் (7-1-81) நிகழ்ச்சி புலவர் குழு அமர்வாக நிகழ்த்திடப் பெற்றது.

திருப்பாம்புரம் சகோதரர்கள் நாயன இசையோடு துவங்கிய இந்நிகழ்ச்சியில் திரு. ஔவை நடராசன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். புலவர் குழுச் செயலாளர் கோவை திரு. இளஞ்சேரன் அவர்கள் புலவர் குழுவினர் 49 பேர்களையும் அறிமுகம்செய்து வைத்தார்.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தொடக்கவுரையாற்றினார். மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. வ.சுப.மாணிக்கம் அவர்கள் தலைமையுரையாற்றினார். மதுரை திரு. கி. பழனியப்பன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். புலவர் குழுவினர் சிலர் தொடர்ந்து உரையாற்றினர்.

பின்னர், மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் பாராட்டுரை வழங்கியதோடு-உலகத்தமிழ் மாநாட்டு மலர் குறித்தும் விளக்கினார்.

முரசுக் கட்டிலில் துயில் கொண்டிருக்கும் மோசி கீரனாருக்கு, மாமன்னன் பெருஞ்சேரலிரும்பொறை கவரி வீசிடும் காட்சியினை முகப்போவியமாகக் கொண்ட உலகத் தமிழ் மாநாட்டு மலரினை, மாண்புமிகு அறங்கூறு அவையத்தின் தலைவர் திரு. எம். எம். இஸ்மாயீல் அவர்கள் வெளியிட்டார். மலரின் முதல் பிரதியை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெருமகிழ்வோடு பெற்றுக் கொண்டார்.

**ஔவை நடராசன் :**

திரு. ஔவை நடராசன் அவர்கள் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

காகம் கரைந்து சேவல் கூவிய பின்பே விடிகின்ற ஊர்கள் உண்டு. ஆனால் இந்த மதுரையம்பதியில் புலவர் பெருமக்களின் பாடல் கேட்டே பொழுது விடியும் என, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பாடல் ஒன்றுண்டு. அப்படிப் புலவர் பெருமக்களுக்குப் பெருஞ்சிறப்பு இருந்த இந்த ஊரில் தமிழகப் புலவர் குழு அமர்வு நிகழ்கிறது. இதன் மூலம் இன்றைய காலைப் பொழுது சீரிய பொழுதாக விடிகின்றது.

**கி. ஆ. பெ. விசுவநாதம் :**

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தமது தொடக்க உரையில் தெரிவித்த கருத்துக்களாவன :

1958-ல் அமைக்கப் பட்டது இந்தப் புலவர் குழு. தமிழ்நாட்டில் உள்ள 27ஆயிரம் தமிழாசிரியர்களின் பிரதிநிதிகளாகவே இந்த 49 புலவர்குழு உறுப்பினர்களும் அமர்ந்திருக்கிறார்கள்.

ஆந்திரத்திற்கும், கேரளாவுக்கும் கர்நாடகத்திற்கும், டில்லி மாநகருக்கும் போய் எங்கள் புலவர் குழுவானது தமிழ்ப் பணி செய்து வந்திருக்கிறது. இது எங்கள் ஐம்பதாவது கூட்டம். அதாவது பொன்மனச் செம்மல் முன்னிலையில் நடைபெறுகிற பொன் விழாக் கூட்டம்.

புலவர்களுக்கும் மக்களுக்கும் சரியான தொடர்பு உண்டாக வேண்டும். அந்த வகையிலும்— நாட்டுக்கும், மொழிக்கும், சமூகத்திற்கும், மக்களுக்கும், கல்வித் துறைக்கும் நல்ல பல அறிவுரைகளை எடுத்தியம்பும் வகையிலும் செயல்பட்டு வருகிறது எங்கள் புலவர் குழு.

இந்தக் குழு உண்டாகக் காரணமே பெரியார் அவர்கள்தான்.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்றநிலை உண்டாக அரசு வகை செய்ய வேண்டும். அப்படிப்பட்ட காரியங்களைச் சட்டமாக்குவதற்கு மட்டுமல்லாமல், செயல்படத் தக்க வகையிலும் அரசு எந்திரம் முடுக்கி விடப்பட வேண்டும்.

**வ. சுப. மாணிக்கம் :**

திரு. வ. சுப மாணிக்கம் அவர்கள் தனது தலைமை உரையில் தெரிவித்ததாவது

போற்ற வேண்டியதைப் போற்றுவதும் நடைபெற வேண்டியதை நடைபெறச் செய்வதும் எங்கள் புலவர் குழுவின் பணியாகும். போற்றத் தகாததைத் தூற்ற மாட்டோம்; எப்படி நடந்து கொள்ள வேண்டுமென வலியுறுத்துவோம்.

முதன் முதல் மொழிக்காக மாநாடு நடத்துவதென்பது தமிழுக்குத்தான். நமக்குப் பிறகுதான் மற்றவர்கள் தங்கள் மொழிக்கு விழா எடுக்கலாயினர்.

இப்போதுள்ள ஆரம்பப் பள்ளிகளில் ஆங்கிலமே முக்கியப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. அங்கே நமது குழந்தைகள் ஆங்கிலக் குழந்தைகளாக மாற்றப்படுகிறார்கள். இதனை முக்கியப் பிரச்சினையாக அரசு எடுத்துக் கொள்ள வேண்டும்.

குமரிக்கண்டம் அழிந்தாலும் தமிழ் இருக்கிறது. இப்போது பரவி வரும் ஆங்கில மோகத்தால், தமிழ்நாடு இருந்தும் தமிழ் அழிந்து விடுமோ என நான் அஞ்சுகிறேன்.

**கி. பழனியப்பன் :**

மதுரை திரு. கி. பழனியப்பன் அவர்கள் தனது வாழ்த்துரையில்-''தமிழ் சென்னை, தமிழ் நெல்லை, தமிழ் கோவை என்று கூறுவது இல்லை. ஆனால் மதுரையைத் தமிழ் மதுரை என்றே இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆகவே, இங்கே உலகத் தமிழ் மாநாடு நடப்பதுதான் பொருத்த முடையது'' என்று குறிப்பிட்டார்.

**டாக்டர் இரத்தினசபாபதி :**

'தத்துவ வளம்' என்ற தலைப்பில் டாக்டர் இரத்தினசபாபதி அவர்கள் பேசியதாவது :

எல்லாருக்குமே தன்னை அறிவாளர்கள் என்று சொல்லிக் கொள்வதிலே விருப்பம் இருக்கிறது. அறிவு எப்படி அமைய வேண்டும்? எப்படி தோன்றிற்று? அறிவின் ஆற்றல் என்ன என்று ஆராய்வதுதான் தத்துவம்.

இறைவன் என்னை ஆட்கொள்வதற்காகத்தான் இருக்கிறானே தவிர நான் அவனைத் தேடிச் செல்ல மாட்டேன் என்ற தத்துவார்த்தக் கருத்தை வரலாற்று ரீதியில் கண்டிருக்கிறது மதுரை. தொல்காப்பியம் தெய்வத்தைக் கருப்பொருளாகக் கொள்கிறதே தவிர, முதற்பொருளாகக் கொள்ளவில்லை.

அத்தகைய தத்துவ வளம் மிக்கது நம்முடைய தமிழகம்.

**புலவர் அரசப்பனார் :**

'புறவளம்' என்னுந் தலைப்பில் புலவர் அரசப்பனார் அவர்கள் பேசுகையில் ''புறநானூற்றிலே தமிழர் வீரம், கொடை, பண்பாடு எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது'' என விவரித்தார். அவர் மேலும் பேசுகையில்—''ஆனால், புறநானூற்று வீரமும் கொடையும் பண்பாடும் இப்போது சரிப்படுமா என்பதற்கு இன்று நடக்கும் பலவகைக் காட்சிகளே சாட்சிகளாய் இருக்கின்றன'' என்று குறிப்பிட்டார்

**பேராசிரியர் சுந்தரமூர்த்தி :**

''உரைவளம் குறித்துப் பேசிய பேராசிரியர் திரு. சுந்தரமூர்த்தி அவர்கள்—''மூலம் விளங்கத்தான் உரைகள் வந்தன. இன்றோ உரைகள் விளங்க உரைகள் வருகின்றன. நம் தமிழின் நிலை அப்படி ஆகிவிட்டது. இந்த நிலை மாற வேண்டும்'' என்றார்.

**புலவர் இளஞ்சேரன் :**

'மரபுவளம்' என்பது பற்றி உரையாற்றுகையில் புலவர் திரு. இளஞ்சேரன் அவர்கள் தெரிவித்த கருத்தாவது :

மரபு என்றால், 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்று எல்லா நாட்டார்க்கும் உள்ள தன்மை. கன்னித் தன்மையின் காவல் அணியாகக் கருதப்பட்டது சிலம்பு. இது அப்போதைய மரபு. ஓங்கிய வேலைக் கண்டு கண்ணிமைக்காமலிருப்பதும், கண்ணிமைத்தவன் மேல் வேல் வீசாமல் தவிர்ப்பதும் பழந் தமிழகத்தின் வீரமரபு.



**மேரி மாசிலாமணி அம்மையார்:**

'கற்பனை வளம்' என்ற தலைப்பில் பேசிய திருமதி மேரி மாசிலாமணி அம்மையார் அவர்கள் பேசுகையில்—''கவிதைக்கு அவசியமானது கற்பனை. உள்ளதோடு இல்லாததையும் சேர்த்து அழகுபடக் கூறுவதே கற்பனை. காதல் பாடல்களில் மட்டுமல்ல; பக்திப் பாடல்களிலும் கற்பனை கையாளப் பட்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

**புலவர் ந. இராமநாதன் :**

புலவர் ந. இராமநாதன் அவர்கள் 'புதுமை வளம்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துகையில்—''புதுமைச் சிந்தனைக்கு வளம் கொடுத்துப் பாடிய பெருமை பாரதியாருக்கும் பாரதிதாசனாருக்கும் நிரம்ப உண்டு'' என்றார். இருவர் பாடல்களிலுமிருந்து மேற்கோள்களாகச் சில கவிதைகளை அவர் எடுத்துக் காட்டினார்.

**டாக்டர். சி. பாலசுப்பிரமணியம் :**

டாக்டர் சி. பாலசுப்பிரமணியம்அவர்கள் 'மொழி வளம்' பற்றிப் பேசியதாவது :

'உலகெலாம்' எனத் தொடங்கும் திருமுருகாற்றுப்படை, திருப்பரங்குன்றத்தில் தொடங்கி பழமுதிர்சோலையில் முடிகிறது. பரிபாடலில் ஆற்றைப் பற்றியுள்ள முதலாவது பாடல் வைகையைப் பற்றியதுதான். ஆக, மதுரைக்கே பழம் இலக்கியங்களில் சிறப்பு.

திராவிட மொழிகளில் தமிழானது பல்வேறு நாட்டு மொழிகளோடும் தொடர்பு உடையதாக இருந்தது. இத்தகைய வரலாற்றுப் பெருமை தமிழ் மொழிக்கே உண்டு.

**புலவர் சி. நயினார் முகமது :**

'செய்யுள் வளம்' என்ற தலைப்பில் புலவர் சி. நயினார் முகமது அவர்கள் பேசுகையில் ''தமிழ்மொழி தனக்கு எனத் தனி இலக்கண வளத்தை அமைத்துக் கொண்டிருக்கிறது. செய்யுள் இலக்கியம் ஒரு நல்ல குறிக்கோளை நோக்கி நம்மை இட்டுச் செல்லும் சிறந்த சாதனமாகும்'' என்று கருத்தறிவித்தார்.

**சுந்தரம் :**

'இசைவளம்' என்பது பற்றிப் பேசிய திரு சுந்தரம் அவர்கள்—'' வளம் மிகுந்த தமிழிசையில் 'சரக்குப் போடுதல்' 'சங்கதி போடுதல்' என்று ஏதேதோ கொச்சையாகச் சொல்கிறார்கள். அந்தத் தன்மைகளை 'வந்தது வளர்த்தல்' 'திருத்தி' என்ற பழந்தமிழ்ச் சொற்களாலேயே குறிப்பிடலாம்'' என்றார்.

**முதல்வர் அளித்த மரியாதை :**

'ஒலிவளம்' என்ற தலைப்பில் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பேசிய பின்— மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு, வ. சுப. மாணிக்கம் அவர்கள் விழா நிறைவுரையாற்றினார்.

பின்னர்— மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், புலவர் குழுவினர் அனைவருக்கும் பட்டாடை அணிவித்து, தஞ்சாவூர்த் தட்டு வழங்கிச் சிறப்புச் செய்தார்.



டெல்லியில் குடியரசு தினவிழா
அணிவகுப்பில் கலந்துகொண்ட
தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தி



# ஒருமைப்பாட்டை உணர்த்தும் ஒப்பற்ற பொருட்காட்சி

நான்காவது ஆட்டை நிலவரமென்ன?....

மின்சாரம் இல்லாமல் எரியும் விளக்கை நாம் எங்கேயாவது பார்த்திருக்கிறோமா?

பேசும் எலும்புக்கூடு பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோமா?

தீக்குச்சியினால் எரியும் மின்விளக்கைத் தான் பார்த்திருக்கிறோமா?

இவைமட்டுமல்ல, இன்னும் எத்தனையே விந்தைகளை-அற்புதங்களையெல்லாம் சென்னைத் தீவுத் திடலில் அமைந்திருக்கும் அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் நாம் பார்த்து மகிழலாம்.

பரதக் கலையின் பாங்கினை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ள நடராசர் திருவுருவச் சிலை நுழைவு வாயிலினுள் நுழைகிறோம்.

இன்னொரு நுழைவாயில் எது? அதுதான் அண்ணாசாலையில் கூட்டுறவு ஒன்றியத்துக்கு எதிரில், சிலப்பதிகார 'தோரணவாயில்' முறையில் அமைந்துள்ள நுழைவாயில். இவ்விரண்டும் பொருட்காட்சியின் இரு கண்களாய் அமைந்துள்ளன. சுற்றுலாத்துறையினால் எட்டாவது தடவையாக நடத்தப்படும் இந்தப் பொருட்காட்சியில், 303 அரங்குகள் இடம் பெற்றுள்ளன. அவை: மாநில அரசுத்துறை அரங்குகள்: 22, இதே போல மாநில அரசு நிறுவனங்கள்; 19. மத்திய அரசுத்துறை-நிறுவனங்கள்: 16. பிற மாநில அரசு-நிறுவன அரங்குகள்: 13. தனியார் துறை அரங்குகள்: 28. கடைப்பகுதிகள்: 205.



பி.வி. கிரி

## பேசும் எலும்புக்கூடு!

பொருட்காட்சியினுள் ஒரு சுற்று சுற்றி வருவோமா?

காவல்துறை அரங்கு கண்ணில்படுகிறது. உள்ளே நுழைகிறோம். காவல்துறை சாதனைகள்-புள்ளி விவரங்கள் பேசுகின்றன. கண்துஞ்சார்—மெய் வருத்தம் பாரார் என்னும் தலைப்பில், ஊர் உறங்கிக் கொண்டிருக்கிற வேளையில் காவலர்கள் ரோந்து வருகின்ற காட்சியும், சமூக விரோதிகளால் தாக்கப் பட்டு அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்ற காட்சியும் நம்மை சிந்திக்க வைக்கின்றது.

அரங்கிலிருந்த ஒருவர் இருட்டறைக்குள் அழைத்துச் செல்கிறார். பயந்துகொண்டே போகிறோம். உள்ளே நுழைந்ததும் நம் கண்ணில் சட்டென்று படுவது ஒரு எலும்புக்கூடு! அதுவும் பத்து வயதுச் சிறுமியின் எலும்புக்கூடு! அது பள்ளிச் சீருடையோடு காட்சியளிக்கிறது! சற்று நேரத்திற்கெல்லாம் அது பேச ஆரம்பிக்கிறது... எலும்புக் கூட்டின் வாயசைகிறது.... குரல் கேட்கிறது....

மகிழ்ச்சியுடன் வீட்டைவிட்டுபெற்றோர்களுடன் காரில் சென்ற அச்சிறுமி, வழியில் விபத்துக்குள்ளாகி இறந்து விடுகிறாள். அதற்குக்காரணம், அவளது தந்தை காரை அதிவேகமாக ஓட்டியதுதான். வேகமாக ஓட்டுவதால் விபத்து நேரிடும் என்பதை, விபத்தில் இறந்த சிறுமியே கூறுவதுபோல அருமையாக





# பொய்யாமொழி

சென்னையில் நடைபெறும் அனைத்து இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் அமைந்துள்ள கல்வித்துறை அரங்கு. 'பொய்யாமொழி' எனும் பெயருடன் திகழ்கிறது.

தமிழ்நாட்டின் மொத்தவரவு செலவு திட்டத்தில் ஏறத்தாழ 25 சதவீதம் வரை அதிக அளவில் ஒதுக்கிடு பெற்றிருப்பது கல்வித் துறையாகும். இத்தகை சிறப்பு மிக்க கல்வித்துறையின் கீழ்ப் பணியாற்றும் பல பிரிவுகளையும் ஒரே இடத்தில் ஒரே அரங்கமாக மிகப் பெரிய அளவில் சேர்த்திருக்கிறார்கள். 6,500 சதுர அடி பரப்பளவில் இவ்வரங்கம் அமைந்துள்ளது.

இவ்வரங்கின் மேற்கு வாயிலின் வழியாக உள்ளே நுழைகிறோம். மூன்று சோடியம் ஆவி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட இந்நுழைவாயில் தற்காலக் கல்வி என்ன என்பதனை விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

இங்கு பொய்யாமொழி என்ற மின் கணிப்பி (Calculator) இயங்குவதை காணலாம். இது பலவித நுண்செயல்களை செய்ய வல்லது. இதன் கணிப்பு என்றுமே பொய்க்காதாகையால் இதைப் பொய்யாமொழி' என்று அழைக்கலாம். அன்றாட வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் இக்கருவியை விரிவாகப் பயன்படுத்துகின்றோம்.

மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை பொருட்களான பேனா, பென்சில், பால் பாயிண்ட் பேனா, போன்றவற்றைக் கொண்ட ஒரு கிண்ணத்துடன் இது பொருத்தப்பட்டுள்ளது. இதற்குப் பின்திரையாக அமைந்திருப்பது ஒரு சிறந்த புத்தகமாகும். இதில் ''அறிவுடையார் எல்லாம் உடையார்'' ''Knowledge is Power'' என்ற வள்ளுவரின் வாக்கு எழுதப்பட்டுள்ளது.

சிவப்பு இரத்தினக் கம்பள வரவேற்புடன் இவ்வரங்கில் நுழைகிறோம். தமிழ்நாட்டின் பொதுநூலகங்கள் என்ன செய்கின்றன என்பதை முதல் பகுதி சித்தரிக்கிறது.

குழந்தைகளுக்காக ஜப்பான் நாட்டில் அச்சிடப்பட்டுள்ள புத்தகங்கள் நம்மை கவருகின்றன. இதையொட்டி தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனத்தின் பணிகளை விளக்கும் காட்சிகள்.

பள்ளிக் கல்வித் துறையின் பகுதியில் பின்புறச் சுவரில் நர்சரி வகுப்பிலிருந்து மேல் நிலைப் பள்ளி நிலைவரை குழந்தையின் வளர்ச்சியை எடுத்துரைக்கும் மிகப்பெரிய புகைப் படங்கள் பொருத்தி வைக்கப்பட்டுள்ளன. இங்கு மாணவர்கள் தாமே செய்தவைகளை இயக்கிக் காட்டுகின்றனர். அவை நம் மாணவர்களிடையே வளர்ந்து வரும் அறிவியல் பொறியியல் போக்கினையும், மனப்பான்மையையும் விளக்குகின்றன. பார்ப்போரை வியக்க வைக்கும் பொம்மலாட்டக் காட்சியும் இங்கு உள்ளது. இது பாட போதனைக்கு எவ்வாறு சிறந்த துணைக் கருவியாகும் என்பதையும் விளக்குகிறது.

பள்ளிக் கல்வித்துறையின் பல்வேறு செயல் திட்டங்களின்

சித்திரித்திருக்கிறார்கள். வெளியே வரும் போது கண்களைத் துடைத்துக் கொள்கிறோம்.

**நில் கவனி புறப்படு !**

சென்னை நகரையே குலுக்கிய பிரேமா கொலை, வசந்தி கொலைக் காட்சிகளைப் புகைப்படங்கள் மூலமாகப் பார்த்து திடுக்கிடுகிறோம். இன்னொரு இடத்தில் திருடர்களிடமிருந்து கைப்பற்றிய பல்வேறு பொருள்கள்—துப்பறியும் நாய்களான ரீட்டா, சீசர், பிளாக்கி, ராணி ஆகியவற்றையும் கண்டு மலைக்கிறோம் - புகைப்படங்கள் மூலமாக!

ஒரு பக்கத்தில் காவல்துறை பெற்ற பதக்கங்கள் வெள்ளிக் கோப்பைகளைப் பார்க்கிறோம். மறுபக்கத்தில், வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இன்று வரையிலான தொப்பிகளைப் பார்க்கிறோம்.

'நில் கவனி புறப்படு' என்பதைச் சொல்லாமல் சொல்கிறது—சாலை விபத்துக்கள் படக்காட்சி.

வங்கிகளிலும், பங்களாக்களிலும் கொள்ளை, திருட்டு போன்றவை நடைபெறாமல் தவிர்க்க 'அபாய ஒலி எழுப்பும் கருவி' ஒன்றை அமைக்கலாமென்றும், அதன் செலவு ஐயாயிரம் ரூபாய்க்குள் அடங்கும் என்றும் இவ்வரங்கில், காவல் குற்றப்பிரிவுத் துணை ஆணையாளர் திரு ஜி. எஸ்.ரமணன் கூறினார்.

'சாலை விபத்துக்களைத் தவிர்ப்பது எப்படி?' என்பதை 'ஓட்டுநர்களுக்கான பரிசோதனை' என்ற தலைப்பில் மேலை நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட இரு இயந்திரங்கள் மூலம் விளக்குகின்றனர். தற்போது பல்லவன் போக்குவரத்துக்கழகத்தில் பயிற்சி பெறும் ஓட்டுநர்களுக்குப் பயிற்சிமுடிந்தவுடன் இந்த சோதனை (உள்ளத்தால்உணர்வதை உடலால் செய்தல்) பற்றிக் கற்பிக்கப்படும்.

**தரமான பொருள்களுக்கு....**

அரியலூர் தமிழ்நாடு சிமெண்ட் ஆலை, ஆலங்குளம் சிமெண்ட் ஆலை ஆகியவற்றைப் பார்க்க வேண்டுமா?

மாதிரிகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அடுத்து வருவது கல்லூரித் துறைப் பகுதியாகும். இங்கு ஒரு சிறு விண்வெளிக்கூடம் (Mini Planetasium), உளவியல் சம்பந்தப்பட்ட புதிர்கள், விளையாட்டுகள், மேலும் பல்கலைக் கழகத்தின் பாதுகாப்புப் படிப்பு சம்பந்தப்பட்ட புதிய துறையைப் பற்றிய விளக்கம் ஆகியவை அனைவரையும் கவருகின்றன.

வண்ணத்தொலைக் காட்சிப் பெட்டி, வேறு பல அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட நுண் கருவிகள் ஆகியவற்றைகொண்டு விளங்குகிறது, அடுத்து வரும் தொழில் நுட்பத்துறைப் பகுதி. சிற்பக்கலைப் பள்ளி மாணவர்களால் உருவாக்கப்பட்ட கண்ணாடியில் பிரதிபலிக்கும் இரு பெண் உருவங்களை அங்கு காணலாம். ஒரு சிறு மின் கணிப்பியும் இங்கு உள்ளது.

தொல் பொருள் துறை, அரும் பொருட்காட்சித் துறை ஆகியவை தம்தம் செயல்களைச் சிறப்பாகக் காட்டியுள்ளன. குழந்தைகளைக் களிப்பூட்டும் ஒரு வனக் காட்சியும், தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தோண்டி எடுக்கப்பட்ட பழம் பெரும் ஆராய்ச்சிப் பொருட்களும் நம் கண்ணை வெகுவாகக் கவருகின்றன.

விளையாட்டுப் பகுதி அதற்கே உரிய பெருமையான இடத்தைப் பெறுகிறது. ஒலிம்பிக் சம்பந்தப்பட்ட பலவிளையாட்டுகள் அவற்



றுடன் சேர்ந்த பலசெயல்களைக் காட்டும் பல உருவ அமைப்புகள், ஒரு சிறிய ஆக்கி விளையாட்டு மைதானம் (Astro Furf) ஆகியவை இங்கு இடம் பெறுகின்றன. இதற்கு வெளியே மாணவர்கள் வண்ணம் பூசும் 'வண்ணச் சித்திரச் சொர்க்கம்' ஒன்று அமைந்துள்ளது, இதற்குள் சிற்றளவு இலவச உப்புமா வழங்கும் 'கேர்', நிறுவனப் பகுதியும் அமைந்துள்ளது. மதிய உணவுத் திட்டத்தின்கீழ் தமிழகப்பள்ளிக் கல்வித் துறை 'கேர்' உதவியுடன் நாள்தோறும் 21 லட்சம் மாணவர்களுக்கு உணவளிக்கிறது

ஆவணக்காப்பகப் பகுதியில் ராபர்ட் கிளைவின் கடிதமும் முன்னாள் மற்றும் தற்போதைய ஆளுநர்கள், முதல்வர்கள் கையொப்பங்களும் காணப்படுகின்றன.

தேர்வுத் துறையின் பகுதியில் அத்துறை நடத்தும் தேர்வுகளும் ஆண்டுப் போக்கில் வளர்ந்து வரும் தேர்வு எழுதும் மாணவர்களின் எண்ணிக்கையைக்காட்டும் வரைப்படங்களும் உள்ளன.

இறுதியில்வருவதுமுறைசாராக் கல்வி முதியோர் கல்வித்துறைப் பகுதியாகும் இது 6 வயது முதல் 14 வயதுவரையிலுள்ளபள்ளியை விட்டு நீங்கியவர்கள் 15 முதல் 35 வயது வரையிலும் உள்ள முதியோர்கள் ஆகியோர்களின் கல்விக்கு வழிவகுக்கும் முறைகளையும் துணை நூல்களையும் விளக்கிக் காட்டுகிறது.

—இப்படி இன்னும் பலசெய்திகளை காட்சி வடிவில் நமக்குக் கற்பிக்கிறது பொய்யாமொழி அரங்கு

**'ஒளியும் ஒலியும் காட்சி'**

பொய்யாமொழி அரங்கின் முகப்பின் ஒருபக்கம் முழுவதும் தமிழ் நாட்டிற்கு வருகை தந்து தமிழ்மொழியையும் தமிழ்நாட்டின் பண்பாட்டையும் புகழ் படுத்திய எட்டு அயல் நாட்டவர்களின் 'ஒளியும் ஒலியும்' காட்சி இருமொழிகளில் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வண்ணப் படங்களின் சிகரமாக இவற்றிற்கு மேலே மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு படங்கள் பெரிய அளவில் அழகுற காட்சி அளிக்கின்றன.

இப்படி உட்புறமும் வெளிப்புறமும் எல்லாரையும் கவர்ந்திடும் வண்ணம் அமைந்துள்ள 'பொய்யாமொழி அரங்கு'— அனைத்து இந்திய வர்த்தகப் பொருட்காட்சிக்குச் செல்லும் அனைவரையும் கவர்ந்திடும் அரங்கு என்பதில் ஐயமில்லை.

**மாமூலன்**

'டிட்கோ' காட்சி அரங்கினுள் நுழைந்தால் இதன் 'மாடல்'களைப் பார்த்து நாம் மகிழலாம். இதேபோல தமிழ்நாடு ஸ்டீல்ஸ்— மாடலையும் நாம் பார்க்கலாம். மேலும் 'டிட்கோ' வின் வளர்ச்சிப் பணிகளை அரங்கு அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

'மெட்ரோ வாட்டர்' என்னும் காட்சி அரங்கு என்ன சொல்கிறது?

காவிரி குடிநீர்த் திட்டம் (திட்டமதிப்பீடு ரூ. 403 கோடி), பூண்டி நீர்த்தேக்கம், சோழவரம் ஏரி, குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், எரிவாயு பயன்படுத்தும் முறை அறிய ஆய்வு மற்றும் ஆக்கப்பணிகளுக்கான தற்போதைய முன்னோடித் திட்டம் ஆகியவை நம் கருத்தைக் கவர்கின்றன.

தரமான பொருள்களைத் தயாரிக்கும் 'டான்சி' யின் அரங்கில்தான் எத்தனை வகையான அழகிய பொருள்கள்! ஸ்டீல், மரம், தோல் ஆகியவற்றாலான வீட்டுக்குத் தேவையான பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. 'மொபெட்' (மயூரம்) மோட்டார் சைக்கிளும் நம்மை வாங்கத்தூண்டுகிறது.

சிறுதொழில் வளர, அதன் மூலம சொந்தக் காலில் நிற்க பண உதவி புரிகின்ற பாரத ஸ்டேட் பாங்கின் பணிகளைச் சித்திரிக்கிறது அதன் அரங்கம் ஒன்று.

**தொழில் வளர.....**

*தொழில்துறை!*

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்ப



தைச் சொல்லாமல் சொல்கிறது இத்துறையின் அழகிய அரங்கம்.

தமிழ்நாடு கனிம நிறுவனம், சிட்கோ, உப்பு வாரியம், தமிழ்நாடு செராமிக்ஸ், பூம்புகார் ஆகிய நிறுவனங்களின் அரிய பணிகளை—கைவினைப் பொருள்களைக் கண்டு களித்திடும் வண்ணம் அமைந்துள்ளது இவ்வரங்கு.

பட்டுவேட்டி, பட்டுச்சட்டை அணிந்து கொண்டு சந்தனப் பொட்டையும் வைத்துக் கொண்டால் எப்படி இருக்கும்?

காஞ்சி, பனாரஸ், தர்மாவரம் இந்தப் பட்டுப்புடவைகளுக்குத்தான் எத்தனை மகத்துவம்!

இந்தப் பெருமைக்குரிய பட்டை-பட்டு நூலை உருவாக்கும் விதத்தை நாம் பார்த்திருக்கிறோமா?

'பட்டு வளர்ச்சித்துறை' அரங்கம் நம்மை அழைக்கிறது—

பட்டுப்பூச்சியின் வளர்ச்சியைப் படிப்படியாகப் பார்க்கிறோம் படத்தின்மூலம் அல்ல, நேரிடையாகவே. ஆம். பட்டுப்பூச்சிகளையே இங்கே பார்க்கிறோம். பட்டுநூல் எடுப்பது, துணி நெய்வது வரை கண்கூடாகக் காணலாம் இங்கே!

**அறிவியலின் அற்புதம்!**

நெய்வேலிக்குப் போய்வரலாமா? அடேயப்பா! நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் தான் இங்கே வந்துவிட்டதா? எவ்வளவு பிரம்மாண்டமாக அமைத்திருக்கிறார்கள் இந்தக் காட்சி அரங்கை! நெய்வேலி அனல் மின் நிலையம், உர உற்பத்தி ஆலை, வீக்கோ ஆலை—இவற்றின் 'மாடல்கள்' அவை இருக்குமிடத்திற்கே அழைத்துச் செல்வதுபோல இருக்கின்றன.

வேலை வாய்ப்புப் பயிற்சித் துறையில் தான், முதலில் குறிப்பிட்ட மின்சாரம் இல்லாமல் எரியும் விளக்கையும், தீக்குச்சியால் எரியும் மின்விளக்கையும் நாம் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல, பெட்டியைத் திறந்தால் ஒலி எழுப்புவதையும், கண்சிமிட்டும் பிளாஸ்டிக் பொம்மையும், பட்டனைத் தட்டினால் பல்வேறு பறவைகளின் ஒலிகளையும் கேட்கின்ற வாய்ப்பையும், அறிவியலின் அற்புதத்தையும் கண்டு மகிழவும் வகை செய்கிறது இந்த அரங்கம். அத்தோடு சுயவேலை வாய்ப்பையும் உணர்த்தி, படித்த இளைஞர்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டுகிறது இவ்வரங்கம்.

பொய்க்கால் குதிரை ஆடும் கலைஞர் இருவர் நிற்கின்ற நிலையில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருக்கும் அரங்குதான் சுற்றுலாத்துறை. இயற்கை எழில் காட்சிகளை, வண்ண ஓவியங்களாகவும், புகைப் படங்களாகவும் கண்டு மகிழ்கிறோம்.

தமிழ்நாட்டிலுள்ள கண்கவர் சுற்றுலாத் தலங்கள் பற்றிய வண்ணப் புகைப்படங்கள், மாமல்லபுரம் ஐந்துரதங்கள் மாதிரி வடிவம் போன்றவை காண்போரைத் தம்பால் ஈர்க்கின்றன. சுற்றுலாப் பேருந்து மூலம், தமிழ்நாடு சுற்றுலா செல்லும் விவரங்களையும் இங்கே தெரிந்துகொள்கிறோம். இவை எல்லா





வற்றையும் நமக்கு உணர்த்துகிறது, சுற்றுலா வளர்ச்சிக் கழக அரங்கம்.

செய்தித்துறை அரங்கம் செப்புவதென்ன?

உயரத்தில் வட்ட வடிவமான குடிசை—'குடிசைகள் தோறும் மின் விளக்கு' என்பதனைச் சித்திரிக்கிறது. அதனுள்ளே செல்லுவதற்குப் படியேறிச் செல்கிறோம். படிப்படியாய் தமிழகம் வளர்ச்சிபெற்றதைச் சித்திரிக்கும் பெரிய பெரிய புகைப்படங்கள், புள்ளி விவரங்கள்... மற்றும் உலகத் தமிழ்மாநாட்டு ஊர்வலக் காட்சிகள் மிகப் பெரிய புகைப்பட அளவில்....பேரறிஞர் அண்ணா இல்லத் திறப்பு விழா, தமிழக அரசு தன்னிறைவுத் திட்டம்-மாடல் ஆகியவை நெஞ்சைத்தொடும் காட்சிகளாகும்.

**தெய்வமணங்கமழும் திருக்கோயில் !**

மின்சார வாரிய அரங்கம்—

கீழ்மேட்டூர் அணை நீர்மின் திட்டம், தூத்துக்குடி அனல்மின் திட்டம், கிராமமின் வசதித் திட்டம், காடம்பாறை நீரேற்று மின் திட்டம்-இவற்றின் மாதிரி வடிவமைப்புகளையெல்லாம் பார்க்கும்போது மலைத்துப் போகிறோம்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தமிழகத்தில் கட்டியுள்ள, கட்டப்பட்டுவரும் பல்வேறு வீடுகள், குடியிருப்புகள் ஆகியவற்றைக் காட்டும் புகைப்படங்களும், மாடல்களும், தக்கைக்கல் தயாரிப்பு பற்றிய விவரங்களும் இந்த அரங்கிலே காணக் கிடைக்கின்றன.

தெய்வ மணங்கமழும் திருக்கோயிலினுள் நுழைந்துவிட்டோமோ? ஆம். அற நிலையத் துறை அரங்கு—அரங்கா அது. ஆலயத்தினுள் நுழைகின்ற பிரமையே ஏற்படுகிறது!

உலகப் புகழ்பெற்ற சேஷராய மண்டபம்—ஸ்ரீரங்கம் குதிரைத் தூண்களோடு இவ்வரங்கின் முகப்பு காட்சி தருகிறது. நுழைவு வாயிலில் நம்மையெல்லாம் வரவேற்பது — ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த, கிடைத்தற்கரிய கலியாண சுந்தரர் திருவுருவச்சிலை! (இதன் பெரிய அளவு புகைப்படம் மட்டுமே நாம் பார்க்க முடியும்).

விஞ்ஞானம்—மெய்ஞ்ஞானம் என்ற வண்ண ஓவியத் தொகுப்பும், 'கல்லும் சொல்லாதோ கவி' என்னும் தலைப்பில் கவின்மிகு சிற்பங்களும், மாரியம்மனின் அருள்மிகு வடிவங்களும் நம் மனத்தைத் தொடுகின்றன.

இந்த அரங்குக்குள்ளேயே ஒளி-ஒலிக் காட்சியும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்

தக்க ஒன்றாகும். இக்காட்சியில் பழனி, திருவானைக்காவல், மனு நீதிச் சோழன், ஸ்ரீரங்கம், மதுரை மீனாட்சிக் கல்யாணம் ஆகியவற்றைக் கண்டு மகிழலாம்.

இந்த அரங்கு வெளிநாட்டினரை வெகுவாகக் கவர்ந்துள்ளது. பாரீஸ், ஸ்காட்லாந்து, ஹாலந்து, ருமேனியா ஆகிய நாட்டிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகள் இவ்வரங்கைப் பாராட்டித் தம் கருத்தை எழுதியுள்ளனர்.

**விந்தை இயந்திரம்**

ஊரக வளர்ச்சித்துறை அரங்கினுள் நுழைந்தால்—

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியங்களில் கல்வி வளர்ச்சி—புள்ளிவிவரங்கள், சிறு விவசாயிகள் மேம்பாடுத்திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் போன்ற விவரங்களைத் தெரிந்து கொள்கிறோம். இந்த அரங்கில் ஒரு விந்தை இயந்திரம் ஒன்று இயக்கிக் காட்டப்படுகிறது. அதன்பெயர்: வாக்குப் பதிவு இயந்திரம்.

கூட்டுறவால் கோடி நன்மை என்பதனை உள்ளத்தில் பதிகின்ற வகையில் அமைந்துள்ளது 'கூட்டுறவு'க் காட்சி அரங்கு.

அரசின வீட்டுவசதிக் கழகம் ஆற்றிவரும் பணிகள், 1974 முதல் கட்டப்பட்டுள்ள பல்வேறு குடியிருப்புகள் பற்றிய புள்ளி விவரங்கள், குடியிருப்புகளின் மாதிரி வடிவமைப்புகள் இந்த அரங்கிலே பார்க்கின்றோம்.

**ஆழ்கடலின் அற்புதங்கள்!**

ஆழ்கடலின் அற்புதங்களைப் பார்க்க—மீன்துறைக்கு வருவோம். கடலின் உற்பத்தி, முத்துக்குளித்தல், கடல்வாழ் உயிரினங்கள் இவை குழந்தைகளை மட்டும் அல்ல, பெரியவர்களையும் கவர்கின்றன.

முர்ரா எருமை, ஜெர்சி மாடு, மேச்சேரி ஆடுகள், வெள்ளை யார்க்ஷயர் பன்றிகள் மற்றும் உயர்ரகக் கோழிகள் இவற்றைப் பார்க்காதவர்கள், கால்நடை பராமரிப்புத் துறை அரங்கிலே வந்து நேரில் பார்க்கலாம்.

வேளாண்மை—இந்த அரங்கில் வேளாண்மைப்பல்கலைக் கழகத்தின் அண்மைக்கால ஆராய்ச்சிகள், சாதனைகள், வேளாண்மை வளர்ச்சிகள் விளக்கப்பட்டுள்ளன.

பிற்பட்டோர் நலத்துறையின் பணிகள், ஊரகப் பெண்களுக்கு வேலைவாய்ப்புகள், சீர்திருத்தப்பணித் துறையின் சீரிய பணிகள் முதலானவற்றைச் 'சமூகநலத்துறை' அரங்கு எடுத்துக்காட்டுகிறது.

கலப்படம் செய்யப்பட்ட அரிசி, பருப்பு, மிளகாய்ப்பொடி, நெய், எண்ணெய், காப்பித்தூள் முதலான உணவுப் பொருள்களை ஒரு பக்கமும், அவற்றை உண்பதால் வரும் நோய்களை மற்றொரு பக்கமும் பார்க்கும்போது நம் உடல் நடுங்குகிறது. இவற்றிலிருந்து அறவே விடுபட்ட ஆரோக்ய வாழ்வுக்கு 'அக் மார்க்' என்பதை அறிகிறோம் விளைபொருள் விற்பனை வாரிய அரங்கிலே.

''சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்'' என்ன சொல்கிறது?

வீட்டுவசதிகள், குடிசைப்பகுதி மேம்பாடுகள், தன்னிறைவு வீட்டு மனைத்திட்டம், போக்குவரத்தும் பேருந்தும் போன்ற நல்ல திட்டங்களைத் தெரிந்து கொள்வதற்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கிறது. மறைமலைநகர் திட்டத்தின் மாதிரி வடிவமைப்பு நம்மை அந்நகருக்கே இழுத்துச் செல்கிறது.

நெடுஞ்சாலைத்துறையில்—

கிழக்குக் கடற்கரைத் திட்டம், திருச்சி அருகே காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம், சென்னை நகரில் அமையவிருக்கும் உள் வட்டச் சாலைகள் ஆகியவற்றின் மாதிரி வடிவமைப்புகளைப் பார்க்கிறோம்.

35 கிலோ எடையுள்ள யானைத் தந்தம் ஒன்று. அதன் விலை ரூ. 49,000. இதை வனத்துறை அரங்கிலே பார்க்கலாம். முதலையின் வளர்ச்சி, பன்னிறப் பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் படங்கள், ரப்பர் பால் எடுத்தல், அரக்கு சேகரித்தல், காகிதம் தயாரித்தல்—இவற்றின் விளக்கப்படங்கள் சந்தன மரத்தாலான சிலைகள் எல்லாம் நம்மை வெகுவாகக் கவர்கின்றன. அதுமட்டுமா? காட்டெருமை, புலி, சிறுத்தை, கரடி, எறும்புத்தின்னி, பாம்பு இவற்றையெல்லாம் பார்க்கும் போது—ஒரு பெரிய அடர்ந்த காட்டிற்குள் நுழைந்து விட்டது போன்ற உணர்வு ஏற்படுகிறது!

வேகமான வளர்ச்சி

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் அரங்கில், இவற்றின் வளர்ச்சிப் பணிகள், எதிர்காலத் திட்டங்கள் பற்றிய விவரங்களையும், பட்டினப்பாக்கத்து பேருந்து நிலையத்தின் மாதிரி வடிவமைப்பையும் பார்க்கிறோம்.

வேளாண்மையின் வேகமான வளர்ச்சிகளை இந்திய அரசின் விரிவாக்க இயக்கம்—வேளாண்மை அமைச்சகத்தின் அரங்கமும்—

'ஸ்பிக்'கின் சிறப்பான பணிகள் பற்றிய அரங்கமும்—

ஏழை எளிய மக்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டி, பிறமாநிலத்தவரும் பாராட்டுகின்ற வகையில் செயலாற்றிவரும் குடிசைப் பகுதி மாற்று வாரிய அரங்கமும்—

ஐந்தாண்டுகளுக்குப் பிறகு மாமல்லபுரம் எப்படி இருக்கும் என்பதனை விளக்கும் மாதிரி வடிவமைப்பைக் காட்டும் நகர் ஊரமைப்பு இயக்கக அரங்கமும்—



*நகரங்கள், கிராமங்களில் குடிநீர் வழங்குதல் பற்றிய புள்ளிவிவரங்கள், விளக்கங்கள் கூறும் குடிநீர் வடிகால் வாரிய அரங்கமும்—*

*இந்தியாவில் ஒவ்வொரு 1½ வினாடிக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது என்றும், ஒவ்வொரு ஆண்டும் 2 கோடியே பத்து இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன என்றும் கூறி நம்மை வியக்க வைக்கும் குடும்ப நலத்துறை அரங்கமும்—*

*நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை உணர்த்திடும் சுகாதாரத்துறை அரங்கமும், இந்திய மருத்துவத்துறை அரங்கமும் —நம் சிந்தனைக்கு விருந்தூட்டுகின்றன.*

*இவை மட்டுமா?*

*சென்னை மாநகராட்சி, சிப்காட், ஆவின், கோ-ஆப்டெக்ஸ், மத்திய சத்துணவு வாரியம், தொழிலாளர் நலத்துறை, கதர் கைத் தொழில் வாரியம், எச்.எம்.டி., எல்.ஐ.சி., டி.ஐ. சைக்கிள்,—இப்படி அரங்குகள் பொது அறிவு வளர்ச்சிக்குத் துணை செய்கின்றன.*

**விஜயந்தா டாங்க்**

*அதோ, அங்கே நாம் பார்ப்பதென்ன?*

*விஜயந்தா டாங்க்! ஆம். அதைச் சுற்றிலும் எவ்வளவு கூட்டம்!*

*இராணுவ தளவாடத் தொழிற்சாலைகள் அரங்கின் வெளியே இந்த வீரதீரச் செயல் புரிந்த டாங்கைப் பார்க்கலாம்.*

**ஒருமைப்பாட்டை வளர்க்க....**

*தமிழகச் சுற்றுலாத்துறை மட்டுமின்றி, புதுச்சேரி, மேற்கு வங்கம், குஜராத், மேகாலயா மற்றும் ராஜஸ்தான் சுற்றுலாக்களின் காட்சி அரங்குகள் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டுகின்றன.*

*இவையன்றி, நூற்றுக்கணக்கான கடைகள், ராட்சத ராட்டினம், குட்டி ரயில், மினி சர்க்கஸ், பாம்புப் பண்ணை, மந்திர தந்திரக் காட்சிகள், குழந்தைப் பூங்கா, முதலைப் பண்ணை, உல்லாசப்படகு போன்ற பொழுது போக்கு அம்சங்களுக்கும் குறைவில்லை.*

*பொருட்காட்சியில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா கலையரங்கில் நாள்தோறும் நாட்டிய, நாடகக் கலை நிகழ்ச்சிகளும், மற்ற மாநில கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுவதோடு, திறந்த வெளித் திரையரங்கில் திரைப்படமும் இலவசமாகத் திரையிடப்படுகிறது. அதுமட்டுமா? மதுரை, உலகத் தமிழ் மாநாட்டில் ஊர்வலமாக வந்த அலங்கார வண்டிகள் அனைத்தும் பொருட்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அங்கே பார்க்காதவர்களுக்கு இங்கே பார்ப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பு.*

*சுருங்கச் சொன்னால், சுற்றுலாத்துறையின் இந்த அழகிய, அறிவுக்கு விருந்தூட்டும் அரிய பொருட்காட்சி, ஒருமைப்பாட்டை உணர்த்தும் ஒப்பற்ற பொருட்காட்சியாக விளங்குகிறது என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!*


# காந்தி இல்லம்

**(காந்தி அடிகள் வாழ்க்கை வரலாறு பற்றிய பொருட்காட்சி)**

**இராஜாஜி மண்டபம் முன்புறம்**

***காட்சி நேரம் :*** **காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை.**

**ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும்**

**காந்தியடிகளின் கையெழுத்துப் பிரதிகள், வாழ்க்கை வரலாறு பற்றிய புகைப்படங்கள், காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த போது எடுத்த புகைப்படங்கள், வ. உ. சிதம்பரனார் கோவைச்சிறையில் இழுத்த செக்கு இன்னும் பல காட்சிகள் உள்ளன.**

## அனைவரும் வருக !



# நாட்டுக்கு நலம் பயக்கும் பணிகள்

பூமணக்கும் தமிழும், பொதிகை மலைத் தென்றலும், பொன் விளையும் கரிசலும்-நெல்லை மாவட்டத்திற்குப் பூமித்தாய் வழங்கிட்ட சீதனங்கள் !

திரு நிறைந்த திருநெல்வேலி மாவட்டத்தில், அரசின் பல்வேறு துறைகளில் நிறைவேற்றப்பட்டுள்ள மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் மக்களுக்குக் கிடைத்திட்ட உதவிகளை வழங்கியும், நெல்லை நகர்மன்றத்தின் சார்பில் ரூபாய் ஏழு இலட்சம் செலவில்கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய அங்காடிகளைத் திறந்து வைத்தும், பாளையங்கோட்டை நகர் மன்றத்தின் சார்பில் வண்ணாரப் பேட்டையில் ரூபாய் 2 இலட்சம் செலவில் அமையவிருக்கும் சலவைத் தொழிலாளர்களுக்கான கட்டடங்களுக்கு கால்கோள் விழா நாட்டுதல் செய்தும், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பேருரையாற்றினார்கள்.

விழா கடந்த டிசம்பரில் நெல்லை சாஃப்டர் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் சிறப்புடன் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான ஆண்களும், தாய்மார்களும், அரசு அலுவலர்களும் குழுமியிருந்தனர்.

**விழாவில் கீழ்க்கண்ட உதவிகள் வழங்கப்பட்டன :**

**சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம்**

அ. பாரத வங்கி - விவசாய பிரிவு மூலமாக 56 சிறு விவசாயிகளுக்கு ரூ. 2.24 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.

ஆ. கரிவலம்வந்தநல்லூர் பால் உற்பத்திச் சங்கத்தின் 65 உறுப்பினர்களுக்கு ரூ. 1,30,000 கடனாகவும், ரூ. 42,792 மானியமாகவும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் வழங்கப்பட்டது.

இ. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 60 நபர்களுக்கு ரூ. 45,540 மதிப்புள்ள தையல் இயந்திரங்கள் 60 மானியமாக வழங்கப்பட்டன.

ஈ. ராஜாபுதுக்குடி அரிசன கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தைச் சேர்ந்த 35 நபர்களுக்கு ரூ. 70,000 பால்மாடு வாங்கிக் கொள்ள கடன் வழங்கப்பட்டது.

உ. வல்லவன்கோட்டை அரிசன ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 49 நபர்களுக்கு ரூ. 1,47,000 கடன் வழங்கப்பட்டது.

ஊ. விதைத்தெளிப்பான் பயிற்சியாளர்கள் 15 நபர்களுக்கு ரூ. 20,250 மதிப்புற்ற விதைத் தெளிப்பான் கருவிகள் மானியமாக வழங்கப்பட்டன.

எ. பம்புசெட் ஆயில் இஞ்சின் பழுதுபார்க்கும் பயிற்சியாளர்கள் 15 நபர்களுக்கு ரூ. 4,500 மதிப்புள்ள பழுதுபார்க்கும் கருவிகள் மானியமாக வழங்கப்பட்டன.

**கதர் கிராமக் கைத்தொழில் துறை:**

அ. தச்சுத் தொழில் செய்யும் 8 பேர்களுக்கு ரூ. 4,800 கடனாகவும் ரூ. 4,800 மானியமாகவும் வழங்கப்பட்டது.

ஆ. சொல்லூத் தொழில் செய்யும் 6 பேர்களுக்கு ரூ. 7,200 கடனாகவும், ரூ. 7,200 மானியமாகவும் வழங்கப்பட்டது.

இ. தோல்தொழிலாளர்கள் 10 பேர்களுக்கு ரூ. 22,500 கடனாகவும், ரூ. 2,500 மானியமாகவும் வழங்கப்பட்டது.

ஈ. செங்கற்சூளை தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு ரூபாய் 5,000 கடனாக வழங்கப்பட்டது.

உ. மண்பாண்டத் தொழில் செய்யும் 7 பேர்களுக்கு ரூபாய் 11,550 கடனாகவும், ரூபாய் 4,550 மானியமாகவும் வழங்கப்பட்டது.

**கே. எம். இராசு**

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்

திருநெல்வேலி

சமூக நலத்துறை :

அ. உடல் ஊனமுற்றோருக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2 பேர்களுக்கு ரூ. 5,000 மதிப்புள்ள பெட்டிக்கடையும், வியாபாரம் நடத்த ரூபாய் 1,500 மானியமும் வழங்கப்பட்டது.

ஆ. காது கேளாத 25 பள்ளிக் குழந்தைகளுக்கு, காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டன.

இ. உடல் ஊனமுற்ற 7 பேர்களுக்கு இலவச மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

பிற்பட்டோர் நலத்துறை:

(அ) முடிதிருத்தும் தொழிலாளர் 11 பேர்களுக்கு ரூ. 900 மதிப்புள்ள முடிதிருத்தும் கருவிகள் வழங்கப்பட்டன.

(ஆ) 29 சலவைத் தொழிலாளர்களுக்கு ரூ. 9,135 மதிப்புள்ள சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

அரிசன நலத்துறை

(அ) 426 அரிசன மக்களுக்கு 30 ஏக்கர் நிலம் (மதிப்பு ரூபாய் 2.25 இலட்சம்) வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

(ஆ) அரிசன விடுதிகளில் தங்கிப் பயிலும் 464 கல்லூரி—பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விரிப்புகளும், போர்வைகளும், சாப்பாட்டுத் தட்டுகளும் வழங்கப்பட்டன.

வருவாய்த்துறை

(அ) வருவாய்த்துறை மூலமாக 456 அரிசனங்களுக்கும், 530 இதர வகுப்பினர்களுக்கும், வீட்டு மனைப்பட்டாக்களும், விவசாயத்திற்கு 62 அரிசனங்களுக்கு 32.57 ஏக்கர் நிலமும், இதர வகுப்பினர் 26 பேர்களுக்கு 37.76 ஏக்கர் நிலமும் ஒப்படை செய்யப்பட்டது. நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொடுங்கணி, பரமனேரி, வாகைக்குளம் கிராமங்களில் 1,020 பட்டா வழங்கப்பட்டன.

(ஆ) உடல் ஊனமுற்றோர் 9 பேர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டது.



(இ) பாபநாசம் மேலணைக் கிராமத்திலிருக்கும், காணிக் குடியிருப்பு மக்கள் விவசாயம் செய்து கொள்ள ரூ. 14,000 மதிப்புள்ள ''பம்ப் செட்டுகள்'' வழங்கப்பட்டன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பேருரை:

''தேர்தல் நேரத்தில் நாங்கள் என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தோமோ, அதை நிறைவேற்றி வருகின்றோம். எங்கள் கடமையை நாங்கள் செய்து கொண்டு வருகின்றோம். சட்டமன்றம் இல்லாவிட்டால் மாவட்டம்தோறும் அமைச்சர்கள் சென்று மக்களின் குறைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அமைச்சர்களிடம் கூறி இருக்கிறேன். அதிகாரிகள் சரிவர செயல்பட்டால்தான் நாங்கள் தீட்டுகின்ற திட்டங்கள் சரியாக நிறைவேறும். அதிகாரிகள் பொறுப்புடன் செயல்பட வேண்டும். இந்த மாநிலத்திற்கு நன்மைதரக் கூடிய பல்வேறு திட்டங்களைப் பலகோடி ரூபாய் மதிப்புற்ற திட்டங்களை மாநில திட்டக் கமிஷன் மூலமாக நிறைவேற்றி மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளோம். மத்திய அரசினால் எந்தத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதை எதிர்பார்க்கின்றோம். பொதுமக்களாகிய நீங்களும் அரசு அதிகாரிகளுக்குத் துணையாக இருந்து அரசினால் தீட்டப்படுகின்ற திட்டங்கள் சரிவர நடைபெற உதவ வேண்டும். அரசினால் தீட்டப்படுகின்ற திட்டங்கள் சரிவர நடைபெறுகின்றதா? என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். நாங்கள் போடுகின்ற திட்டங்கள் குறைகள் இல்லாமல் நடைபெறுகின்றதா? என்பதைப் பார்த்து எங்களுக்கு அரசுக்குத் துணிச்சலாகத் தெரிவிக்க வேண்டும். இந்த உதவியை நீங்கள் செய்ய வேண்டும். மக்களுக்கு வரிக்கு மேல் வரி போட்டால் எவ்வளவு தொல்லை ஏற்படும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

''மக்களிடம் ஒரு மனமாற்றத்தை நாம் உருவாக்க வேண்டும். அவர்கள் முன்னேற பொருளாதார வாய்ப்பைத் தந்ததாக வேண்டும். நம்மிடம் உழைக்கின்ற சக்தி அதிகம் இருக்கின்றது. இதை நாம் பயன்படுத்தியாக வேண்டும். எனவே கிராமத் தொழில்கள் பெருக வழி காண வேண்டும். அதன் மூலம் கிராம மக்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும். கிராமப்புறங்களில் குடிசைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருளைப் பயன்படுத்த வேண்டும். அரசே தன்னுடைய அனைத்து இலாக்காக்களுக்கும் தேவையான பொருட்களைக் குடிசைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை வாங்க வேண்டும். அரசு குடிசைத் தொழில் முன்னேற பலவித உதவிகளைச் செய்து வருகிறது. குடிசைத் தொழிலுக்காகத் தனி அலுவலகங்கள் இயங்கி வருகிறது. அதன் மூலம் குடிசைத் தொழில் வளர அரசு கடனுதவி செய்து வருகின்றது. நாங்கள் எங்கள் கடமையைச் செய்து வருகின்றோம். எங்கள் பலத்தை நம்பியல்ல! உங்கள் ஒத்துழைப்பைப் பெற்று கடமையைச் செய்து வருகின்றோம்.

''கூட்டுறவு மூலமாக விவசாயிகளுக்குக் கிணறுவெட்ட கடன் கொடுக்கப்பட்ட பணம் எங்கள் பணமல்ல, மக்கள் பணம். கடன் வாங்குகிறவர்கள் திரும்ப கொடுக்க மாட்டோம் என்றால் யாருடைய பணத்தைக் கொடுக்க மாட்டோம் என்கிறார்கள்? அது மக்கள் பணம். மக்கள் பணத்தைக் கொடுக்க மாட்டோம் என்கிறார்கள். மின்சாரக் கட்டணத்தைக் கட்ட மறுக்கின்றார்கள். மின்சாரம் கட்டணம் வரியா? இல்லையே. அது மின்சாரத்திற்குக் கட்டணம். மின்சாரத்திற்குக் கட்டணம் செலுத்துங்கள் என்றால் வரிகொடா இயக்கம். சிந்தித்துப் பார்க்க வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்ற இந்த நிலைமையை நாம் இந்த நாட்டில் அனுமதிக்க முடியாது.''

சிறப்புமிக்க இந்த விழாவிற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையேற்று சிறப்புரை ஆற்றினார்கள். தமிழ்த் தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. நெல்லை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தா. ம. ஆறுமுகம், இ. அ. ப., அவர்கள் விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்று, மாவட்டத்தில் நடைபெற்றுள்ள வளர்ச்சிப் பணிகளை விளக்கிக் கூறினார்கள்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களும், பாளைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு வி. கருப்பசாமி பாண்டியன் அவர்களும், சட்ட மேலவை உறுப்பினர் திரு ஜேப்பியார் அவர்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

நாட்டுப் பண்ணுடன் விழா இனிது நிறைவேறியது.



# கலைமாமணி விருது வழங்கும் விழா!

முத்தமிழுக்குப் பாராட்டுவிழா என்று சொல்லத்தக்க வகையில், முத்தமிழிலும் சிறப்புப் பெற்று-வரலாறு படைத்துள்ள கலைமணிகளுக்கு ஆண்டுதோறும் ஜனவரி 26ஆம் நாளன்று கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்து வருகிறது தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம். இந்த ஆண்டும், விழா, கலைவாணர் அரங்கில் மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்களின் தலைமையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

விழாவுக்கு வருகை புரிந்தோரை இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி திரு பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார் :

''தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இந்த ஆண்டு, அதன் வெள்ளிவிழாவைக் கொண்டாடி வருகிறது. அதன் நிறைவு விழா போல, இப்போது கலைமாமணி விருது வழங்கும் விழா நடைபெறுகிறது. இயல், இசை, நாடக மன்றம், ஆக்க பூர்வமான பணிகளை ஆற்றி வருகிறது. கலைகளை அழியாமல் பாதுகாக்க—கலைஞர்களின் நல்வாழ்வுக்காக-பாடுபட்டு வருகிறது. இதற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வரும் தமிழக அரசையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பாராட்டுகிறோம்''

வரவேற்புரைக்குப் பின்னர் அரிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. வீரச்செயல் புரிந்தவர்களுக்கு அண்ணா வீரப் பதக்கம் என்ற புதிய திட்டத்தின் செயற்பாடு நடைபெற்றது. பிறரைப் பாதுகாக்க முனைந்ததில் தம்மை இழந்த மூன்று தங்கங்களை—தியாகிகளைப் பாராட்டும் வகையில் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ஆயிர ரூபாய்க்குரிய பதக்கத்தையும் ஆயிர ரூபாய் சேமிப்புப் பத்திரத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

பொன்னா பிள்ளை—தேவன்—சுப்ரமணியன் என்னும் அந்த மூன்று தியாகிகளின் வாழ்க்கைக் குறிப்பை செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திருஎம். எஸ் கோபால் படித்தார்.

இதனையடுத்து, மறைந்த கலைமேதைகள் பதினால்வரின் உருவப் படங்களை மாண்புமிகு முதல்வர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் மேதகு ஆளுநர் அவர்கள் 39 கலைஞர்களுக்குச் சால்வை போர்த்தி, பொற்பதக்கம் அணிவித்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலைஞர்களுக்கு கலைமாமணி விருதை வழங்கினார்.

ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற கலைமணிகளில், நலிவுற்ற பதினொருவருக்கு ரூபாய் 1,000 கொண்ட பொற்கிழியை மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் வழங்கினார்.

நிகழ்ச்சித்தொகுப்பு
புலவர் தமிழ்ப்பித்தன்

அதன் பின்னர், மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்க நாயகம் கலைமாமணி விருது பெற்றோரை வாழ்த்திப் பாராட்டுரை வழங்கினார். பாராட்டுரையில் அவர் குறிப்பிட்டார் :

''கலைத் துறையின் பல்வேறு பிரிவுகளில் தமது ஆற்றலை— கலைச் சேவைக்குப் பயன்படுத்தி வரும் பெருமக்களுக்குப் பாராட்டு வழங்கும் நிகழ்ச்சியாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கலைஞர்களுக்குப் பாராட்டு வழங்குவதுடன் கலை உலகத்துக்கு—கலைத் துறைக்கு நல்ல சேவை செய்தும் வருகிறது இயல் இசை நாடக மன்றம்.

''நாடகத்திலிருந்துதான் திரைப்படம் வந்தது. திரைப்படம் இன்று வளர்ந்து கொண்டிருக்கிறது; திரைப்படத்தின் மூலம் பெறும் உணர்வை நாடகத்தின் மூலமும் பெற முடியும்; திரைப்படத்தில் உள்ள புதிய உத்திகளையும் நாடகத்தில் உருவாக்கிக் காட்ட முடியும். நாடகம் நிஜ உருவமாகும்; திரைப்படம் நிழல் ஆகும்; நாடகத்தை வளப்படுத்த வேண்டும். அந்தப் பணி வெற்றி பெற்றால்தான் அத்தனை கலைஞர்களையும் நாம் வளர்க்க முடியும்.''

அடுத்து, பாராட்டுரை வழங்கிய மாண்புமிகு செய்தி - மக்கள் தொடர்புத்துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் குறிப்பிட்டார் :

''தமிழ்ச்சமுதாயம் கலைக்கு நன்றி கூறும் செயலுக்கு-கலைக்கு துணையாக நிற்கும் முயற்சிக்கு —கலையைத் தூக்கி நிறுத்தும் செயலுக்கு இவ்விழா உதவுகிறது. விருது பெற்றோர் அனைவரையும் பாராட்டுகிறேன்.''

விருது பெற்ற கலைமாமணிகளின் சார்பில், செல்வி சுவர்ணமுகி, திருமதி சுதாராணி ரகுபதி, செல்வி ஸ்ரீப்ரியா; பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் ஆகியோர் நன்றி உரை கூறினர்.

பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் குறிப்பிட்டார் :

''குடியரசு விழா நாளான இந்தத் திருநாளில் இங்கே முத்தமிழ்க்குப் பாராட்டு விழா நடைபெறுகிறது. இயல், இசை, நாடக மன்றம் என்னும் பெயரிலேயே முத்தமிழும் அமைந்திருக்கிறது.

## அண்ணா வீரப் பதக்கம்

வீரச் செயல்புரிந்தவர்களுக்கு அண்ணா வீரப்பதக்கம் வழங்கும் முறையை இந்த ஆண்டு தமிழக அரசு அறிமுகம் செய்துள்ளது. வீரச்செயல் செய்து மறைவு எய்திய தியாகிகளுக்கு மரியாதை செய்யும் வகையில் பதக்கமும் 1000 ரூபாய் அன்பளிப்புத் தொகையும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

மாம்பலம் ரயில்வே வாசல் அருகில் ஒரு மின்சார ரயில் நெருங்கிக்கொண்டிருந்த போது ரயில் பாதையைக் கடக்க முயன்ற ஈஸ்வரி என்ற 6வயதுச் சிறுமியைக் காப்பாற்ற முனைந்த பொன்னுபிள்ளை மீது ரயில் மோதிவிட அவர் படுகாயமுற்று இறந்துவிட்டார். அவரின் மனைவிக்குப் பதக்கத்தையும் ஆயிரம் ரூபாய்க்குரிய பத்திரத்தையும் மாண்புமிகு முதல்வர் வழங்கினார்.

சென்னை மயிலாப்பூரில் ஒரு பெண்ணின் தங்கச் சங்கிலியைப் பறித்துச் சென்ற நாகராஜன் என்பவரைத் துரத்திப் பிடிக்க விரைந்த வாடகைக்கார் ஓட்டுநர் தேவன் என்பவரை ,நாகராஜன் கத்தியால் குத்தியதால் அவர் காயமுற்று இறந்தார். அவருக்கு மரியாதை செய்யும் வகையில் . அவரது தந்தையாரிடம் பதக்கத்தையும் ஆயிரம் ரூபாயையும் மாண்புமிகு முதல்வர் வழங்கினார்.

தாம்பரத்தில் உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகக் கிடங்கில் சிமெண்டு மூடைகளைக் கடத்திக் கொண்டு தப்பிச் செல்வதற்கு முயற்சித்த 6 பேர்களை சுப்ரமணியம், சாமிநாதன் என்னும் காவலாளிகள் துரத்திப் பிடிக்க முயற்சி செய்தபோது - திருடர்கள் சுப்பிரமணியத்தை கத்தியால் குத்திவிடவே, அவர் படுகாயமுற்றார். மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும்போது வழியில் மரணம் எய்தினார். அவருக்குரிய பதக்கத்தையும் தொகையையும் அவரது மனைவியிடம் வழங்கினார் மாண்புமிகு முதல்வர்.



"முத்தமிழுக்குப் பண்டைய அரசர்கள் பெருமை செய்தது போல இந்திய அரசும், தமிழக அரசும் பெருமை செய்து வருகின்றன.

"நாட்டின் ஒருமைப்பாட்டை கலைகள்தான் வளர்க்கின்றன என்பதை உணர்ந்து நாம் செயல்படவேண்டும்; நமது கலைகள் இந்திய நாட்டிற்கு மட்டுமின்றி- உலகத்திலுள்ள பல நாடுகளுக்கும் பயன்பட்டுச் சிறக்க வேண்டும்—அதற்கு ஒருமைப்பாடுதான் துணை புரியும் என்பதை உறுதியுடன் சொல்ல வேண்டும்."

பின்னர் உரையாற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்:

"பல்வேறு கலைஞர்களைப் பாராட்டும் பண்பை - அதற்குரிய பக்குவத்தை - பயிற்சியை - தமிழகம் நீண்ட நெடுங்காலமாகவே கொண்டிருக்கிறது. சேர, சோழ, பாண்டியர்கள் - வள்ளல்கள்-சிற்றரசர்கள் — கலைஞர்களை— புலவர்களைப் பாராட்டி வந்த மரபை ஒட்டி தமிழக அரசு, கலைஞர்களைப் போற்றி வருகிறது. இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களிலும் கலைகளைப் பாராட்டும் மாநிலம் தமிழகம் ஒன்றுதான்.

"கலைஞர்கள் தொழில் நடத்துவோர் அல்லர்: கலைக்குப் பாடுபடுபவர்கள் அவர்கள். அதனால்தான் அவர்களைப் பாதுகாக்கும் பணியை வள்ளல்கள் மேற்கொண்டிருந்தார்கள். பொருநர்— கூத்தர் — பாணர் — விறலியர் ஆகிய பற்பல கலைஞர்களையும் நாடாளும் மன்னன் பாதுகாத்து வந்தான்.

"குத்து விளக்கு வெளிச்சத்தைத் தருகிறது. சுற்றிலும் ஒளியை உண்டாக்குகிறது. அதன் அடிப்புறத்திலே இருட்டாக உள்ளது. அதைப்போல கலைஞர்கள் மற்றவர்களுக்கு ஒளி தருவார்கள்; அவர்களுக்கு அந்த ஒளி கிடைப்பதில்லை; அதுதான் கலைஞர்களின் வாழ்வு; கலையுள்ளம் படைத்த புரட்சித் தலைவர் அவர்கள் ஏறக்குறைய 1,200க்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி வருகிறார். கலைஞர்களை - புலவர்களை வள்ளல்களிடம் ஆற்றுப்படுத்தும் நிலை தமிழகத்தில் இருந்தது. அதைத் தெரிவிப்பதுதான் ஆற்றுப்படை இலக்கியங்கள்.

"வெள்ளி நாரில் கோத்த— தாமரை வடிவில் உள்ள பொற்பதக்கத்தை கலைஞர்களுக்கு அளித்தான் ஒரு மன்னன் என்று பேய்மகள் இளவெயினி பாடியுள்ளார்.

"பாரி மன்னன் பகைவரிடம் வீரம் காட்டும் நெஞ்சம் படைத்தவன் மட்டுமல்லன், பரிசிலரிடம் ஈரநெஞ்சும் உடையவன் என்று பாடினார் கபிலர்: படை கொண்டு சென்று அவனை வீழ்த்த முடியாது; ஆடினீர், பாடினீர் செலின்-நாடும் குன்றும் ஒருங்கு வழங்குமே" என்று குறிப்பிடுகிறார்.

"கோப்பெருஞ்சோழன் 'ஆடுபவர்க்கு ஈந்து ஈந்து புகழ் பெற்றவன்' என ஒரு புலவர் குறிப்பிடுகிறார்.

"நம்பி நெடுஞ்செழியனை 'பாடுநர் பசி தீர்த்தான்' என ஒரு புலவர் குறிப்பிடுகிறார்.

"இவ்வாறு நமது பண்டைய மன்னர்களின் மரபையொட்டிக் கலைஞர்களைப் போற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

"கலைஞர்களுக்கு - பொருள் வரும்வழியும் தெரியாது; போகும் வழியும் தெரியாது. மக்களுக்கு மகிழ்ச்சி தருபவர்கள் கலைஞர்கள். மக்களை தங்கள் கவலையிலிருந்து - இடுக்கண்ணிலிருந்து- மறக்கச் செய்வது, வாட்டம்— ஏழ்மை - தொல்லை - துயரம்- இன்னல் - இடையூறு ஆகியவற்றை மறக்கச் செய்வது கலை, கலைஞர்கள்; தங்கள் வாழ்வில் துன்பம் எய்தினாலும், மக்களுக்கு அவர்கள் இன்பம் பயக்கிறார்கள்.

"ஒரு கோடி ரூபாயை ஒருவருக்குத் தந்தாலும்கூட அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டு விடாது. இன்னும் ஒரு கோடி தந்திருக்கக் கூடாதா? என்று கவலைப்படுவார் - ஏங்குவார்; அதனால் பணம் மகிழ்ச்சியைத் தர முடியாது.

"பணம்-மகிழ்வை உருவாக்கும் சாதனைக்குரிய கருவி; அதுவே மகிழ்ச்சியல்ல; கலையும் நாடகமும் மனித சமுதாயத்துக்கு இன்பம் தருகின்றன. ஒரு பாட்டு- மனிதருக்கு ஓயாத இன்பத்தை ஏற்படுத்துகிறது.

"நகைச் சுவைக் கலைஞர் சிரிப்பின் மூலம் மக்கள் அனைவரையும் சிரிக்க வைக்கிறார். கலைஞர்கள் பெற விரும்புவது இன்பம்தான்! மனதின் நெகிழ்ச்சி - நெகிழ்ச்சியின் முதிர்ச்சி- இன்பம் அளிக்கவல்லது. இதய நாடியைத் தொட்டு இன்பம் தரும் திறன் கலைஞர்களுக்கும், கலைக்கும் உண்டு!"

அடுத்து, விழாவிற்குத் தலைமையேற்ற மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

"தமிழகத்துக்கு இரண்டு சிறப்புகள் உண்டு; ஒன்று கலைத்துறையில் மிகச் சிறந்த பாரம்பரியத்தை அது பெற்றிருக்கிறது; இரண்டாவது, கலைத்துறையைச் சேர்ந்த முதல்வர் அவர்களின் தலைமையை அது பெற்றிருப்பது. முதல்வரின் ஆதரவில் கலைகள் வளர்கின்றன.

"உலகில் ஒவ்வொரு நாட்டிலும் - அது ஜனநாயக நாடாயினும் சரி - சர்வாதிகார நாடாயினும் சரி - அங்கெல்லாம் கலைகள் பாதுகாக்கப்படுகின்றன. கலைஞர்கள் ஆதரிக்கப்படுகிறார்கள்: கலைஞர்கள் சுதந்தரமாக வாழ்கிறார்கள். அவர்களது எண்ணங்கள் தடைசெய்யப்படுவதில்லை."

பின்னர், மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார் :

"சிறு வயதில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எனக்கு இங்கே நினைவுக்கு வருகிறது. இதுவரை சொல்லாத நிகழ்ச்சிகள் எல்லாம் எனக்கு நினைவுக்கு வருகின்றன. அவற்றைச் சொல்வதற்கு நான் கடமைப் பட்டிருக்கின்றேன்.

"இங்கே டி. கே. சம்பங்கி அவர்கள் பொற்கிழி வாங்கினார்கள். அவர்களை இன்று எத்தனை பேருக்குத் தெரிந்திருக்க முடியும்? பலருக்கு ஞாபகம் இருக்காது. மைனர் ராஜாமணி என்னும் படத்தை டைரக்டர் ராஜா சாண்டோ அவர்கள் இயக்கிக் கொண்டிருந்த சமயத்தில்- நடிப்புலகில் எனது ஆசானாகத் திகழ்ந்த காளி என். ரத்தினம் அவர்கள் என்னை ராஜா சாண்டோ அவர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வாய்ப்புத் தருமாறு கூறினார். அப்போது ராஜா சாண்டோ கூறினார்; 'உன்னை விடச் சிறந்த நடிகர் ஒருவரை அந்த வேடத்துக்கு ஒப்பந்தம் செய்து விட்டேன். அடுத்த படத்தில் பார்த்துக் கொள்ளலாம்' என்று குறிப்பிட்டார். அந்தப் பாத்திரத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த அந்த நடிகர்தான் டி. கே. சம்பங்கி அவர்கள். மங்கள கான சபா என்ற ஒரு சபையை அவர் நிறுவியிருந்தார். அந்த சபையை கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் விலைக்கு வாங்கி என். எஸ் கே. நாடக மன்றமாக ஆக்கினார்; இந்தச் செய்தி பலருக்குத் தெரியாது.

"இங்கே இளையவர்களுக்குப் பாராட்டுத் தரும்போது முதியவர்கள் நினைக்கலாம் -'நாங்கள்



## உருவப்படம் திறந்து வைக்கப் பெற்ற கலை மேதைகள்

மறைமலையடிகள்—(தமிழ்ப் பேராசிரியர்)

எப்.ஜி. நடேசய்யர்—((நாடக மேதை)

ராஜா சந்திரசேகர்—(திரைப்பட இயக்குநர்)

ஜி.என். பாலசுப்ரமணியம்—(இசைமேதை)

நாகூர் சுப்பையா பிள்ளை—(நாதசுர மேதை)

வழுவூர் முத்துவீரு பிள்ளை—(தவில் மேதை)

காதர் பாட்சா—(ஆர்மோனிய மேதை)

டி. பாலசுப்ரமணியம்—(நடிக மேதை)

ஜூபிடர் சோமசுந்தரம்—(திரைப்படத் தயாரிப்பாளர்)

கே.பி. சுந்தராம்பாள்—(நாடக, திரைப்பட இசை மேதை)

பாலாமணியம்மாள்—(இசை நாடக நடிகை)

டி.எஸ். வேலம்மாள்—(இசை நாடக நடிகை)

பைரவசுந்தரம் பிள்ளை — (இசை நாடக நடிகர்)

எஸ்.வி. சுப்பையா—(குணசித்திர நடிகர்)

## பொற்கிழி பெற்ற கலைமாமணிகள்

தஞ்சை திரு.வி. பாபு—(புரவிநாட்டியக் கலைஞர்)

டி.ஏ. சுந்தரலட்சுமி—(இசை நாடக நடிகை)

கிளவுன் எம்.எஸ். சுந்தரம்—(இசை நாடக பாடலாசிரியர்)

எஸ்.எஸ். சாப்ஜான்—(இசை நாடக நடிகர்)

டி.கே. சம்பங்கி—(நாடக நடிகர்)

கரந்தை ஆர் சண்முகம்பிள்ளை—(தவில் கலைஞர்)

சி.பி. ரத்தினசபாபதி—(பரத நாட்டிய மிருதங்கக் கலைஞர்)

எம்.எம். மாரியப்பா (இசை நாடக நடிகர்)

நாச்சியார்கோவில் என்.கே. ராஜம் பிள்ளை—(நாதசுர ஆசிரியர்)

புரிசை சி. எல்லப்பத்தம்பிரான்—(தெருக்கூத்துக் கலைஞர்)

என்.எஸ். அழகப்பன்—(நாடகத் தயாரிப்பாளர்)

எங்கோ கிடக்கிறோம்; இந்த இளைஞர்கள் சுகமாகத்தானே இருக்கிறார்கள். இவர்களுக்கு ஏன் பாராட்டு' என்று! அதே நேரத்தில் இளைஞர்கள் நினைக்கலாம், 'இந்த முதியவர்களுக்கெல்லாம் எதற்குப் பாராட்டு? அவர்கள்தான் ஆண்டு முடித்து விட்டார்களே! எங்களைப் போன்ற இளைஞர்களைப் பாராட்டினால் எங்களுக்கு அது ஊக்கம் தருவதாக அமையும்' என்று!

''இங்கு சிலரைத் தேர்ந்தெடுத்துப் பாராட்டியிருக்கிறார்கள். இன்னும் பாராட்டப்பட வேண்டியவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

''இங்கு சில சகோதரிகளை நானே பேசச் சொன்னேன். தங்களது அனுபவங்களை - தங்களுக்கு ஏற்பட்ட சூழ்நிலைகளை- கற்று வளர்ந்த செய்திகளை சொல்ல வேண்டும் என நான் விரும்பினேன். சில அனுபவங்கள் —வாழ்க்கையில் ஏற்பட்ட சில சிக்கல்கள் - ஆகியவற்றை அவர்கள் மற்றவர்களுக்குச் சொல்லும்போது - தவறான பாதையில் போகும் மற்றவர்களுக்கு அது எச்சரிக்கையாக இருக்கும்.

''இங்கே எம். ஆர். வாசவாம்பாள் அவர்கள் கலைமாமணி விருது பெற்றார்கள். மிகச் சிறந்த ஆர்மோனியக் கலைஞரான இவர் பங்கு பெறும் நாடகத்தைப் பார்ப்பதற்கு மக்கள் போட்டி போட்டுக் கொண்டு டிக்கெட் வாங்கிய காட்சியை நான் கண்டிருக்கிறேன். இத்தகைய புகழ் பெற்ற கலைஞர் பலர் இருந்திருக்கின்றனர்.





"கலைஞர்கள் தாங்கள் பாராட்டப்படும்போது அவர்களுக்குக் கிடைக்கின்ற மகிழ்ச்சிக்கு ஈடு இணை கிடையாது. ஒரு கோடி ரூபாய் கொடுக்கும்போது கூட ஏற்படாத அந்த மகிழ்ச்சி—பாராட்டப்படும்போது அவர்களுக்கு உண்டாகிறது. பாராட்டுப் பெறும்போது—அது அவர்களை உற்சாகப்படுத்தி நம்பிக்கையை அவர்களுக்கு அளித்து மேலும் மேலும் உழைக்க வைக்கிறது.

"இங்கே ஒரு சிறு பையன் விருது வாங்கினான். அவனது தந்தைதான் சுருளிராஜன். மக்களை எல்லாம் தமது நகைச்சுவை நடிப்பில் சிரிக்க வைத்த பெருமை அவருக்கு உண்டு. இன்று அவரது மனைவியைக் கண்ணீர் வடிக்கவைத்துச் சென்றுவிட்டார்.

"நகைச்சுவை நடிகர் என்னாத்தே கன்னையா அவர்கள் இங்கே விருது பெற வந்தார்கள். அவர்களைப் பார்த்து நான் கேட்டேன், இன்னும் என்னாத்தே கன்னையா தானா என்று ?

"மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்ற கலைஞர்கள் தங்கள் சொந்த வாழ்வில் மகிழ்ச்சியோடு வாழ்கின்றார்களா என்றால்—அதற்கு உத்தரவாதம் தரப்படவில்லை. இங்கே ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆடை அலங்காரம் செய்தாலும் - என்னதான் சுவையான உணவு உண்டாலும் அதனால் ஏற்படும் மகிழ்ச்சி கொஞ்ச நேரம்தான் இருக்கும். ஆனால் கலை உணர்வு கொண்டிருந்தால், கண்ட காட்சியைப் பிறகு எண்ணி எண்ணி மகிழலாம்.

"இங்கே விருது பெற்ற பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அவர்கள் பற்பல நூல்களை எழுதியுள்ளார். அவரது நூல்கள் எல்லாம் படித்து இன்புறத்தக்கது. படிப்போரை அந்நூல் இன்பத்தில் ஆழ்த்துகின்றன.

"கலைஞன் என்பவன் மனிதனில் இருந்து பிரித்து வைப்பதற்குரிய சொல்லாகும். கலையை யாரும் விலை பேச முடியாது; விலை பேச விடக் கூடாது.

"ஒருவன் நடப்பதைப் பார்த்து, என்ன அழகாக நடக்கிறான் பார் என்கிறோம்! சிரிப்பதைப்பார்த்து என்ன அழகாகச் சிரிக்கிறான் பார் என்கிறோம்! அழகாக உடை உடுத்தியிருப்பதைப் பார்த்து என்ன அழகாக உடை உடுத்தியிருக்கிறான் பார் என்கிறோம். சிலர் மனைவியைச் சமாதானப்படுத்துவதற்காக, கோபத்தில்கூட நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் என்று கூறுவார்கள். பிறருக்கு மகிழ்ச்சியூட்ட-பிறரை நிம்மதிப்படுத்த—கலை பயன்படும் என்பதற்கு இவை எல்லாம் எடுத்துக்காட்டுகளாகும்.

"கலை உணர்வுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்களிடத்தில் ஏற்றத் தாழ்வு உணர்ச்சி தோன்ற முடியாது. ஜாதி—மத பேதங்கள் தலை காட்ட முடியாது.

"கட்டுப்பாடு-ஒழுங்கு-நேர்மை, பண்பாடு ஆகியவற்றுடன் நடந்து கொள்வதும் கலைதான். மதங்கள் பல இருந்தாலும் அவை போதிக்கும் கோட்பாடுகள் ஒன்றுதான்.

சைவ மதமாயினும்-வைணவ மதமாயினும், புத்த மதமாயினும், சமண மதமாயினும். அந்தந்த மதத்தினர் தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கை-பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை மீறி நடந்தால் மதத்திற்கு விரோதமான செயலாகி விடும்.

"மனித சமுதாயத்தில் தமிழினத்துக்கென ஒரு மரபு-பழக்க வழக்கம் உள்ளது; அதை மீறி நடப்பவர்கள் தமிழர் அல்லர்-தமிழ்ச் சமுதாயத்துக்குச் சொந்தக் காரர் அல்லர்.

"கலைஞர்கள் பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும்; அப்போதுதான் அவர்களது கலை வெற்றி பெறும், அப்படி இல்லாவிட்டால் அவர்களது கலை, கலைவாணர் அவர்கள் சொல்லியது போல அது கூட்டத்தைக் கலைக்கும் கலையாக ஆகிவிடும்.

"கலையை வயிற்றுப் பிழைப்புக்காகப் பயன்படுத்தக்கூடாது-கலையை விலைபேச வேண்டும் என்ற முறையிலே கலைஞர்கள நடந்துகொள்ளக் கூடாது. கலையை, கலையாக மதித்து-கலைக்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள்தான் இங்கே இன்று பாராட்டுப் பெற்றிருக்கிறார்கள்.

"நமது ஆளுநர் அவர்கள் இங்கே கலைஞர்களைப் பாராட்டிப் பேசினார்கள்; அவர்களது உரையிலிருந்து, அவர்கள் தமிழை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள் - தமிழ்ச் கலையை அறிந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

"எத்தனையோ கலைஞர்கள் நல்ல நிலைக்கு வந்தும் இன்றும் கஷ்டப்படுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நடிகர் சங்கத்தைப் பலப்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் உறுதியாகிறது. அதற்கு அரசும் தன்னாலான உதவிகளைச் செய்யும்.

"இங்கு திறக்கப்பட்டுள்ள கலை மேதைகளின் படங்களை வைக்க மன்றக் கட்டடத்தில் இடம் போதவில்லை என்று செயலாளர் குறிப்பிட்டார். நான் அவருக்கு விளையாட்டாக ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். நீதி மன்றக் கட்டடம் சிறிது; ஆனால் தீர்ப்பு பெரிது. இதைச் சொல்லி நான் ஏமாற்றுகிறேன் என்று நினைக்க வேண்டாம்.

"கட்டடம் கட்டுவதற்கான திட்டங்கள் விரைவில் செயல் படுத்தப்படும். அழியாத கலைக்கு ஒரு நல்ல கட்டிடம் கட்ட எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும்."

பின்னர், மன்றச் செயலர் திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் நன்றி உரை வழங்க கலைமாமணி விருது வழங்கு விழா நிகழ்ச்சி இனிது நிறைவேறியது; அனைவரின் இதயத்திலும் நிறைந்து நின்றது.



"எளியவருக்கும் எளியவன், இது எனது நாடு, இதன் கட்டு மானத்தில் நானும் பங்காற்றினேன் எனக் கருதும் ஒரு இந்தியா விற்காக, உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனும் வர்க்க வேறுபாடற்ற தோரு இந்தியாவிற்காக அனைத்து சமுதாயமும் முழு இசைவுடன் வாழக்கூடியதொரு இந்தியாவிற்காக நான் பாடு படுவேன். இந்த இந்தியாவில் தீண்டாமை எனும் சாபக்கேட்டிற்கும், போதையூட்டும் பானங்களுக்கும், மருந்துகளுக்கும் இடம் இரா. இந்த இந்தியா வில் ஆணும் பெண்ணும் சம உரிமை பெற்று இருப்பர். இதில் எது குறைந்தாலும் நான் திருப்தியுற மாட்டேன்."

மகாத்மா காந்தி
(எங் இந்தியா 1931)

davp 80/405

## புதிய கண்டுபிடிப்பு

# தோலில் அச்சிடும் புதிய முறை

—மாமூலன்

## வெள்ளாடு வேங்கை ஆகும்! எருமை முதலை ஆகும்! மாடு மான் ஆகும்!

உலகிலேயே மிகப் பெரிய தோல் ஆராய்ச்சி நிலையம் சென்னை அடையாறு பகுதியில் அமைந்துள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (*Central Leather Research Institute*). இந்நிறுவனம் இதுவரை தோல் தொழில் தொடர்பான பல்வேறு அரிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

இறக்குமதி செய்யும் இராசயனப் பொருள்களிலிருந்து தான் தோல் பதனிடுமுறையை செய்ய முடியும் என்பதை மாற்றி கடுக்காய் மூலம் செய்யலாம் என்று நிருபித்திருக்கிறார்கள், ஆட்டின் குடல் உட்புறத்திலிருந்து ஆடைகள் தைக்கலாம் என்பதையும், குடலின் உட்புறம் உணவை பாதுகாத்து வைக்க முடியும் என்பதையும் தோல் சம்பந்தமான பல்வேறு தொழில் நுட்பப் பணிகளில் பல அரிய சாதனைகளையும் இந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள்

அதன் தொடர்ச்சியாக, இப்பொழுது இன்னொரு புதிய சாதனையாக தோலில் மீது அச்சிடும் '' Novotone '' என்னும் புதிய முறையை கண்டுபிடித்திருக்கிறார்கள்

மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் டி. எஸ். ரங்கநாதன், ஆர். கிருஷ்ண மூர்த்தி கே.ஏ. ராமசாமி ஆகிய மூவரும் சேர்ந்து கண்டுபிடித்தது தான், Novotone என்ற தோலில் பிரிண்ட் செய்யும் புதிய முறை.

இதற்கு முன்பு எல்லாம் தோலில் பிரிண்ட் செய்வது எம்பாஸிங்முறையில் தான். அதனை ஹைட்ராலிக் முறையில் அச்சை பதிக்க வைப்பார்கள். ஆனால் இப்பொழுது கண்டுபிடித்திருக்கும் அச்சுமுறை புதுமையானது. எளிமையானது. இதனால் —

வெள்ளாட்டுத் தோலை வேங்கையின் தோல்போல் பிரிண்ட் செய்யலாம். எருமைத் தோலை முதலை தோல்போல பிரிண்ட் செய்யலாம். மாட்டுத் தோலை மான்தோல் போல மாற்றிவிடலாம்.

இப்புதிய கண்டுபிடிப்புக்காகத் தான் புதுதில்லியிலுள்ள தேசிய ஆராய்ச்சி வளர்ச்சிக் கழகத்தின் ஓர் அங்கமான 'படைப்பு ஊக்க வாரியம்,' பதனிடும் முறை நிபுணரான திரு. டாக்டர் டி.எஸ். ரங்கநாதன், புகைப்பட வல்லுநர் திரு ஆர். கிருஷ்ண மூர்த்தி, அச்சுத்துறை வல்லுநர் திரு கே. ஏ. ராமசாமி ஆகிய மூவருக்கும் குடியரசு நாள் இவ்வாண்டு விழாவை ஒட்டி நிதி விருதும் சான்றிதழும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

டாக்டர் டி. எஸ். ரங்கநாதன்,



ஆர். கிருஷ்ண மூர்த்தி



கே.ஏ. ராமசாமி



சென்னை மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றும் அம்மூவரையும் சந்தித்தோம். அதுபோது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:—

''இம் முயற்சியில் நாங்கள் விளையாட்டாகவே ஈடுபட்டோம். ஆண்டுதோறும் எங்கள் நிறுவனத்தில் டாக்டர் ஏ.எல். முதலியார் நினைவுப் பேச்சுப் போட்டி நடைபெறும். வெற்றி பெறுவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும். சான்றிதழை வழக்கமாக தாளில் அச்சிடுவோம். தோல் ஆராய்ச்சி நிறுவனமாக இருப்பதால் சான்றிதழை தோலில் அச்சிட்டு கொடுத்தால் என்ன என்று எண்ணினோம். அந்த எண்ணத்தின் விளைவு தான் எங்களுடையஇந்தக் கண்டுபிடிப்பு.

''தோலில் அச்சிட்ட எழுத்துக்கள் கைப்பட்டவுடன் அழியத் தொடங்கின். அப்படி அழியாமல் இருப்பதற்கு உரிய வழிமுறைகளைக் கண்டோம். ப்ரூப் மிஷினில், டிரெடில் யந்திரத்தில்கூட இப்படி அச்சிட முடியும் என்பதைக் கண்டுள்ளோம்.

தோல் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து மாதந்தோறும் தொழில் நுட்பச் செய்திகளைத் தாங்கி Leather Science என்ற பத்திரிகை வெளிவருகிறது. இப்பத்திரிகையின் அட்டை ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விலங்கின்தோல் போல அமைந்திட முயற்சி செய்தார்கள். அதற்கும் இந்தப் புதிய அச்சுமுறை ' Novotone பயன்பட்டது.

Novotone 'அச்சுமுறையைப் பற்றிய செய்தி Leather Science 1979 மார்ச்சு இதழில் முதன் முதலில் வெளியாகியுள்ளது. இப் புதிய முறைக்கான படங்களை தனியான காமிராவினால் எடுக்கிறார்கள். சாதாரண காமிராக்களையும் பயன்படுத்த முடியும். ஆனால், அதற்கு என்று சில அடிப்படையான முறைகளை மேற்கொள்ள வேண்டும். 'Novotone' அச்சு முறைக்கான முயற்சியை இதுவரை உலகில் யாரும்மேற்கொள்ளவில்லை. இம்முறை தோல் தொழில் வளர்சிக்கு அரிய சாதனமாக அமைந்துள்ளது.



எந்தத் தோலின் மீது வேண்டுமானாலும் நாம் விரும்பும் விலங்கின் தோல்போல அச்சிட்டுக் கொள்ள முடியும். சில விலங்குகள் தோலுக்காகவே வேட்டையாடப்படுகின்றன. இதனால் பல வகையான வனவிலங்குகள் அருகி வருகின்றன. நமது நாட்டில் வன்விலங்குகள் பாதுகாப்புச் சட்டம் உள்ளது. தோலுக்காக, எந்த வனவிலங்கின் தோல் தேவைப்படுகின்றதோ அதைக் கொன்று தோலை பதனிட முடியாது.

ஆகவே, தேவையான விலங்கின் தோல் வடிவத்தை இந்தப் புதிய அச்சுமுறையினால் எளிதில் பெறமுடிகிறது.

பழைய அச்சுமுறையில் பெற முடியாத நேர்த்தியை, இயற்கையான பழைய அச்சுமுறையில் பெறமுடியாத நேர்த்தியை, இயற்கையானப் பொலிவை இந்த அச்சுமுறை அளிக்கிறது.

ஹைட்ராலிக் அச்சு யந்திரத்தில் எம்பாஸிங் முறையில் அச்சிட பெரிய தோல்களையேபயன்படுத்த வேண்டியிருக்கும். சிறிய அளவு தேவை என்றாலும் பெரிய தோலையே பயன்படுத்தவேண்டியிருக்கும் ஆனால், இந்தப்புதிய அச்சு முறையினால் எந்த அளவு தேவையோ அந்த அளவுக்கு தோலில் அச்சிட்டுக் கொள்ள முடியும்.

மேற்கத்திய நாடுகளில் விதவிதமான தோல் ஆடைகளை விரும்புகிறார்கள் அந்த நாடுகள்விரும்பும் வகையில், தோல் ஆடைகளை தயாரித்து அனுப்ப இந்த அச்சுமுறை, பெரிதும் உதவும். அதுமட்டுமல்ல 'Novotone' தோல் அச்சுமுறையை பெரிய தொழிலாக நடத்த வேண்டும் என்பதில்லை. நமது ஊரகப் பகுதிகளில் கைத்தொழிலாகக் கூட நடத்தலாம்.



தோலில் அச்சிடும் இந்தத் தொழிலை நன்கு தெரிந்து கொள்ளமத்திய தோல்ஆராய்ச்சி நிறுவனத்தோடு தொடர்பு கொண்டால் செயல்முறைபயிற்சிகளை செய்து காட்டுவார்கள். அதிலிருந்து இந்தத் தொழிலை கற்றுக் கொள்ள முடியும்.

இந்தியாவிலிருந்து செய்யப்படும் தோல் ஏற்றுமதியில் 75 சதவீதம் தமிழ்நாட்டிலிருந்து தான் செய்யப்படுகிறது. இது மேலும் வளர புதிய முறையில் தோலில் அச்சிடும் முறை நமக்கு உதவும் என்பதில் ஐயமில்லை!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


இயற்கை அழகுக்கு
இணை இதுவே!

Licence No. TN/MS(C)/PP-23

